தமிழ்நெற் (உதயன்)
REGISTERED AS NEWSPAPER
# உதயன்
பக்கங்கள் - 24+16 விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111
சுடர் : 35 கதிர் : 336 ஐப்பசி 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 01 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



வவுனியா
**வழிபாட்டில் ஈடுபட்ட 15பேர் நேற்றுக் கைது**
(விரிவு : பக்கம் 6)

## கொரோனாவின் பாதிப்பு அதிகம்
# உயிரிழப்புக்களை தவிர்க்க முடியாது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கோரிக்கை

கொழும்பு, நவம்பர் 1
இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின் வீரியம் அதிகரித்திருப்பதால் உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியாது. நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 15

## வடக்கில் 1200 பேர் சுயதனிமைப்படுத்தலில்
யாழ்ப்பாணம், நவ. 1
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 956பேரும், முல்லைத்தீவில் 15பேரும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 229 பேரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என வடக்கு 15

## யாழை முடக்கும் திட்டம் இல்லை
*வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்*
யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாண நகரையோ யாழ்ப்பாண மாவட்டத்தையோ முடக்கும் திட்டம் எதுவும் இதுவரையில் 15



"நாடிக்கும், நெத்திக்கும் மாஸ்க் போடுறதையே இப்பிடி பாராட்டுகினம் எண்டால், தெற்கில இதை விட மோசமா சனங்கள் நடக்குதுகள் போல"

## தொற்றாளருடன் பயணித்தோரில் 6 பேரைத் தேடும் பொலிஸார்
*37 பேர் கண்டறிவு: மருத்துவர்கள், தாதியர்களும் அதில் உள்ளடக்கம்*
யாழ்ப்பாணம், நவ. 1
கொரோனாத் தொற்றாளர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த NCG பேருந்தில் அவர்களுடன் பயணித்த 43 பேரில் 37 பேர் நேற்று வரையில் கண்டறியப்பட்டுள்ளனர். 15

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுகிறார்கள்
## வடக்கு மக்களுக்கு நன்றி கூறுகிறார் சவேந்திர சில்வா
கிளிநொச்சி, நவ. 1
வடமாகாண மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் நாம் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவர்களை நிச்சயமாக நாம் பாராட்டுகிறோம். 15

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

## வடக்கில் தனிமைப்படுத்தலில் இருந்த 5 பேருக்கு கொரோனா
யாழ்ப்பாணம், நவ. 1
வடக்கு மாகாணத்தில் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அனைவ 15

## இலங்கையில் பரவும் வைரஸ் வீரியமானது
### ஜெயவர்த்தனபுர பல்கலை ஆய்வில் அதிர்ச்சித் தகவல்
கொழும்பு, நவ. 1
தற்போது பரவும் கொரோனா வைரஸ், முன்னர் பரவியதை விட வித்தியாசமான தெனவும், அதிவேகமாக பரவும் தன்மை 15

## கிறிஸ்தவ வழிபாடுகள் இடை நிறுத்தப்பட்டன
யாழ்ப்பாணம், நவ. 1
யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட கிறிஸ்தவ ஆலயங்களின் இன்றைய ஞாயிறு வழிபாடுகள் அனைத்தும் 04

## யாழ்ப்பாணத்தில் தொற்றாளர் நடமாடிய இடங்களுக்கு பூட்டு
யாழ்ப்பாணம், நவ. 1
கொழும்பில் இருந்து வந்த நல்லூரைச்சேர்ந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 15

வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு (புதிய வீடு)
84/14A, கறுவபுலம் வீதி, கொக்குவில் கிழக்கில் வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்குண்டு - மூன்று1/2பரப்பு
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
077 142 8914



## கொரோனா இறப்பு 20!
கொழும்பு, நவ. 1
கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார். அவருக்கு 15

**8 நாள்களில் 7 பேர் சாவு**

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

## கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சபைகளின் பாதீட்டை உறுப்பினர்கள் ஆதரிக்கவேண்டும்
யாழ்ப்பாணம், நவ. 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் 15

# தனிமைப்படுத்தலில் ராணுவ அடக்குமுறை

கொழும்பு, நவ. 1

**தனிமைப்படுத்தல் பொறிமுறை முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு இராணுவ அடக்குமுறை நிலவுகின்றது என்று முன்னாள் பிரதமர் அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மகளான வைத்தியர் துஷாரா விக்கிரமநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பிரிட்டனில் இருந்து கடந்த 16ஆம் திகதி இலங்கைக்கு வந்த அவர், நீர்கொழும்பில் உள்ள நட்சத்திர ஹொட்டலொன்றில் 14 நாள்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டார். சுயதனிமையில் இருந்த அவர் சமூக வலைத்தளத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நான் பிரிட்டனில் வைத்தியராக பணியாற்றுகின்றேன். கடந்த 16ஆம் திகதி நாட்டுக்கு வந்தேன். நீர்கொழும்பில் உள்ள நட்சத்திர ஹொட்டலொன்றில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டேன். 14 நாள்கள் நிறைவடைந்த நிலையில் என்னை நேற்று விடுவித்திருக்க வேண்டும். அவ்வாறு விடுவிக்காமல் பலவந்தமாக தடுத்து வைத்துள்ளனர்.

முதல் பி.சி.ஆர். பரிசோதனை விமான நிலையத்தில் வைத்தும் 10 நாள்களுக்குப் பின்னர் அதாவது கடந்த 26ஆம் திகதி ஹொட்டலில் வைத்தும் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. நேற்றுமுன்தினம் அந்த முடிவுகள் வெளியாகியிருக்கவேண்டும்.

இராணுவக் கோப்ரல் ஒருவர் என்னிடம் கதைத்தார், உங்களிடம் இருந்து பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் சரியாக பெறப்படவில்லை எனக் கூறினார். அப்படியானால் மீண்டும் சரியாக செய்வார்கள் என்றே நான் நினைத்தேன். ஆனால் தனியார் வைத்தியசாலை ஊடாக செய்து கொள்ளுங்கள், முடிவு வெளிவரும்வரை ஹொட்டலில் தங்கியிருங்கள் எனக் கூறினார். இதற்கு நான் உடன்படவில்லை.

நாங்கள் 16 மணிநேரம் வேலை செய்தே லண்டனில் உழைக்கின்றோம். இறப்பில் இருந்து பணம் பறிக்கவில்லை. அதுமட்டுமல்ல ஏற்கனவே பணம் செலுத்தியே தனிமைப்படுத்தலை முன்னெடுக்கின்றோம். பி.சி.ஆர். பரிசோதனைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் பிரத்தியேகமாக அதனை செய்ய முடியாது என பதிலளித்தேன். பின்னர் இராணுவ வைத்தியர் ஒருவர் கதைத்தார். 'நீங்கள் மட்டும்தான் இப்படி சொல்கின்றீர்கள், ஏனையோர் உடன்பட்டுள்ளனர். பிரத்தியேகமாகச் செய்யுங்கள். அதற்கு முன்னர் வெளியேற முற்பட்டால் கைதுசெய்வோம்.' என எனக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனைக்கான எமது மாதிரிகள் எம்.ஆர்.ஐக்குதான் அனுப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு அனுப்படவில்லை. பெயர்கள் உள்ளன, மாதிரிகள் இல்லை எம்.ஐ.ஆர்.ஐயில் கூறப்பட்டது. இது தொடர்பில் இராணுவத்திடம் வினவியபோது, மாதிரிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம் எனக் கூறினர். எனக்கு அச்சம் ஏற்பட்டது. யாரின் மாதிரிகள், யாருக்கு செல்லும் எனத் தெரியவில்லை. எனக்கு நோய்க்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. சில வேளை 'பொசிடிவ்' என காண்பிக்கப்பட்டால்என்னசெய்வது?. எனவே, மீண்டும் மாதிரிகள் பெறப்பட வேண்டும் என வலியுறுத்தினேன். 'பரிசோதனை செய்யப்படும், முடிவு வெளிவரும்வரை வெளியேறமுடியாது, அவ்வாறு வெளியேறினால் கைதுசெய்யப்படுவீர்கள்' என மிரட்டப்பட்டேன். இது இராணுவ அடக்குமுறையாகும். தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்தியர்கள் முதல் எல்லோரும் இராணுவத்தினர்தான். சிவில் நபர்களைக் காணமுடியாது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ன செய்கின்றது?. இராணுவ ஆட்சி இல்லை எனக் கூறப்படுகின்றது. அது அப்பட்டமான பொய்.

ஒரு நபரை எப்படி பலவந்தமாக வைத்திருக்கமுடியும்? அதுமட்டுமல்ல பிரத்தியேக தொலைபேசிகளில் இராணுவத்தினர் படமெடுக்கின்றனர். போராடியே அவற்றை அழிக்க வைத்தேன். எனக்கு நோய் அறிகுறிகள் எதுவும் இல்லை, ஹொட்டலுக்கு அருகில்தான் வீடும் உள்ளது. முதல் தொடர்பு நபரை வீட்டில் தனிமைப்படுத்தலாம் என்ற ஏற்பாடும் தற்போது உள்ளது. வீட்டுக்கு அனுப்பி பரிசோதனை செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் இங்கு பலவந்தமாக தடுத்துவைத்து, கைதுசெய்வதாக மிரட்டப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## கடற்றொழிலுக்கு சென்ற குடும்பத்தலைவர் இறப்பு



கிளிநொச்சி, நவ. 1

கிளிநொச்சி நாச்சிக்குடாவில் கடற்றொழிலுக்குச் சென்ற இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்தார். களங்கட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியதாலேயே அவர் இறந்தார் என்று சொல்லப்படுகின்றது.

குறித்த நபர் நீரில் மூழ்கிய நிலையில் சக மீனவர்களின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டு முழங்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டது. யோனகன் என்ற 25 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார். (ம-இ)

## தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உதவும்படி கோரிக்கை விடுப்பு!

கொடிகாமம், நவ. 1

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு உதவும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து கரவெட்டி வடக்கு (ஜே/364), கரவெட்டி மேற்கு (ஜே/363) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 98 குடும்பங்கள் முடக்கப்பட்டுள்ளன. இவர்களில் 53குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உரிய அடிப்படை உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் விவரங்கள் பதிவிடும் வரை அரச நிவாரணங்கள் கிடைக்கப்பெறாததால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-159)

## மேலும் இரண்டு அமைச்சர்கள்

கொழும்பு, நவ. 1

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சரொருவரும், இராஜாங்க அமைச்சரொருவரும் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள தேசிய வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள 30 அமைச்சர்களை நியமிக்கமுடியும் என்றபோதிலும் 27 பேருக்கே அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே மேலும் ஒருவர் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படவுள்ளார்.

இராஜாங்க அமைச்சு பதவியை வகிக்கும் மேல் மாகாணத்தில் உள்ள அரசியல் வாதிக்கே அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும், அவர் வகித்த இராஜாங்க அமைச்சு பதவி ஆளுங்கட்சி எம்.பி யொரு வருக்கு வழங்கப்படவுள்ளது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ம-44)




## பெங்களூரை வீழ்த்தியது ஹைதராபாத்

சார்ஜா, நவ. 1

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை பதற்றம் ஏதுமின்றி வீழ்த்தியது ஹைதராபாத்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக பிலிப்பி 32 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் 14.1 பந்துப் பரிமாற்றத்தில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் நான்காம் இடத்துக்கு முன்னேறியது ஹைதராபாத். .... (ம-இ)




## மும்பை மீண்டும் எழுச்சி வெற்றி!

டுபாய், நவ. 1

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி டெல்லியை வீழ்த்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி ஓர் இலக்கை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இசான் கிஷான் 72 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். (ம)

# கார்த்திகை மாத மர நடுகையும் தமிழ்த் தேசியச் செயற்பாடே

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1
மரங்களுடனான பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். இழந்துவிட்ட அந்தப் பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கும் ஓர் தமிழ்த் தேசியச் செயற்பாடே கார்த்திகை மாத மரநடுகை ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

அறிவியல் வளர்ச்சி மரங்களுடன் நாம் கொண்டிருந்த பண்பாட்டு உறவைப் புறமொதுக்கியுள்ளது. அறிவியல் எப்போதும் அபிவிருத்தியின் பக்கம் சார்ந்ததாகவே இயங்கும்.

அபிவிருத்தி தன் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும், அது மனிதர்களாக இருந்தாலும் அழிப்பதற்குத் தயங்காது. இதனாலேயே வீதி அகலிப்பின்போதும், தொலைத்தொடர்பு வழித்தடங்கள் மின்வழித்தடங்களை அமைக்கும் போதும் மாற்றுவழி பற்றிச் சிந்திக்காது மரங்களைக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாய்த்து வருகிறோம்.

மரநடுகையை மேற்கொள்வதற்குக் கார் என்ற மழையின் பெயரைத் தன் பெயராகக் கொண்ட கார்த்திகை மிகப் பொருத்தமான மாதம். அறிவியல் ரீதியான காரணத்துக்கும் அப்பால் ஈழத்தமிழர் வாழ்வியலில் கார்த்திகை பண்பாட்டு முக்கியத்துவம் பெற்ற ஓர் மாதமுமாகும். வீடுகளில் விளக்கேற்றி வழிபடும் தீபத்திருநாளையும், இறந்த மறவர்களின் நினைவுகளை நெஞ்சிருத்தி நெக்குருகும் நாள்களையும் இம்மாதம் தன்னகத்தே கொண்டுள்ளது. தேசியம் என்பது ஓர் இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, நம்பிக்கைகள் ஆகியன பின்னிப் பிணைந்த ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில் கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் -என்றுள்ளது. (ப)

### நடமாடும் விற்பனைக்குத் தடை

கிளிநொச்சி,நவ.1
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூர் மரக்கறி உற்பத்திகள் தவிர்ந்த ஏனையவற்றை நடமாடும் சேவையில் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனையில், மாவட்டத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சில நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடமாடும் வியாபாரம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.


வெளி மாவட்டங்களிலிருந்து, கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகைதரும் வியாபாரிகள் மூலம், கொரோனா பரவக்கூடிய ஏது நிலையிருப்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, உள்ளூர் உற்பத்தி தவிர்ந்த ஏனையவற்றைக் கொள்வனவு செய்வதையோ, அவர்களுடன் தொடர்பாடல் மேற்கொள்வதையோ தற்காலிகமாக நிறுத்துமாறு, கிளிநொச்சி மாவட்ட வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தி மரக்கறி தவிர்ந்த ஏனையவற்றை நடமாடும் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு உள்ளூர் வியாபாரிகள், பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-ரி)

### ஆயுர்வேதக் கற்கை நிலையம் பூரணமான பல்கலை

கம்பஹா, நவ.1
"கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கற்கை நிறுவனத்தை பூரணமான பல்கலைக்கழகம்" என்று அறிவிக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக மானிய ஆணை யத்துடன் கலந்தாலோசித்து கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார். (ஐ-இ)



# அரசுக்கு எதிராக விரைவில் தொழிற்சங்கப் போராட்டம்

## கொரோனா ஆபத்தை அரசு மறைக்கிறது என்றும் துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1

**அரசு, கொரோனாத் தொற்று தொடர்பில் பொய்யான புள்ளி விவரங்களை வெளியிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றது. எனவே, அரசுக்கு எதிராக இன்னும் சில நாள்களில் தொழிற்சங்கங்களை வீதியில் இறக்கிப் போராடவுள்ளேன் என்று துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாட்டின் தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டுவர பாடுபட்டமை தொடர்பாக வருத்தப்படுகின்றேன். முன்னைய அரசுக்கு எதிரான சக்திகளை அணிதிரட்ட முன்நின்று செயற்பட்ட பிக்கு என்ற வகையில் இந்த அரசுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தற்போது சமூகத்துக்குள் பரவியுள்ளது. இது ஆபத்தான நிலைமையை உருவாக்கவுள்ளது. அதன் ஆபத்தை இனிமேல் பொதுமக்கள்தான் உணர்ந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (கு-இ)

## பி.சி.ஆர். இயந்திரம் பழுது: வந்தடைந்தது சீனக்குழு

கொழும்பு, நவ.1

பழுதடைந்துள்ள பி.சி.ஆர்.இயந்திரம் ஒன்றைத் திருத்துவதற்கு சீனாவிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் குழுவொன்று நேற்றுமுன்தினம் இரவு இலங்கை வந்தடைந்துள்ளது. இதனை இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. இயந்திரம், பழுதடைந்தமைக்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பி.சி.ஆர்.இயந்திரங்கள் சில பழுதடைந்துள்ளமையினால் கொரோ னாப் பரிசோதனை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)




## தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கல்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் இல்லம் மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள், சுகாதாரப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மலையாளபுரத்தில் இயங்கும் சிறுவர் இல்ல இயக்குநரின் கோரிக்கைக்கு அமைவாக கிளிநொச்சி நகர ரோட்டறிக் கழகத்தினால் இவை வழங்கப்பட்டுள்ளன. பொருள்கள் அனைத்தும் சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டலுடன், உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட. சிறுவர் இல்லத்தில் பணிபுரிபவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட மலையாளபுரம், பாரதிபுரம், பரந்தன் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் விசுவமடு, தேராவில், கல்மடு ,கட்டைக்காடு, மற்றும் தருமபுரம் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் சிலவற்றுக்கும் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (வ-214)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

### கிறிஸ்தவ...

இடைநிறுத்தப்பட்டுள்ளார் என கிறிஸ்தவ சபைகளின் குரு முதல்வர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தமது சபைக்குட்பட்ட ஆலயங்களின் வழிபாடுகளை இடைநிறுத்தி சபை மக்களை வீடுகளில் தனித்திருந்து வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு ஜங்கிலிக்கன், மெதடிஸ்த மற்றும் இலங்கை அமெரிக்கன் சிலோன் திருச்சபை ஆகியவற்றின் குரு முதல்வர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த வாரத்தில் இருந்தே யாழ் மறைமாவட்டத்திற்குட்பட்ட அனைத்துக் கத்தோலிக்க பங்குகளிலும் மறு அறிவித்தல்வரை பொது வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ம)

## சுகாதாரப் பிரிவின் அறிவுரைப்படி திருமண நிகழ்வுகளை நடத்தலாம்!

### மேல் மாகாணத்திலேயே தடைநீடிக்கும் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, நவ. 1

மேல் மாகாணத்துக்கு அப்பாலுள்ள பகுதிகளில் திருமண வைபவ ஏற்பாடுகளை சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாக மேற்கொள்ள முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தந்தப் பிரதேச சுகாதார அதிகாரிகளால் இந்த வைபவங்களில் கலந்து கொள்வோர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

ஊரடங்கு நடைமுறையில் இல்லாத பிரதேசங்களில் திருமண வைபவங்களை நடத்துவதற்கு எந்தவித தடையும் விதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

## நாட்டில் இதுவரை 5 இலட்சம் பி.சி.ஆர்.



கொழும்பு, நவ.1

இலங்கையில் இதுவரை 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் தொற்று நோயியல் பணியகத்தினால் 10 ஆயிரத்து 173 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 736 ஆக உள்ளது. (வ-இ)

## குழுக்களிடையே மோதல் ஒருவர் பலி: ஐவர் காயம்

கொழும்பு,நவ.1

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட குழு மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் வீரகெட்டிய மொரயாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

சம்பவத்தில் 17 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05.10.1937 | | 31.10.2020 |



**திருமதி தவபாக்கியநாதன் பத்மதேவி**

கோலாலம்பூர் மலேசியாவை பிறப்பிடமாகவும் மூளாய் டச்சுறோட், தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தவபாக்கியநாதன் பத்மதேவி அவர்கள் நேற்று (31.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இலகுபிள்ளை திலகவதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தவபாக்கியநாதனின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், விஜயலட்சுமி, விக்னேஸ்வரன், சர்வேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், திலகவதியார் (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை), பத்மநாதன் (சங்கீத ஆசிரியர், கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்), பங்கையச்செல்வி (சங்கீத ஆசிரியை, வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன் குணரத்தினம், நந்தினி, முகுந்தன் ஆகியோரின் மாமியும், பசுந்தமிழன், இன்னிசைதமிழன், தர்சிகா, ஸ்ரீலவன், தரணிகா, மோகன்ராம், மோகனாங்கி, லம்போதரன், ரேவதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

தகவல் : பிள்ளைகள்,
077 597 1945

## அமெரிக்க – சீன பிரச்சினையில் இலங்கை தலையிடமாட்டாது

### சீனாவுக்கான இலங்கைத்தூதர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையில் நிலவும் பிரச்சினையில் தலையீடு செய்வது இலங்கையின் வேலை அல்ல என்று சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பாலித்த கொஹொண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது முக்கியம். இது குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு தெளிவான நோக்கம் உள்ளது. இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் சிறந்த உறவு உள்ளது. அந்த உறவை வலுப்படுத்துவதே எனது நோக்கம். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவான நோக்கம் உள்ளது.

தற்போது அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையில் பிரச்சினை உள்ளது. அதனை அந்த இரு நாடுகளும் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாட்டின் நலன், சுயாதீனத் தன்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது முக்கியமாகும். உலக வல்லரசு நாடுகளின் பிரச்சினைகளில் தலையிடுவது இலங்கையின் நோக்கம் அல்ல. – என்றார். (கு-இ)

# இம்முறை பல்கலைக்கு 41,500 மாணவர்கள்

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41,500 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை புதிதாக மேலும் 10,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் மருத்துவ பீடங்களுக்கு 371 மாணவர்களும், பொறியியல் பீடங்களுக்கு 405 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

# பொது இடங்களில் தொற்று நீக்கல்

நல்லூர்,நவ.1

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தைகள், சந்திகள், மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் என்பவற்றுக்குத் தொற்று நீக்கம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் ஒவ்வொரு வார இறுதியிலும் மேற்கொள்ளப்படும்.

அதனைவிட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கும் தொற்று நீக்கி மருந்துகள் விசிறப்படுகின்றன. (க-17)

# பரிசோதனைக்கு தனிமைப்படும் பொலிஸார் வெளியில் நடமாட்டம்

## வவுனியாவில் பொதுமக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, நவ. 1

**வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் சந்தேகத்தில் பரிசோதனைக்காக 5 நாள்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பொலிஸார் வெளியில் நடமாடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

வவுனியா மாவட்டதைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி விடுமுறைக்காலத்தில் வெளிமாவட்டங்களிலுள்ள தத்தம் வீடுகளுக்குச் சென்றிருந்தவர்கள் அங்குவந்து 5 நாள்களுக்கு தங்கியிருப்பர். பி.சி.ஆர்.பரிசோதனைகளின் பின்னர் தொற்று இல்லை என்றால் பொலிஸ் நிலையங்களில் கடமையில் இணைந்துகொள்வர்.

எனினும், சுமார் ஒரு வாரத்துக்கு முன்னரேயே பொலிஸாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.


தற்போது கடமையில் உள்ள பொலிஸார், தங்களுக்கு கொரோனா அறிகுறிகளுடன் உடல் நிலை சீரில்லையெனின், குறித்த விடுதியில் 5 நாள்களுக்கு தங்கவைக்கப்படுகின்றனர்.

5ஆம் நாள் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் கொரோனாத் தொற்று இல்லை என்றால் தொடர்ந்து பணியில் ஈடுபடுவர்.

இந்தநிலையில், 5 நாள்கள்வரை சந்தேகத்தில் அங்கு தங்கவைக்கப்படும் பொலிஸ் அலுவலர்களே வெளியில் நடமாடித் திரிகின்றனர். அது தங்களுக்கு அச்சமாக உள்ளது என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

குறித்த கலாசார மண்டபத்துக்கு முன்பாகவுள்ள பாடசாலையில் பரீட்சை நடைபெற்று வருகின்றது. மக்கள் செறிவுமிக்க அந்தப் பகுதியில் பாதுகாப்பு நடைமுறைகள் இன்றி பொலிஸார் நடமாடுகின்றனர் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளின் கருத்தைப் பெறமுடியவில்லை. (த-110,18)






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எண்சாண் உடம்புக்கு...

யாழ்ப்பாணம் கிட்டத்தட்ட முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எப்போதுவேண்டுமென்றாலும் 'யாழ்ப்பாணம் முடக்கப்பட்டது' என்ற அறிவிப்பு வரலாம் என்ற நிலைதான் தற்போதுள்ளது. கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புடைய கடைகள் என்று அடையாளம் காணப்பட்ட பல கடைகள் மூடப்பட்டுள்ளன. சுகாதார நெருக்கடி நிலை யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்குள் அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றாளர்களின் வழித்தடங்கள் யாழ்ப்பாண நகரப்பகுதிக்குள் பரிசீலிக்கப்படுகின்றன. இவையெல்லாவற்றையும் ஒருசேரச் சிந்தித்தால் ஒரு பொதுமுடக்கம் அல்லது பகுதியளவான முடக்கமேனும் நடைமுறைப்படுத்தப்படும் சாத்தியக்கூறு கண்ணெதிரே அப்பட்டமாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்குள் கொரோனா ஊடுருவினால் நிலைமை மிக மோசமடையும். ஏனைய பகுதிகள் முடக்கப்பட்டுள்ள போதிலும் ஏதோ இயங்குநிலை இருப்பதைப்போன்று யாழ்ப்பாணம் நகர்ப் பகுதி முடக்கப்பட்டாலும், ஏதோவொரு இயங்குநிலை இருக்கும் என்று எண்ணிவிட முடியாது. பாரதூரமான நிலைமைகளை இந்த முடக்கம் ஏற்படுத்தும். யாழ்ப்பாணம் நகரப்பகுதியென்பது கிட்டத்தட்ட வடமாகாணத்தின் தலைநகரைப் போன்றது. ஒவ்வொருநாளும் பல்லாயிரம் மக்கள் இந்த நகர்ப் பகுதியின் இயக்குநிலையில் தங்கியுள்ளனர். அதுமட்டுமல்ல அன்றாடம் பலகோடி ரூபா மதிப்பிலான பொருளாதாரச் சுற்றோட்டம் யாழ்ப்பாணம் நகரத்தை மையமாக வைத்துச் சுழன்றுகொண்டிருக்கின்றது. இவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணம் நகரப் பகுதி முடக்கப்பட்டால் அது மக்களின் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் பெரும்தாக்கத்தை உண்டுபண்ணும். கொரோனாப் பெருந்தொற்றால் இதுகாலும் அனுபவித்த நெருக்கடி நிலைமைகளை விட பல மடங்கு அதிகரித்த நெருக்கடியை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். ஆதலால் யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்குள் அவதானிக்கப்பட்டுள்ள கொரோனாத் தொடர்புகள் மட்டில் மக்கள் உச்சக்கட்ட எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியை அன்றாடம் பயன்படுத்திக்கொண்டிக்கும் பல்லாயிரம் மக்களையும் பாதுகாத்தல் சுகாதாரத் துறையினரால் முடியாத காரியம். ஆதலால், தத்தம் சுயபாதுகாப்புக்கு பொதுமக்களே பொறுப்பாளிகள். ஒரு கொத்தணியாக யாழ்ப்பாணம் நகரப் பகுதி மாறிவிடாமல் தடுப்பதில் மக்களுக்குத்தான் பெரும் பொறுப்பு உள்ளது. சமூக இடைவெளிகளை உச்சக்கட்டமாகக் கடைப்பிடியுங்கள். மாஸ்க் அணிவதைக் கட்டாயமாக்குங்கள். சம்பிரதாயத்துக்கும் சட்டச்சிக்கலைத் தவிர்க்கும் வகையிலும் மாஸ்க் அணிவதை கைவிட்டு இயதசுத்தியுடன் உங்களின் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மாஸ்க் அணியுங்கள். கடைகளுக்கு முன்னால் உள்ள தடைகள், கைபிடிகள் என்பவற்றைக் கண்டபடி தொடுவதையோ, கையாள்வதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள். மிகமுக்கியமாக தேவையற்ற தொடுகைகளைக் குறையுங்கள். வீடு திரும்பியதும் உங்களை நீங்களே சுத்தம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் அணிந்திருந்த ஆடைகளுடன் அப்படியே வீடுகளுக்குள் செல்லாதீர்கள். வாயில்களிலேயே அப்புறப்படுத்திவிட்டு உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடுத்த மணித்தியாலத்தை எதிர்கொள்ளுங்கள்.

ஒட்டுமொத்தத்தில் கொரோனா எனும் பெரும் அரக்கனுக்கு எதிரான சமரில் பங்காளியாக இருக்கும் நீங்கள், எப்போது வேண்டுமானாலும் அந்த அரக்கனின் தூதர்களாக, அதாவது கொரோனாக் காவிகளாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். எனவே நிலைமையின் தீவிரத்தை அறிந்தவர்களாக பொறுப்புணர்ந்து செயற்படுங்கள். தலைநகரின் இயங்குநிலையைத் தக்கவைக்க ஒத்துழையுங்கள்.

# கொரோனா கொத்தணி: ஆறு சாத்தியக்கூறுகள்!

### விசாரணைகள் நடக்கின்றன என்கிறார் இராணுவத் தளபதி

**கொழும்பு, நவ 1**

**மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனாக் கொத்தணித் தொற்றுக்கான மூலத்தைக் கண்டறியும் விசாரணைகளில் கிட்டத்தட்ட 80 வீதம் நிறைவடைந்துள்ளன. இது தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். புதிய கொத்தணித் தொற்றுக்குச் சாத்தியமான ஆறு காரணிகள் குறித்து ஆராயப்பட்டு வரு கின்றன. விசாரணை முடிந்ததும் இது குறித்த முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆறு சாத்தியக்கூறுகளில் வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களுடனான தொடர்பும் உள்ளடங்குகின்றது. வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்களின் தனிமைப்படுத்தல் செயன்முறை இராணுவத்தால் கையாளப்படுவதால் அதற்கான சாத்தியம் குறைவாகவும் இருக்கின்றது. புதிய கொத்தணிக்கான ஏனைய சாத்தியங்களாக ஹொட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்ட விமானிகள், மாத்தளை அல்லது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து விமான நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட விமான சேவை ஊழியர்கள், இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்த கப்பல் பணியாளர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து மஞ்சள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
மினுவாங்கொட கொத்தணிக்கான காரணிகளில் ஒன்றாக உக்ரேனிய விமானி ஒருவர் இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன.
துருக்கியில் இருந்து வந்த உக்ரேனிய விமானி சீதுவையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டார். இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த விமானி



ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நேரத்தில் ஹொட்டல் நிர்வாகம் உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறிவிட்டது. இவர் தனிமைப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் ஹொட்டல் ஊழியர்கள் பலர் வீட்டுக்குச் சென்று வந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த விமானியின் வருகைக்கு சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் எந்தவொரு தொற்று நோயாளரும் கண்டறியப்படாததால் மினுவாங்கொட கொத்தணியின் முக்கிய காரணியாக இது இருக்கக்கூடும் என வலுவான சந்தேகம் இருக்கின்றது. இதற்கிடையில், பேலியகொட கொத்தணித் தொற்றின் பின்னணியில் இந்தியர்களிடம் இருந்து மீனைப் பெற்று அதனை இலங்கை மீனவர்கள் நாட்டுக்குள் விற்பனை செய்ததும் காரணியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இத்தகைய அனைத்து சாத்தியங்களும் ஆராயப்பட்டு தெளிவான முடிவு எட்டப்படும்" என்றார். (எ-22)

## வவு. வைத்தியர்கள் பொலநறுவைக்கு!

கொழும்பு, நவ.1
வவுனியா வைத்தியசாலையில் கடமையில் உள்ள இரு வைத்தியர்களையும், 10 தாதியர்களையும் பொலநறுவை கொரோனா சிகிச்சை வைத்தியாலைக்கு கடமைக்குச் செல்லுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அங்கு 14 நாள்கள் கடமையாற்றுவார்கள் என்றும், அதன்பின்னர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் மீண்டும் வவுனியா வந்த பின்னர் பிறிதொரு குழுவினர் பொலநறுவை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்று கூறப்படுகின்றது. வவுனியா வைத்தியசாலையில் ஏற்கனவே வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், மருத்துவர்களும் தாதியர்களும் இவ்வாறு அழைக்கப்படுவதால் மேலும் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-18)

## வழிபாட்டில் ஈடுபட்ட 15 பேர் நேற்று கைது!

வவுனியா, நவ.1
வவுனியா, புளியங்குளத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உட்பட 15 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புளியங்குளம், பழையவாடி கிராமத்திலேயே நேற்று மதியம் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அங்குள்ள சிவநாகதம்பிரான் ஆலயத்தில் பௌர்ணமி தின சிறப்பு பூசைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பூசையில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவித்தே அங்கிருந்தவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்றும், பூசையில் கலந்துகொண்டவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை ஏடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-18)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்." -சீனப் பழமொழி

# SLIIT

*Discover Your Future*

நாளைய தினத்தில் நீங்கள்



# புதிய மாணவர்களுக்கான அனுமதி 2020 / 2021

UNDERGRADUATE DEGREE PROGRAMMES

COMPUTING | BUSINESS | ENGINEERING | EDUCATION | PSYCHOLOGY | NURSING | LAW | ARCHITECTURE | QUANTITY SURVEYING | HOSPITALITY & COOKERY

## SLIIT PROGRAMMES – UGC APPROVED

### 4 YEARS BSC (HONS) DEGREE IN INFORMATION TECHNOLOGY SPECIALISING IN

- Software Engineering
- Information Technology
- Computer Systems & Network Engineering
- Data Science
- Information Systems Engineering
- Cyber Security
- Interactive Media

**AUSTRALIAN DEGREE PROGRAMMES** – Curtin University

- Bachelor of Computing (Software Engineering)
- Bachelor of Information Technology
- Bachelor of Science (Computer Systems and Networking)

**ENTRY REQUIREMENTS FOR BSc (Hons) IT DEGREES**

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன்) ஒரே அமர்வில் மூன்று சித்திகள் (வேண்டியதொரு பிரிவில்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**ADMISSIONS TO COMPUTER SYSTEMS & NETWORK ENGINEERING**

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் ஒரே அமர்வில் பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம் உட்பட மூன்று சித்திகள் அல்லது லண்டன் க.பொ.த உயர்தரப்பீட்சையில் இதற்கு நிகரான சித்தி மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

### 4 YEARS BBA (HONS) DEGREE SPECIALISING IN

- Business Management
- Human Capital Management
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management
- Business Analytics
- Management Information Systems
- Quality Management

**BRITISH DEGREE PROGRAMMES** – Liverpool John Moores University

- Bachelor of Business Administration (Hons)

**WILLIAM ANGLISS INSTITUTE @SLIIT**

- Hospitality Management
- Commercial Cookery
- Event Management
- Patisserie

**ENTRY REQUIREMENTS FOR BBA (Hons) DEGREES**

பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன்) ஒரே அமர்வில் மூன்று சித்திகள் (வேண்டியதொரு பிரிவில்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

### 4 YEARS BSC ENGINEERING (HONS) DEGREE IN

- Civil Engineering
- Electrical & Electronic Engineering
- Materials Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

**AUSTRALIAN DEGREE PROGRAMMES** – Curtin University

- Bachelor of Engineering (Hons) in Civil & Construction Engineering
- Bachelor of Engineering (Hons) in Electrical & Electronic Engineering
- Bachelor of Engineering (Hons) in Mechanical Engineering

**BRITISH DEGREE PROGRAMMES** – Liverpool John Moores University

- Bachelor of Science (Hons) Quantity Surveying

**ENTRY REQUIREMENTS FOR BSc (Hons) ENGINEERING DEGREES**

பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் ஒரே அமர்வில் பௌதீகவியல், இராசயனவியல் மற்றும் இணைந்த கணிதம் உட்பட மூன்று பாடயங்களில் இரண்டு 'B' மற்றும் ஒரு 'C' சித்திகள் அல்லது லண்டன் க.பொ.த உயர்தரப்பரிட்சையில் இதற்கு நிகரான சித்தி மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

அல்லது

க.பொ.த உயர்தரப்பரிட்சை (கேம்பிரிஜ் அல்லது எடெக்ஸல்) கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் அடங்கும் வகையில் ஒரே அமர்வில் இரண்டு 'B' மற்றும் ஒரு 'C' சித்திகள் மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

### HUMANITIES AND SCIENCES

**BEd (Hons) DEGREE IN**

**Physical Sciences - (04 Years)**

நுழைவுத் தகைமைகள்

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை) கணிதப்பிரிவில் (இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் ) உள்ளடங்களாக பௌதீகவியல் உட்பட ஒரே அமர்வில் 3 சித்திகள் அல்லது க.பொ.த உயர்தரப்பரிட்சை (கேம்பிரிஜ் அல்லது எடெக்ஸசல்), பௌதீகம் உட்பட ஒரே அமர்வில் கணிதம் குறைந்தது மூன்று சித்திகள். மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**Biological Sciences - (04 Years)**

நுழைவுத் தகைமைகள்

க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன் அல்லது சமனான) ஒரே அமர்வில் விஞ்ஞான பிரிவில் மூன்று சித்திகள் (உயிரியல் மற்றும் இரசாயனவியல்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**English - (04 Years)**

நுழைவுத் தகைமைகள்

ஆங்கிலத்தை ஒரு பாடமாக கொண்டு க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன்)ஒரே அமர்வில் ஆங்கில மொழி மூலமான மூன்று சித்திகள் (வேண்டியதொரு பிரிவில்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**BSc (Hons) IN**

**Biotechnology**

நுழைவுத் தகைமைகள்

ஆங்கிலத்தை ஒரு பாடமாக கொண்டு க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன அல்லது சமனான) ஒரே அமர்வில் உயிரியில் மற்றும் இரசாயனவியல் உட்பட மூன்று சித்திகள் (விஞ்ஞான பிரிவில்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**HIGHER DIPLOMA IN NURSING**

**The pathway to BSc (Hons) Nursing (Interntional) via Higher Diploma in Nursing**

நுழைவுத் தகைமைகள்

ஆங்கிலத்தை ஒரு பாடமாக கொண்டு க.பொ.த உயர்தரப்பரிட்சையில் (இலங்கை / லண்டன அல்லது சமனான) ஒரே அமர்வில் உயிரியில் உட்பட மூன்று சித்திகள் (விஞ்ஞான பிரிவில்) மற்றும் SLIIT பொதுப்பரீட்சையில் சித்தி.

**BRITISH DEGREE PROGRAMMES** – Liverpool John Moores University

- BSc (Hons) Psychology
- LLB (Hons) Law

### 3 YEARS BSC (HONS) ARCHITECTURE DEGREE

- BSc (Hons) Architecture

**தயவு செய்து எமது மாணவர் சேர்ப்பு அணியை தொடர்பு கொள்ளுங்கள் 011 754 4801** உயர்தரப்பரிட்சை

*These degrees are offered by SLIIT as approved by the University Grants Commission and Ministry of Higher Education in Sri Lanka*

**SCHOLARSHIPS**

PERFORMANCE BASED SCHOLARSHIPS ARE OFFERED

**விண்ணப்பிப்பது எவ்வாறு**

- Option 1 – Visit: apply.sliit.lk – Register Online
- Option 2 – Download the Application from www.sliit.lk
- Option 3 – Obtain the Application from any of our Campuses or Centres.

Send the duly filled Application form to **Manager - Student Enrollment, SLIIT Malabe Campus, New Kandy Road, Malabe.**

SLIIT VIRTUAL OPEN DAY 2020

**நினைவுபடுத்தும் திகதிகள்**

VIRTUAL OPEN DAY: **15 Nov 2020**

APPLICATION CLOSING DATE: **27 Nov 2020**

**பொதுப்பரீட்சை**

**6 December 2020 (10.00am - 11.00am)**

**மொழி மூலம்** ஆங்கிலம், சிங்களம், தமிழ்

**☎ 011 754 4801, 011 754 4802**

SLIIT *Discover Your Future*

MEMBER
*Association of Commonwealth Universities*
*International Association of Universities*



# இன்றைய நாள்

**மேடம்**: அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பயம் நீங்கும். அரசியல்வாதியால் ஏற்பட்ட தொல்லை தீரும். லாபம் வரும். சமீபத்தில் சந்தித்த பழைய நட்பால் நன்மை ஏற்படும்.

**இடபம்**:அலைச்சல் அதிகரிக்கும். கவனத்துடன் செயல்படுங்கள்.நெருங்கிய உறவினர் பற்றிய சிறு மனக் குழப்பம் ஏற்படும். போன் மூலம் தகவல் ஒன்று வரும். புகழ் கூடும்.

**மிதுனம்**: குடும்பத்தினர் நலனில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். தேவைகள் பற்றிய கவலை தீரும். குழப்பம் ஏற்படும்.காதலில் முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி நிலவும்.

**கடகம்**: விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரும் நாள்.வீடு மாற்றம் உறுதியாகலாம். சகோதர வழிப் பிரச்சினை தீரும்.சாட்சிக் கையெ முத்தால் ஏற்பட்ட தொல்லை முடிவுக்கு வரும்.

**சிம்மம்**: தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.நல்லவர்கள் உதவியால் பல நாள் இருந்து வந்த பிரச்சினை தீரும்.பரபரப்பாகச் செயல்படுவீர்கள். நல்ல செய்தி வரும்.

**கன்னி**: யாரைப் பற்றியும் குறைகூறி வம்பில் மாட்டாதீர்கள்.எப்போதோ செய்த தவறு இன்று சிரமத்தைத் தரலாம்.குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்காக சுபச்செலவு ஏற்படலாம்.

**துலாம்**: சமூகத்தில் மதிப்புக் கூடும்படியான செயல்கள் செய்வீர்கள்.சகோதர, சகோதரியின் ஆதரவு கிடைக்கும். பண வரவு உண்டு.உறவினரின் செயற்பாடுகள் திருப்தி தரும்.

**விருச்சிகம்**: வேண்டாதவர்களின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். கடல் தாண்டி வரும் தகவல் சந்தோஷம் தருவதாக அமையும்.பணி சிறக்கும்.

**தனுசு**: கவலை நீங்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். உங்கள் மீது உயர்ந்தோர் வைத்த மதிப்பும், மரியாதையும் உயரும்.புதிய நண்பர்கள் இணைவர்.

**மகரம்**: தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பணம் வரும்.கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள வேண்டி வரும்.நண்பர்களுக்காகச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்**: முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.புதிய பொருள் சேர்க்கை உண்டு. உறவினர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மீனம்**: வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. மகிழ்ச்சி கூடும்.வேலையாள்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.குதூகலம் நிறைந்த நாள். எதிர்பாராத வீண் செலவுகள் உண்டு.

# தாமதம் ஏற்பட்டால் 1999க்கு அழையுங்கள்

கொழும்பு, நவ.1



**கொரோனாத் தொற்றாளர்களை, மருத்துவமனைகளுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், சுகாதார மேம்பாட்டு பணியகத்தை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்படி, சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் 1999 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு, இது தொடர்பில் அறிவிக்க முடியும். இந்த சேவை மூன்று மொழிகளிலும் 24 மணித்தியாலமும் செயற்பாட்டில் இருக்கும். கொரோனாத் தொற்றாளர்களை, மிக விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் என்ற போதிலும், தற்போது அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் தாமதம் ஏற்படுகின்றது. அத்துடன், இந்த நடவடிக்கைகளில், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் குறைபாடுகள் இருக்குமெனில், அது தொடர்பில் கண்டறியப்படும்.

தொற்றாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படும் வரை, வீட்டிலுள்ளவர்கள் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (வ-இ)

# நிவாரணப் பொதி வழங்கல் ஆரம்பம்

கொழும்பு,நவ.1

கொரோனாத் தொற்று பரம்பலையடுத்து, கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்காக உலர் உணவு நிவாரணப் பொதி வழங்கும் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொதியும் பத்தாயிரம் ரூபா பெறுமதியானவை. இவற்றில் 14 நாள்களுக்குத் தேவையான உலர் உணவும், பழ வகைகளும் உள்ளடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 68 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

நிவாரணப் பொதிகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, முடக்க நிலை காரணமாக ஒரு மாத காலத்துக்கு மேலாக வாழ்வாதாரங்களை இழந்த குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டமும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# புதிய சீனத் தூதுவர் இலங்கை வந்தார்

கொழும்பு, நவ.1

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் புதிய தூதுவர் சென் ஹொங் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்தார். இவர், பி.சி.ஆர். பரிசோதனையை நிறைவு செய்து சீன ஈஸ்டேர்ன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. புதிய தூதுவர், அடுத்து வரும் இரு வாரங்களுக்கு சுய தனிமைப்படுத்தலில் தன்னை ஈடுபடுத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, விமான நிலையத்தில் வைத்து வைபவரீதியான வரவேற்பை இலங்கையின் தற்போதைய நிலைமை கருதி தூதுவர் மறுத்துவிட்டார் எனவும் சொற்ப அளவிலான சீனத் தூதரக இராஜதந்திர சேவையில் உள்ளவர்களே அவரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்றனர் எனவும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

புதிய தூதுவர் சென்ஹொங், 1988 ஆம் ஆண்டு முதல் சீன இராஜதந்திர சேவையில் செயற்பட்டு வந்தார். சீன சர்வதேச கற்கைகள் நிறுவனத்தின் தலைவரான இவர், பொருளாதார நிபுணருமாவார்.

இவர் பீஜிங்கில் உள்ள இராஜதந்திர சேவைகளுக்கான பணியகத்தில் செயற்பாட்டு பிரதிப் பணிப்பாளரா கச் செயற்பட்டுள்ளதோடு, சீன பிரிட்டிஷ் கூட்டுக் குழுமத்தின் இரண்டாம் நிலை செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். (ற)



# கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி,நவ.1

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் கைக்குண்டு மீட்கப்பட்டது. மக்களால் கிராம சேவையாளருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, கைக்குண்டு மீட்கப்பட்டது. தருமபுரம் பொலிஸாரால் நீதிமன்ற அனுமதியுடன், நேற்று மீட்கப்பட்ட குண்டு, சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. (க-113)

# மேல் மாகாணத்தில் ஊரடங்கை மீறி வெளியேறியோர் விரைவில் கைது?

கொழும்பு, நவ.1

ஊரடங்கு உத்தரவை மீறி மேல் மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் சென்றவர்கள் மீது 14 நாள்களின் பின் வழக்குத் தொடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மேல் மாகாணத்தில் இருந்தும் குளியாப்பிட்டியில் 5 பொலிஸ் பிரிவுகளில் இருந்தும் கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் வெளியிடங்களுக்குச் சென்றவர்கள், 14 நாள்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்படுவார்கள். சிலவேளை அவர்கள் ஹொட்டல்களில் தங்கியிருக்கக் கூடும். சிலர் வீடுகளில் இருக்கலாம். அவ்வாறு இருப்பவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே 14 நாள்கள் இருக்கவேண்டும்.

பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் சிக்காமல் மேல் மாகாணத்துக்கு வருபவர்கள் திங்கட்கிழமை பிடிபடுவார்கள். மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் பகுதிகளில் தீவிர சோதனைகள் இடம்பெறும். இதனை தண்டனையாகக் கருதவேண்டாம். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாகும். அதேபோல் தகவல்களை மறைப்பதும் குற்றமாகும். எனவே, ஹொட்டல்களில் இருந்தவர்கள், வீடுகளுக்கு சென்றவர்கள் உரிய தகவல்களை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கிய பின்னர் 14 நாள்களுக்குப் பிறகு வழக்குத் தொடரப்படும். சிலர் 'முன்கூட்டியே பாய்ந்துவிட்டோம்' எனக்கூறி சமூகவலைத்தளங்களில் படங்களை பதிவிட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (வ-44)

# சு.க., முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவினால்தான் 20 'பாஸ்'

## மார்தட்டுகின்றார் துமிந்த திசாநாயக்க

கொழும்பு, நவ. 1
சுதந்திரக் கட்சி மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல், நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு பெற்றிருக்காது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு சுதந்திரக் கட்சியின் ஆதரவு முக்கியமானதொன்று என்றும் கூறினார்.

நாட்டின் எதிர்காலத்தை மனதில் வைத்து இதுபோன்ற முடிவுகள் எட்டப்படுகின்றன. கட்சியின் இந்த முடிவு அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-இ)

## எவருக்கும் தொற்றில்லை

கிளிநொச்சி,நவ.1
கிளிநொச்சி பொதுச்சந்தை மீன் வியாபாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பேலியகொட மீன் சந்தைக்கு வியாபார நோக்கத்துக்காகச் சென்று வந்த பலருக்கு, தொற்று ஏற்பட்டதை அடுத்து, கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் முன்னாயத்த நடவடிக்கையாக மீன் வியாபாரிகள் 65 பேருக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களின் பரிசோதனை அறிக்கை நேற்றுக் கிடைக்கப்பெற்றது. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(க-இ)

## மனைவியைத் தாக்கியவர் மனநல மருத்துவமனைக்கு

கொடிகாமம், நவ. 1
மிருசுவில் பகுதியில் மனைவியையும் பிள்ளையையும் அடித்துக் காயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அவர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் என்று கூறப்பட்டதால் சிறைச்சாலை அலுவலர் ஊடாக மனநல மருத்துவமனையில் சேர்க்குமாறு நீதிமன்று கட்டளையிட்டது.

இதேபோன்று, மனைவியையும் பிள்ளையையும் அடித்துத் துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் சாவகச்சேரி நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-159)






# வயது முதிர்ந்தவர்களுடன் நெருங்குவதைத் தவிருங்கள்

## விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேகர வலியுறுத்து

கொழும்பு, நவ.1
வீடுகளில் வயது முதிர்ந்தவர்கள், இருதய நோய் மற்றும் ஏனைய நோய் நிலைமைகளைக் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் இருப்பின் அவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர்கள் மரணிப்பதற்கான வாய்ப்பு உயர்வாகக் காணப்படுகின்றது. ஆகவே வீடுகளில் இவ்வாறானவர்கள் இருப்பின் அவர்களுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். என்று அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் முன்னரை விடவும் மிக வேகமாகப் பரவிவருகின்றது. கொவிட் 19 வைரஸின் கட்டமைப்பு மற்றும் அதன் தன்மையில் ஏற்பட்டிருக்கும் மாற்றமே இதற்குக் காரணம். தனிமைப்படுத்தல் சட்டத்தை முறையாக நடைமுறைப் படுத்த வேண்டியதும் அதனைப் பொதுமக்கள் சரிவரப் பின்பற்ற வேண்டியதும் அவசியமாகின்றது. கொழும்பில் தொழில்புரிபவர்கள் பொலிஸ் ஊரடங்கின்போது தமது சொந்த ஊர்களுக்குத் திரும்புவார்களாயின், அவர்களிடமிருந்து அவர்களின் வீடுகளிலுள்ள வயது முதிர்ந்தவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே அனைவரும் தற்போது தங்கியிருக்கும் இடங்களிலேயே தொடர்ந்தும் இருக்கவேண்டும். அத்தோடு உச்சபட்ச அவதானத்துடன் செயற்படுவதன் ஊடாக கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை சுகாதாரப் பிரிவினருக்கு வழங்குங்கள்- என்றார். (ப-இ)

# பொம்பியோவை பிரதமரே சந்திக்கவில்லையாம்

கொழும்பு, நவ.1
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அமெரிக்க இராஜாங்கச் செயலர் பொம்பியோவைச் சந்திக்கவில்லை என்று பிரதமர் அலுவலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் அனுராதா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ பிரதமரைச் சந்திக்காது திரும்பியிருந்தார். இது குறித்து அரசியல் அவதானிகள் பல கருத்துக்களை முன்வைத்திருந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே பொம்பியோவைச் சந்திக்கவில்லை என்று பிரதமர் அலுவலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் அனுராதா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்திக்காமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. உண்மையில் ஆரம்பத்திலேயே பிரதமர், மைக் பொம்பியோவைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கவில்லை. பொம்பியோவின் மிகக்குறுகியகாலப் பயணத்தின் போது இலங்கை அரசாங்கத்தின் தலைமைகளில் ஒருவரை மாத்திரம் சந்திப்பது போதுமானதாகக் கருதப்பட்டது- என்றுள்ளது. (ப)

# வடக்கில் கண்ணிவெடி அகற்ற 636,363 அமெரிக்க டொலர் நிதி

## ஜப்பான் அரசு உதவி

கொழும்பு, நவ.1
**ஜப்பான் அரசாங்கம், வட இலங்கையில் மனிதாபிமானமிக்க நடவடிக்கைகளுக்கு ஹலோ ட்ரெஸ்ட் அறக்கட்டளைக்கு மொத்தம் 6 லட்சத்து 36ஆயிரத்து 363 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.**

இது தொடர்பான உடன்படிக்கையில் நேற்று முன்தினம் இலங்கைக்கான ஜப்பானின் தூதர் சுகியாமா அகிரா மற்றும் ஹலோ ட்ரெஸ்ட் அறக்கட்டளையின் திட்ட மேலாளர் பெலோண்டா வோஸ் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

கண்ணிவெடி புதைக்கப்பட்ட பகுதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தவும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் சுமார் 5000 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் இந்த நிதியுதவி பங்களிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் முதன்மை நன்கொடையாளராகச் செயற்பட்டு வருகிறது.

கடந்த 17 ஆண்டுகளில், ஹலோ ட்ரெஸ்டுக்கு ஜப்பானிய நிதியுதவியினால் மட்டும் 9.12 சதுர கிலோமீட்டர் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் 94,000க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் ஏனைய வெடிக்கும் எச்சங்களும் அகற்றப்பட்டுள்ளன" என்று ஜப்பானின் நிதியுதவி குறித்து ஹலோ ட்ரெஸ்ட்டின் மேலாளர் பெலோண்டா வோஸ் கருத்து வெளியிட்டுள்ளார். (ப)

# அரசியல் பழிவாங்கல்கள்: சாட்சிப் பதிவுகள் நிறைவு

கொழும்பு, நவ.1
அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சிப் பதிவுகள் நிறைவடைந்துள்ளன.

இதற்கு அமைய அந்த ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சிப் பதிவுகள் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகியது. அந்த ஆணைக்குழுவின் ஆட்சிக்காலம் எதிர்வரும் 9 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது. இந்த நிலையில், நவம்பர் மாதம் 9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆயிரத்து 842 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன அவற்றினுள், 112 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. (ப)

# சுகாதார விதிமுறைகளை மீறினால் திருநெல்வேலிச் சந்தை மூடப்படும்




நல்லூர், நவ.1
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட திருநெல்வேலி மற்றும் கொக்குவில் சந்தை வியாபாரிகள் உரிய சுகாதார வசதிகளை பின்பற்ற வேண்டும். தவறின் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, சந்தை முழுமையாக பூட்டப்படும் என்று சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

தற்போது கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அதனால் வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்றிச் செயற்பட வேண்டும். முகக்கவசம் அணிய வேண்டும். தனிநபர் இடைவெளியைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும். அத்துடன் அடிக்கடி கை கழுவதும் கட்டாயமாகும்.

சந்தை வியாபாரிகள் சபையால் அறிவிக்கப்பட்ட சுகாதார விதிகளைப் பின்பற்றிச் செயற்படவில்லை என்று முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே வியாபாரிகள் ஒத்துழைப்பு தராவிட்டால் சந்தையை முழுமையாக மூட வேண்டிய நிலை ஏற்படும்.

அதேவேளை சந்தைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வருகைதரும் நுகர்வோரும், சந்தைகளில் தனிநபர் இடைவெளியைப் பின்பற்ற வேண்டும். தேவையற்ற விதத்தில் சந்தையில் நிற்பதையும் தவிர்க்க வேண்டும் என்று பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி மேலும் தெரிவித்தார். (க-17)

# 18 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, நவ.1
கொரோனாத் தொற்றின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 18 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர். கட்டார் நாட்டிலிருந்து 12 பேரும், அபுதாபியிலிருந்து 6 பேரும் நாடுதிரும்பியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அந்த முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் கொரோனா நிலைமை காரணமாக இலங்கையர்களைத் திருப்பி அனுப்புவதை தற்காலிகமாகத் தாமதப்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அண்மையில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ப)

# ‘20’ திருத்த அதிகாரங்கள் எவரையும் அடிமையாக்கலாம்

## ஜனாதிபதி அதற்கு இரையாகாதவாறு செயலாற்ற வேண்டும் என்கிறார் முன்னாள் சபாநாயகர் கரு

கொழும்பு, நவ.1

**அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் ஊடாகத் தற்போது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் மட்டுமீறிய அதிகாரங்கள், அதற்கு உரித்துடையவரை அடிமைப்படுத்தக் கூடியவையாகும். எனவே ஜனாதிபதி அதற்கு இரையாகாதவாறு அவதானத்துடன் செயலாற்ற வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்துக்கு அனுமதியளித்து சபாநாயகர் கையெழுத்திட்டவுடன் உலகிலேயே தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்ட உயர் அதிகாரங்களைக்கொண்ட ஜனாதிபதியொருவரை இலங்கை கொண்டிருக்கும். இவ்வாறான மட்டற்ற உயர் அதிகாரங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படாது என்று நம்புவதாக ஏற்கனவே தனது டுவிட்டர் பதிவொன்றில் கரு ஜயசூரிய குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மற்றுமொரு டுவிட்டர் பதிவின் ஊடாக அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது: தற்போது ஜனாதிபதி, அவர் எப்போதும் விரும்பியது போன்று மட்டுமீறிய அதிகாரங்களை அனுபவிக்கின்றார். அவர் ஏற்கனவே வாக்குறுதியளித்தது போன்று மக்கள் மத்தியில் சுபீட்சத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவார் என்று நாம் நம்புகின்றோம். எனினும் இவ்வாறான மட்டுமீறிய அதிகாரங்கள், அதற்கு உரித்துடையவரை அடிமைப்படுத்தக் கூடியவையாகும். எனவே அதற்கு இரையாகாதவாறு ஜனாதிபதி கவனமாகச் செயலாற்ற வேண்டும் - என்றுள்ளது. (ப-இ)

### தனிமையில் உள்ளோருக்கு சுதேச வைத்திய சிகிச்சை

கண்டி, நவ.1

கொவிட் வைரஸ் தொற்று அனர்த்தத்துக்கு மத்தியில் தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுக்காக சுதேச மருந்து வகைகளைப் பயன்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுதேச வைத்தியத்துறை இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய உள்நாட்டு மருத்துவ முறையின் மூலம் கொரோனாத் தொற்று நோயாளிக்கான சிகிச்சையின் மூலம் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பது நாளாந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுதேச வைத்திய முறையைப் பயன்படுத்துவதில் சிலர் பெருமளவு விருப்பம் கொள்ளவில்லை என்று தெரிவிப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

### ‘சுகாதாரப் பரிசோதகர்’களாக கொள்ளையர்கள் நடமாட்டம்

#### அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை

கொவிட்-19 கொரோனாத் தொற்றுத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனக் கூறிக்கொண்டு சீருடையில்லாமல் வருகை தருபவர்கள் உண்மையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தானா என்பதை உறுதிசெய்துகொள்வதற்கான உரிமை பொதுமக்களுக்குள்ளது என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் அறிவித்துள்ளது.

மஹாவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு கடந்த வியாழக்கிழமை சென்ற கொள்ளையர்கள் வீட்டில் இருப்பவர்களுக்குத் தாம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என்றும், பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வந்துள்ளனர் என்றும் தெரிவித்து உள்ளே நுழைந்து கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குச் சுகாதார அதிகாரிகள் வருவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிக்கப்படும். பொதுமக்கள் குறித்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்வாறான நெருக்கடி நிலைமையையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மோசடிக்காரர்கள் சமூகத்தில் இருக்கின்றமையால் மக்கள் இது போன்ற நபர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ப-இ)

### ரஜமஹா விகாரையில் தொல்பொருள்கள் மீட்பு

அம்பாறை, நவ. 1

அம்பாறை திகவாபி ரஜமஹாவிகாரையில்பண்டைய காலத் தொல்பொருள்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போதே அந்தப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஓர் உலோகக் கொள்கலனில் கூழாங்கற்கள் போன்ற கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும், அவை தொடர்பிலான மேலதிக ஆராய்ச்சிகளைத் தாங்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்கள் எனவும் தொல்பொருள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் தொல்பொருள்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)


### கட்டின அங்கிகளுக்கு ஜனாதிபதியால் நூல்

அரச கட்டினப் பெருவிழாவுக்கு பண்டைய பாரம்பரியங்களுக்கு ஏற்ப கட்டின அங்கிகளைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் நூல் வழங்கப்பட்டுள்ளது.

அரச கட்டினப் பெருவிழா நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோமாவதீ புனித பூமியில் நடத்துவதற்கு பற்றிக், கைத்தறி துணிகள், உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது பராக்கிரம மன்னரின் காலத்துக்குப் பின்னர் அரச அனுசரணையில் கட்டினப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

பருத்தி பயிரிட்டு, நூல் நூற்று அந்த நூலினால் நெய்யப்படும் பருத்தித்துணியைப் பயன்படுத்தி கட்டின அங்கியைத் தைத்து, காணிக்கை செலுத்துவது பண்டைய அரச காலத்தில் இடம்பெற்ற ஒரு பாரம்பரியமாகும். அந்தப் பாரம்பரியத்திற்கு ஏற்ப கட்டின அங்கியைத் தயாரிப்பதற்குத் தேவையான நூல் நேற்று முன்தினம் ஜனாதிபதி இல்லத்தில் வைத்து அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் கையளிக்கப்பட்டது. (ப)




### எஹெலியகொடவில் 8 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.1

எஹெலியகொட மருத்துவப் பிரிவில் நேற்று எட்டு புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் பேலியகொட மீன் சந்தை மற்றும் கொழும்பு துறைமுகக் கப்பல்களில் உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில் சிறிசமன்புர பகுதியில் வசிக்கும் மீன் பிடிப்பவரின் மனைவியும், அவரது 11 மாதக் குழந்தை மற்றும் அவரது சகோதரரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து அவர்களது நண்பர்கள் சுமார் 200 பேர் வீட்டிலேயே சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ப-இ)



### இளம் பெண் திடீர் சாவு

கொழும்பு, நவ.1

பன்னல பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த இளம் பெண் ஒருவர் நேற்று திடீரென உயிரிழந்துள்ளார்.

திடீர் நோய்வாய்ப்பட்ட அவர் தம்பதெனிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிரியுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பலகொல்ல நாரங்கொடவில் வசிக்கும் மதுவந்தி (வயது 25) எனத் தெரியவந்துள்ளது. குறித்த பெண் வீட்டில் இருந்தபோது திடீரென வயிற்று வலி ஏற்பட்டு நெஞ்சுவலி இருந்ததால் அவரது குடும்பத்தினர் தம்பதெனிய மருத்துவமனையில் அவரை அனுமதித்துள்ளனர். எனினும் அவர் உயிரிழந்துள்ளார். அவரின் குருதி மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக குளியாபிட்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

அவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்பது பரிசோதனை முடிவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ப-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 12 . 1988



மறைவு
13 . 11 . 2019

## சண்முகானந்தன் நிஜாந்தன்

எங்கள் குலவிளக்காய் உதித்த நீ
எங்களைப் பாதியிலே விட்டுப் போவதற்கா?
என் கருவில் பத்துமாதம் இருந்தாய் நீ.....
எமைப்பிரிந்து நீ சென்று ஓராண்டு ஆனாலும்
என்றும் நீ எங்கள் நெஞ்சில் வாழ்ந்திடுவாய்!

இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

56/2, **பழம் வீதி,**
**கந்தர்மடம்.**

**குடும்பத்தினர்**
**077 511 0741**

---

## வேலையாள்கள் தேவை

**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வியாபார நிலையத்திற்கு** வேலையாள்கள் தேவை. **ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 419 5015**

## வீடு வாடகைக்குண்டு

யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில் வண்ணார்பண்ணையில் B,A தம்பிலேனில் 27 நம்பரில் உள்ள நான்கு அறை உள்ள வீடுவாடகைக்குண்டு.

**021 222 1781**

## விற்பனையாளர் தேவை

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா** ஆகிய இடங்களில்
Paint , Tinner,
நிலத்துக்கு அடிக்கும் காவி என்பன **விநியோகம்** செய்யக்கூடியவர் தேவை.

**077 789 0398**

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் நவாலி **சென் பீற்றேஸ்** Church அருகில் 3 1/2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.


**076 872 2266, 077 740 9523**

---

# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் நேசராஜா

(உரிமையாளர் - புனிதா நகை மாளிகை,யாழ்ப்பாணம் ).



யாழ்ப்பாணம் சித்தங்கேணி சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தையும், கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் நேசராஜா, வியாழக்கிழமை 29.10.2020 அன்று காலமானார்.

அன்னார் சித்தங்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - செல்வரஞ்சிதம் தம்பதிகளின் மகனும், காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கௌரிநாயகியின் அன்புக் கணவரும், சண்ஜீவின் அருமைத்தகப்பனாரும், கவிதாவின் அன்பு மாமனாரும், திரிஷண், விதுஷி, நிதிஷண் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, கலாவதி மற்றும் இந்திராவதி, ரஞ்சினி, ரவீந்திரி காலஞ்சென்ற வனிதா, சிவசீலன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான பரமானந்தன், சின்னப்பு மற்றும் இராமநாதன், குகதாசன், தேவராஜா, காலஞ்சென்ற சிவசுதன் மற்றும் மதிவதனி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடராசா, பரமசிவம்பிள்ளை மற்றும் கோமளம், காலஞ்சென்ற கனகராசா ஆகியோரின் மைத்துனரும், காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த யோகநாதன், கிருபா தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.


அன்னாரின் ஈமைக்கிரியைகள் 29.10.2020 அன்று கொழும்பில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: நே. சண்ஜீவ்**
**(மகன் - 077 711 0281)**

---

# மரண அறிவித்தல்

தோற்றம்
. 01 . 03 . 1939



மறைவு
. 31 . 10 . 2020

## முத்துவேலு தங்கராசா

யாழ்ப்பாணம் மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புகழேந்திநகர் நமனங்குளம் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு தங்கராசா அவர்கள் நேற்று (31.10.2020) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு- கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்- பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவராசா, தயாபரன் மற்றும் விமலராசா (மலேரியா தடுப்பு இயக்கம்-மாங்குளம்), யோகேஸ்வரன் (பவன், உரிமையாளர், டிப்ரொப் புடைவையகம்-யாழ்ப்பாணம்), வதனி, தனரூபன் (தேநீரகம்- யோகபுரம் மத்தி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன் மகாலிங்கம், இராசலிங்கம் மற்றும் சிவராசா, செல்வராசா காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவரஞ்சினி (வைத்தியசாலை-மாங்குளம்), ஆனந்தராசா, ரோகினி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமகள், சுபிஷன், ஹருணிகா, மிதுன், டிஷான், யதுர்ஷா, கனிமதி, சி.சுமத்திரன், துஷாந்தினி, சோபிதன் ஆகியோரின் அன்பு பேரனும், சிவபாக்கியம், செல்வரத்தினம், இராசலிங்கம், குணபாலசிங்கம், அருமைநாயகம், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் அன்னிச்சம்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**
077 3277 899, 077 2323 694

**புகழேந்திநகர்,**
**மல்லாவி.**

---

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 05 . 1950



மறைவு
30 . 10 . 2020

## சின்னப்பு தர்மகுலசிங்கம்

யாழ். சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு தர்மகுலசிங்கம் நேற்றுமுன்தினம் 30.10.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி சின்னப்பு தம்பதிகளின் அன்பு மகனும், திரு.திருமதி இளையதம்பி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், நடராஜமூர்த்தி(ஜேர்மனி), சியாமளா(கனடா), வதனா(இலங்கை), வனிதா(கனடா), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வர்ணகுலசிங்கம், வேலாயுதபிள்ளை (பாலு), காலஞ்சென்றவர்களான மனோகரன், சிவசோதி மற்றும் சௌந்தரராணி (கனடா), சரவணபவன் (இலங்கை), ஜெயபோதினி (இலங்கை), கௌரி (இலங்கை-ஆசிரியை), மாலா (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், றினா (ஜேர்மனி), மனோத்குமார் (கனடா), லக்ஸ்மிகாந் (யாழ்ப்பாணம் - Sports World), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனீபர், டெனிஸ் (ஜேர்மனி), அரிஸ், அஜேஸ், அகானா (கனடா), திபிஷா, ரிசாரா, கிருஸ்மிரா(இலங்கை), கஜீஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்றுமுன்தினம் (30.10.2020) வெள்ளிக்கிழமை அன்று பி.ப 03.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்'

**தகவல்: குடும்பத்தினர்**

**இல.30, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு:
077 360 4830, 491632853458,
14163582479, 14165687552,
94773604830, 16473006597.

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை. தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 074 039 0272

## ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 658 9443 யாழ்ப்பாணம்

## மேல் வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் ஓட்டு மடம் சந்திக்கு அருகில் 5 அறைகள், 2 இணைந்த குளியலறைகள், சமைய லறைகள், விசாலமான ஹோல் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு
076 2254 129, 076 9099 214

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் புடைவை நிலையமொன்றுக்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு:0777 89 88 62

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு ஆனந்தகானம் ராசா கடை வீதியில் 44 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை 4 லச்சம் ரூபா (400 000/-) பிரித்து கொடுக்கப்படும்

தொடர்பு: 076 888 4625

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கரந்தன் நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 8½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை 8 லச்சம் ரூபா (800 000/-) பிரித்து கொடுக்கப்படும் 1½ பரப்பாக. தரகர் தேவையில்லை

தொடர்பு:
077 623 4204, 077 998 6806

## தேவை

மில் ஒன்றினை நிறுவுவதற்கு தேவையான பாவித்த நல்ல நிலையில் உள்ள அரிசி, மிளகாய் ஆகிய திரிப்பதற்கான இயந்திரங்கள் தேவை. விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

076 3899 554, 0777 323 156

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## விற்பனைக்கு

202- ஆட்டோ விற்பனைக்குண்டு.
(மீளமைக்கப்பட்டது)

தொடர்பு: 077 229 8861

## அறிவித்தல்

திரு.கதிர்காமு செல்லத்துரை
அவர்களின் இன்று நடைபெறவிருந்த 45ஆம் நாள் நினைவஞ்சலி கொரோனா காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மகன்
பண்டாரக்குளம்.. 077 9060 411

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கரந்தன் ராசாகடை வீதியில் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பின் விலை நாலு லச்சத்து ஐம்பதாயிரம் ரூபா (450 000/-) பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 109 3479,
077 894 9549.

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: குரு
077 805 1655, 076 6400 974

## வேலைவாய்ப்பு

சுப்பர் மார்கட் ஒன்றிற்கு
1. விற்பனை உதவியாளர்
2. மேற்பார்வையாளர்

1. ஆண் 2.வயது 20 - 40வருடங்கள்
3.வேலை நேரம் காலை 10.00 - இரவு 9.30
நேர்முகத்தேர்வு - திங்கள் - வெள்ளி
10am - 2pm

இல.175 K.K.S Road, யாழ்ப்பாணம்.
077 477 3481

## வகுப்புக்கள்

A/L Accounting classess மற்றும்
O/L Commerce classess
(English & தமிழ் Medium)
வீடுகளில் வந்தும் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

T.P: 077 995 4182

## Job Bank (PVT) LTD
## வேலை வாய்ப்புக்கள்

குறைந்தபட்ச தகைமையுடன் பல வகையான பதவிகள் (க.பொ.சாதாரணம்)

1. சாரதி - 03
2. அலுவலக பெண் - 02
3. வெளிக்கள உத்தியோகத்தர்கள்-10
4. சமூக வலைத்தளம் தொடர்பான தகைமை பெண்-02
5. சுவடிகள் பொறுப்பாளர்கள் -03
6. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்-03
7. முகாமைத்துவ உதவியாளர்கள் -03

இன்னும் பல வேலைகள்.
மேலதிக விபரம் (நேரில்) உடன் தொடர்பு
077 13 28 912
077 40 68 241

## சேவை நலன் பாராட்டு

தீவக கல்வி வலயத்தில் கடந்த 6 1/2 வருடங்களாக விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 01.11.2020 அன்று பணிநிலை ஓய்வுபெறும் விஞ்ஞான பாட உதவிக்கல்வி பணிப்பாளர்

### திரு.நாகமணி சபாநாதன்
B.Sc.,Dip.in Edu.,M.Ed

அவர்களின் சேவையைப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
விஞ்ஞான பாட ஆசிரியர்கள்
தீவக கல்வி வலயம்-தீவகம்.




# முகக்கவசம் அணியாத 39 பேர் கைது!

கொழும்பு, நவ. 1

முகக்கவசம் அணியாமல் பொதுவெளியில் நடமாடிய 39 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனாவைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தி வந்தோம். அதனை கட்டாயப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. அதன்பின்னர் மக்களுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் முகக்கவசம் அணியாத, சமூக இடைவெளியைப் பின்பற்றாத அதேபோல் சுகாதார நடைமுறைகளை மீறும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கை நேற்று முதல் (நேற்றுமுன்தினம்) ஆரம்பமானது. நேற்று (நேற்றுமுன்தினம்) மாத்திரம் முகக்கசவம் அணியாத, சமூக இடைவெளியைப் பின்பற்றி செயற்படாத 39 பேர் கைது செய்யப்பட்டனர்.


இந்த நடவடிக்கை தொடரும். கைதானவர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும். (ம-44)

## வீடு வாடகைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 833 6848

## 4 ஆம் ஆண்டு நினைவு



கந்தையா இராசேந்திரம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 01 |
| 07 | 11 |
| 1941 | 2016 |

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
இன்றுடன் நானகாண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மறையாது அப்பா!

கலைமணி வீதி,
கட்டைப் பிராய். குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவின அழைப்பு



கடந்த (13.11.2019) புதன்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

### அமரர் இராமநாதன் புவனேஸ்வரி

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச நிகழ்வுகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

30, சங்கிலியன் வீதி,
நல்லூர். குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

யாழ். கந்தர்மடத்தில் புதிய மேல் மாடி வீடு வாடகைக்குண்டு. மாத வாடகை ரூ.35.000. பார்வையிடும் நேரம்:
4 pm - 6.30 pm

077 2530 865

## பணிப்பெண் தேவை

மாதகலில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டிலேயே தங்கி வீட்டுப்பணி செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது : 20 - 60

076 342 8297, 077 794 7247

## தேவை

J.C.B இயக்குனர் தேவை. சிறந்த ஆரோக்கியமும், நுணுக்கமாகவும் வேலைசெய்யக் கூடிய, அனுமதி பத்திரமுடைய J.C.B டிரைவர் உடனடியாக தேவை. தகுந்த சம்பளம். பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு:077 44 23 337

## வாடகைக்கு வீடு தேவை

அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு
(யாழ் நகரிற்கு வெளியே)

074 042 5895

## வீடு வாடகைக்குண்டு

சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குண்டு.
அத்துடன் அறைகளும்
வாடகைக்குண்டு.

07[illegible]41 2713, 077 724 2427

## வே[illegible]யாட்கள் தேவை

வீட்[illegible] [illegible]ங்கி இருந்து வீட்டு வேலை செய்[illegible]டிய பெண் வேலையாட்கள் தேவை.

[illegible]: 076 009 494[illegible]

## [illegible]ன் லேபர் தே[illegible]

யாழ் நகரில் உள்ள கட்டுமான நிறு[illegible]ம் ஒன்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் [illegible]சன் லேபர் தேவை.

0777 157 070

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 27 |
| 02 | 10 |
| 1935 | 2020 |

### கந்தையா சின்னராசா

**(பிரபல மெக்கானிக்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மூளாய் றோட் வட்டுக்கோட்டையை வதிவிட மாகவும் தற்போது டென்மார்க் (Viborg) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னராசா அவர்கள் கடந்த (27.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வநாயகி அவர்களின் பாசமிகு கணவரும், சுரேஸ் குமார் (டென்மார்க்), நகுலாம்பாள் (நந்தினி), அருள்நாயகி (கௌரி), பத்மினி (டென்மார்க்), றஜனி (டென்மார்க்), கிருஷ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், சுப்பிரமணியம், நாகரத்தினம், நாகேஸ்வரி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், வடிவாம்பிகா தேவி (டென்மார்க்), சிவானந்தா (இலங்கை), காலஞ்சென்ற சிறிரங்கநாதன் (இலங்கை), தியாகராஜா (டென்மார்க்), சுதாகரன் (டென்மார்க்), நித்தியகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கார்த்திகா (டென்மார்க்), துவா ரகை (டென்மார்க்), யசோதரன் (இலங்கை), லக்ஷிகா (டென்மார்க்), சுகந்தன் ((டென்மார்க்), சுவேதினி (டென்மார்க்), பிரவீன் (டென்மார்க்), ஜனார்த்தனன் (லண்டன்), சுதர்சன் (டென்மார்க்), நிவேதன் (லண்டன்), அனிஷ்கா (லண்டன்), பாலமனோகரன் (இலங்கை), ரவிகுமார் (டென் மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை டென் மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மூளாய் றோட், வட்டுக்கோட்டை.**

**தொடர்பு: 076 4070 674 யசோதரன் (பேரன்)**

## மரண அறிவித்தல்



### இரத்தினசாமி தவமணி

அச்சுவேலி பத்தமேனியை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமி தவமணி அவர்கள் நேற்று (31.10.2020) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, சின்னப்பிள்ளையின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்புச் சகோதரியும், புஷ்பமலரின் பாசமிகு மைத்துனியும், நடனசிகாமணி, வனிதாமணி, சிற்பரசிகாமணி, தேவசிகாமணி, ரமணி, பதிவிரதாமணி (தங்கா), ஆனந்த சிகாமணி, உதயமணி, ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற துரைஐயா, நாகம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தங்கமலர், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், லோகினி, மலர்விழி, வேல்முருகன், காலஞ்சென்ற கிருஷ்ண மோகன் (துளசி வர்த்தக நிலையம், இருபாலை சந்தி), ஸ்ரீமதி, முத்துராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வாணி, தேனாள்- அர்ஜுனா, புருஷோத்தமன்-சிந்துஜா, சிவகீர்த்தனன்-தாட்சாயணி, கீர்த்தனா- சாந்தரூபன், தாரணி-கௌசரூபன், அன்பரசி, தர்மினி, பிரசன்னா, பிரசாயினி, அக்சயா, ஆரணி, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேத்தியும், அகில், ஆரன், தரணிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி பத்தமேனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இருபாலை சந்தி, கோப்பாய் தெற்கு.**
**021 2230 336**
**அல்லது 077 510 7121**

**தகவல் : குடும்பத்தினர்.**

மற்றுமொரு நாடாளுமன்ற ஊடகவியலாளருக்கும்


### கொரோனா

சிங்கள பத்திரிகைப் ஒன்றின் பெண் ஊட கவியலாளர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய் யப்பட்டுள்ளது.

குறித்த ஊடகவியலாளர் நாடாளுமன்ற செய்தியாளராகக் கடமையாற்றி வந்துள்ளார். செய்தி சேகரிப்பதற்காக நாடாளுமன்றம் சென்ற இரண்டாவது ஊடகவியலாளருக்கும் தற்போது கொரேனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ,22)

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் லெனின் பிரபா (பிரபா)



அரியாலை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் லெனின் பிரபா நேற்று (31.10.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசரத்தினம் - யோகராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் விஜயவனிதா தம்பதியினரின் அன்பு மருமகனும், கிஷாந்தினியின் (ஆசிரியர்-யாழ்.வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) அன்புக் கணவரும், மிஷாளா, கௌதமன் (யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜபிரதீபா (பிரான்ஸ்), ரஜீவ்காந் (கண்ணா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும் தர்மதாஸ் (பிரான்ஸ்), பார்த்தீபன் (யாழ். பல்கலைக்கழகம்) பிரோஜன், விதுர்ஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சந்திரகலாவின் அன்பு மருமகனும், அபிஷேக், கொலின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 11 பூமகள் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி தனபாலசிங்கம் சரோஜினிதேவி (ரதி)

இலக்கம் 467, 7ஆம் யுனிட், இராமநாதபுரத்தை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் சறோஜினி தேவி (ரதி) 31.10.2020 அன்று காலமானார்.

அன்னார் நடராசா - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா – கமலாம்பிகை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் பிரசாந்தின் அன்புத் தாயாரும் நவரத்தினராசா (லண்டன்), ரஞ்சினிதேவி (திருவையாறு), நகுலேந்திரராசா (ஜேர்மன்), பற்குணராசா (லண்டன்), வனஜாதேவி (கனடா), கவிதா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நாகராசா, யோகேஸ்வரன், லோகநாதன் (திருவையாறு) ஆகியோரின் அன்பு மருமகளும், செந்தமிழ்ச்செல்வி, சிவாஜினி, கணேஸ்வரன் (திருவையாறு), சாந்தினி, சற்குணராசா, ஞானாநந்தன், செல்வி, சோதி, வேபி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜானா, தர்சன், லதுசன், ஹரிசன், கவின், கஜுரி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், ஜஸ்மி, அகிஸ்ணா, பவின், அகல்வன், துன்ஜிகா, ஜீவதாஸ், அனுசியா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (01.11.2020) 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.12.1966 | 31.10.2020 |

**தகவல்:**
**தனபாலசிங்கம் பிரசாந்த் 0772007413**
**இராசரத்தினம் கணேஷ்வரன் 077 581 6724**

### உயிரிழப்புக்களை...

கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் சிக்கி கடந்த 8 நாள்களில் மாத்திரம் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினார். 'இலங்கையில்கொரோனாவின் மூன்றாவது அலையின் தாக்கம் மிகத்தீவிர மாக உள்ளது. அனைத்து மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. சகல மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மூன்றாவது அலையின் வீரியம் அதிகரித்திருப்பதால் உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியாது. நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இதை அனைவரும் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்' என்று சவேந்திர சில்வா தெரிவித்தார். (ஓ,22)

### வடக்கில்...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த முதலாவது தொடர்பாளர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலைமை தொடர்பில் மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் 14 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். இதனையடுத்து 459 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேரை சுய தனிமைப்படுத்தியுள்ளோம், என்று குறிப்பிட்டார். (ஓ,5,20)

### யாழை...

இல்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்ட தொற்றாளர் ஒருவருடன் தொடர்புடைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. அத்துடன் அவர் வேறு சில இடங்களிலும் நடமாடியுள்ளார். அவருடன் பேருந்தில் பயணித்தவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டம் முடக்கப்படலாம் என்றும் யாழ்ப்பாண நகர் முடக்கப்படலாம் என்றும்தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோது, யாழ்ப்பாணத்தை முடக்குவது தொடர்பில் எந்தக் கோரிக்கையும் நாம் முன்வைக்க வில்லை, என்றார். (ஓ,5)

### தொற்றாளர்களுடன்...

எஞ்சிய 6 பேரினதும் தொலைபேசி இலக்கங்கள் வேலை செய்யவில்லை. அவர்களைத் தேடும் பணிகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் உணவகம் நடத்திய நல்லூரைச் சேர்ந்தவர் மற்றும் அந்த உணவகத்தில் பணியாற்றிய புங்குடு தீவு மற்றும் வேலணையைச் சேர்ந்த மூவர் கடந்த 25ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து NCG நிறுவனத்தின் WP NC-8760 என்ற பேருந்தில் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இவர்களுக்கு நேற்று முன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தமது வீடுகளுக்கு முச்சக்கரவண்டிகளில் சென்றுள்ளனர். இந்த நிலையில் இவர்களுடன் பேருந்துகளில் பயணித்தவர்களின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் பேருந்து நிறுவனத்தால் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக பேருந்தில் பயணித்த 43 பேரில் 37 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். எஞ்சிய 6 பேரின் தொலைபேசிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவர்களைக் கண்டறியும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், கண்டறியப்பட்ட 37 பேரில் மருத்துவர்கள், தாதியர்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

### தனிமைப்படுத்தலில் இருந்த...

ரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நீரிழிவு நோயாளிக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் பேலியகொட மீன் சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர். மன்னார் மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் தனிமைப்படுத்தல் முடிந்து வீடு திரும்புவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்படுகின்ற தென்னிலங்கையைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, மருதங்கேணி கொவிட் 19 சிகிச்சை நிலையத்தில் கண்காணிக்கப்பட்ட மூவருக்கு தற்போதும் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஓ,5)

### வடக்கு மக்களுக்கு...

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கிளிநொச்சிக்கு நேற்று பயணம் மேற்கொண்ட இராணுவத்தளபதி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று சமூகப் பரவலா இல்லையா என்பதை மருத்துவர்கள்தான் தீர்மானிப்பார்கள். நாங்கள் படைத்தரப்பினர். மருத்துவர்கள் இதுவரை அவ்வாறு கூற வில்லை. சமூகப்பரவல் என்றால், தொற்றானது ஒருவரிடமிருந்து ஒருவருக்கு எப்படித் தொற்றியது என்பது தெரியாத நிலையாகும்.

இதுவரையில் நோயாளியாக இனங்காணப்படும் ஒவ்வொருவரும் இன்னொரு நோயாளியுடன் ஏதோவகையில் தொடர்புபட்டவர்களாகவே உள்ளனர். இதனால் தான் மருத்துவர்கள் இதுவரை சமூகப்பரவல் இல்லை என்று கூறுகிறார்கள். அதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். சமூகப்பரவலா அல்லது தொடர்புகள் உள்ளதா இல்லையா என்பது இங்கு முக்கியம் அல்ல. எமது நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று உள்ளதால் நாம் அனைவரும் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியம். வடக்கு மாகாண மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம் அவர்களை நிச்சயமாக நாம் பாராட்டுகிறோம், என்றார். (ஓ,ரி2)

### இலங்கையில்...

கொண்டுள்ளதெனவும் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாகவே இலங்கை முழுவதும் தொற்றுப் பரவலின் வேகம் அதிகரித்துள்ளதென சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மினுவாங்கொட, திவுலப்பிட்டிய, பேலியகொட மீன் சந்தை மற்றும் பேருவளை துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,இ)

### தொற்றாளர் நடமாடிய...

இரு தினங்கள் நடமாடியுள்ளார் என்று தெரியவந்துள்ளது. அதையடுத்து யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் 3 கடைகள் சீல் வைக்கப்பட்டதுடன், பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நல்லூர், புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களைச் சேர்ந்த நால்வருக்கும், உடுவிலைச் சேர்ந்த இருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. நல்லூர், புங்குடுதீவு, வேலணையைச் சேர்ந்த நால்வரும் கொழும்பில் உள்ள ஒரே உணவகத்தில் பணியாற்றியவர்கள். நல்லூரைச் சேர்ந்தவர் உணவகத்தின் உரிமையாளர். இவர்கள் ஒன்றாகவே பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். உணவக உரிமையாளர் யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இரு தினங்கள் நடமாடியுள்ளார். வைமன் வீதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம், கோயில் வீதியில் உள்ள உணவகம் என்பவற்றுக்கும் சென்றுள்ளார். சிகை அலங்கரிப்பு நிலையம், உணவகம் என்பன மூடப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். உணவக உரிமையாளரின் அயலவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான உணவ உரிமையாளர் பயணித்த முச்சக்கர வண்டிச் சாரதி, கொட்டடியில் உள்ள அவரது இல்லத்தில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்துக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. தொற்றாளரின மகன் மற்றும் மருமகனுடன் தொடர்புபட்ட அழகு சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் சில வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மூடப்பட்டுள்ளன. இந்த விற்பனை நிலையங்கள் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ளன. தொற்றாளர் நடமாடிய இடங்கள் தொடர்பில் சுகாதார அதிகாரிகள் தற்போதும் ஆராய்ந்து வருகின்றனர். தொற்றாளருடன் தொடர்பிலிருந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. (ஓ,26)

### கூட்டமைப்பின்...

சிலர் தவிசாளர்களுக்கு எதிராகச் செயற்படப் போவதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவ்வாறு அவர்கள் செயற்பட முடியாது என்றும், வரவு செலவுத் திட்டத்தை ஏகமனதாக ஆதரிக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்டாக முடிவெடுத்துள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் நேற்றுக் கலந்துரையாடினர். இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி நடத்தும் அனைத்து சபைகளின் உறுப்பினர்களும் இதற்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு, அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைமையால் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ஓ,22)

### கொரோனா...

வயது 54. இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று உயிரிழந்த பெண்ணுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது: நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இந்தப் பெண், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-எ,22)



## கிளி.யில் அமைக்கப்படும் கொரோனா மருத்துவமனைக்கு இராணுவத் தளபதி வருகை

கிளிநொச்சி, நவ. 1

கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் (விடுதலைப்புலிகளின் நவம் அறிவு கூடம் கட்டடத்தொகுதி) அமைக்கப்பட்டு வருகின்ற கொரோனா மருத்துவமனையின் பணிகளை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மாலை 4.30 மணியளவில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களைக் கொண்டு இன்னும் இரண்டுவார காலத்துக்குள் பணிகளை நிறைவு செய்து கொரோனா மருத்துவமனையின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வகையில் இங்கு பணிகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,ரி2)

## நேற்றும் 239 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, நவ. 1

இலங்கையில் நேற்றும் 239 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் இருந்தவர்களும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தவர்களுக்குமே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 663 ஆக உயர்வடைந்துள்ளது. மருத்துவமனைகளில் தற்போது 6 ஆயிரத்து 244 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 399 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 20 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். (ஓ,22)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை (01.11.2020) சிகரம் : 20

மண்டபமெடுத்து வீடியோ பிடிச்சு 'எழுப்பம் காட்ட' வந்தவர்
நிண்டவருக்கெல்லாம் 'செஃல்ப் சேர்வில்' சாப்பாடு போட்டு– கண்டிருந்த
கலியாணம் காட்சியெல்லாம் இப்போ கொரோனா வந்ததாலே
தாலிகட்டும் 'சூமிலே' சுருங்கிப் போகுது இனி அறி!

ஒட்டுக்குழுச் சுவாமிகள்



## நாங்கள் அப்போது சொன்னதே இப்போது நடக்கிறது!

12 -13



03

## நாரதருக்கு வந்த சோதனை!



யார் இந்துசமுத்திரத்தில் கடல்சார் மேலாண்மையை அடைகிறாரோ ,அவரே அனைத்துலக அரங்கில் முதன்மையான பாத்திரத்தை வகிப்பார்.யார் இந்து சமுத்திரத்தை கட்டுப்படுத்துகிறாரோ அவர் ஆசியாவின் மீது ஆதிக்கத்தைக் கொண்டிருப்பார். இருபத்தியோராம் நூற்றாண்டில் எழு கடல்களுக்குமான திறப்பு இந்து சமுத்திரமே. இந்த எழு கடல்களுமே உலகின் தலைவிதியைத் தீர்மானிக்கும்.

**அட்மிரல் அல்பிரட்தயர் மகான்**



# மஞ்சள் ஆபத்தும் மஞ்சள் விலை கூடிய ஒரு குட்டித்தீவும்

நிலாந்தன்


நாங்கள் நண்பர்களாக வருகின்றோம், சகாக்களாக வருகின்றோம். ஆனால் சீனாவோ, இலங்கையின் இறையாண்மையை மோசமாக மீறும்வகையில் மோசமான உடன்படிக்கைகளையும் சட்ட மீறல்களையும் கொண்டுவந்திருக்கின்றது. இலங்கையின் நிலம் மற்றும் கடல் சார்ந்த பகுதிகள்ஆக்கிரமிக்கப்படுவதை நாங்கள் பார்க்கின்றோம். சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி பிறரைச் சூறையாடும் தன்மை கொண்டது"

கடந்த புதன்கிழமை கொழும்புக்கு வந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறிய கருத்துக்கள் இவை. அதாவது சீனா இலங்கைத்தீவின் இறையாண்மையை மீறுகின்றது என்று அமெரிக்கா கூறுகிறது. இக்கூற்றில் உட்பொதிந்திருக்கும் அர்த்தம் என்ன? சீன விரிவாக்கத்தால் அல்லது சீன மயப்பட்டதால் இலங்கையின் இறையாண்மை பலவீனமடைகிறது என்று அமெரிக்கா கூறுகிறது.

ஆனால் சிறிய இலங்கைத் தீவு சீனாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் இருந்து அவ்வளவு சுலபமாக வெளி வர முடியுமா? அல்லது இந்தக்கேள்வியை மாற்றிப் படிக்கலாம். இலங்கைத் தீவு சீனாவின் செல்வாக்கு மண்டலத்திலிருந்து வெளிவருவதற்கு என்ன செய்ய வேண்டும்? ஜனாதிபதி கூறுவதுபோல அணிசேரா வெளியுறவுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இலங்கைத்தீவின் அமைவிடத்தை கருதிக் கூறின் இச்சிறிய தீவால் அணிசேராமல் தனித்துவமாக நிற்க முடியுமா?

முடியாது என்பதே குரூரமான யதார்த்தமாகும். ஏனெனில் இலங்கைத் தீவின் அமைவிடம்தான் அதற்குக் காரணம். இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்து வம்மிக்க கடற்பாதையில் இலங்கை அமைந்திருகிறது. அதோடு தென்னிந்தியாவுக்கு கீழே ஒரு கண்ணீர்த் துளி போல காணப்படுகிறது. இந்தச் சிறிய தீவில் தமது ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் சக்திகள் தென்னிந்தியாவைத் தமது கண்காணிப்புக்குள் கொண்டு வரலாம். எனவே தென்னிந்தியாவை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் எந்த ஒரு வியூகத்திற்குள்ளும் இலங்கைத்தீவு சிக்காமல் தப்ப முடியாது.

இதில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் ஒரே விதமாக விதிதான் உண்டு. ஒரு அரசற்ற தரப்பு என்ற காரணத்தால் தமிழ் மக்களை எல்லா வல்லரசுகளும் சேர்ந்து இலகுவாகப் பந்தாட முடிந்தது. அந்த யுத்த வெற்றியை ராஜபக்சக்கள் தங்களுடைய வெற்றியாகக் கருதி மயங்குகிறார்கள். ஆனால் அது ஒரு பிராந்தியவெற்றியும்பூகோள வெற்றியும் ஆகும். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் பிராந்திய மற்றும் பூகோள நோக்கு நிலைகளில் இருந்தே நசுக்கப்பட்டது. அதில் ராஜபக்சக்கள் கருவிகளே. இப்பொழுது தமிழ் எதிர்ப்பு இல்லை. ஆனால் இந்தச்சிறிய தீவை, தமது செல்வாக்கு வளையத்துக்குள் கொண்டுவர எத்தனிக்கும் எல்லாப் பேரரசுகளும் கொழும்பை நோக்கி மொய்க்கின்றன.



அமெரிக்க ராஜாங்க அமைச்சர் பொம்பியோவின் வருகைக்கு முன்னரே கொழும்பில் இருக்கும் அமெரிக்கத் தூதரகமும் சீனத்தூதரகமும் ஒன்றுக்கு எதிராக மற்றது அறிக்கை விடும் நிலைமை தோன்றிவிட்டது. ஒரு சிறிய தீவை முன்வைத்து இரண்டு பேரரசுகள் இவ்வாறு மோதிக்கொள்வது என்பது வழமைக்கு மாறானது. அதேசமயம் இவ்வாறு இரண்டு பேரரசுகளும் மோதிக் கொள்வது ஒரு விடயத்தை தெளிவாகக் காட்டுகிறது. என்னவெனில்இலங்கைத்தீவின் கவர்ச்சி அதிகரித்திருக்கிறது என்று பொருள். ஆனால் அது நேர்மறைக்கவர்ச்சியல்ல.அது ஓர் எதிர்மறை கவர்ச்சி. இலங்கைத் தீவு சீன மயப்பட்டதன் விளைவாகவே அந்தக் கவர்ச்சி ஏற்பட்டது. சீனாவின் செல்வாக்கு வளையத்துக்குள் இருந்து இலங்கைத் தீவை எப்படிக் கழற்றி எடுக்கலாம் என்று அமெரிக்கா முயற்சிக்கின்றது.

கொவிட்19 சூழலுக்குள் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகப் போட்டி அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வந்துவிட்டது. ஏறக்குறைய ஒரு பனிப் போர்ச் சூழல் மேலெழுகிறது. பொம்பியோவின் வருகைக்கு முன்னர் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு" அவர்களின் (இலங்கை தொடர்பான அமெரிக்கஉயரதிகாரியின் கருத்து)'பனிப்போருக்கான' மனோநிலையையும், பிற நாடுகளின் விவகாரங்களில் தன்னிச்சையாகத் தலையீடு செய்யும் அதன் போக்கையும் சிறிய நாடுகள் எந்த பக்கத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறும் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது"

இவ்வாறு இரண்டு பேரரசுகளும் ஒரு பனிப்போரை நோக்கி நகரும் உலகச்சூழலில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக பொம்பியோ இலங்

2


# மஞ்சள் ஆபத்தும்...

> ஐ.நா.வின் 31/1 தீர்மானம் சவேந்திரசில்வாவுக்கு எதிரான அமெரிக்காவின் பயணத் தடை போன்றவை இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கிலானவை. அதாவது கொழும்பிலிருக்கும் அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கு திரும்பவும் திரும்பவும் தமிழ் மக்களின் விவகாரமே ஒரு கருவியாகக் கையாளப்படுகிறது.

மானது அடிப்படைப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புக்குமான உடன்படிக்கை (BECA) ஆகும். இந்த உடன்படிக்கை சீனாவிடம் இருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் நோக்கிலானது. இந்த உடன்படிக்கையின் கீழ் இந்தியாவும் அமெரிக்காவும் வரைபடங்கள்,கடல் சார் வான் சார் வழி வரைபடங்கள், செய்மதித்தகவல்கள் உள்ளிட்ட படைத்துறைத் தகவல்களை தங்களுக்கிடையே பரிமாறிக் கொள்ளும். இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின் பேசிய பொம்பியோ சீன கம்யூனிஸ்ட் கட்சியை கடுமையாகத் தாக்கிப் பேசினார். ஆனால் இது தொடர்பில் இந்தியா வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை எதிலும் அவ்வாறு சீனாவைப் பெயர் குறிப்பிடவில்லை. அது மட்டுமல்ல இந்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கருத்துக்களைத் தெரிவிக்கும் பொழுது இரண்டு விடயங்களைத் தெளிவாக முன்வைப்பது தெரிகிறது.

முதலாவது, அவர்கள் சீனாவை செங்குத்தாகப் பகை நிலைக்குத் தள்ளுவதைத் தவிர்க்கிறார்கள். இரண்டாவது, இப்போது உருவாகி வருவது இருதுருவ உலக ஒழுங்கு என்பதனை அவர்கள் வெளிப்படையாகக் கூறத்தயாரில்லை. மாறாக பல்துருவ உலக ஒழுங்கு என்றே இப்பொழுதும் குறிப்பிடுகிறார்கள். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் "தேசிய பாதுகாப்பை நோக்கிய எமதுசெயற்பாடுகள் பலதுருவ உலகில் அதிகமாக வளர்ந்திருப்பது வெளிப்படையானது...... பல துருவ உலகம் எனப்படுவது பல துருவ ஆசியா என்பதை அதன் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

அதாவது அமெரிக்க- சீன பனிப்போரை தனது பிராந்தியத்தில் அப்படியே பிரதிபலிப்பதற்கு இந்தியா தயாரில்லையா?ஆனால் சில தசாப்தங்களுக்கு முன்பு முதலாளித்துவத்துக்கும் கொம்யூனிசத்துக்கும் இடையிலான பனிப்போரை இந்தியா தனது பிராந்தியத்திலும் பிரதிபலித்தது. அதனாலேயே அமெரிக்க சார்பு ஜெயவர்த்தனவை தனது வழிக்குக் கொண்டுவருவதற்காக சோவியத் சார்பு இந்தியா தமிழ் இயக்கங்களுக்குத் தன்னைப் பின் தளமாகத்




திறந்துவிட்டது. பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது.உலகளாவிய பனிப்போரின் கருவிகளாக மாறி சிங்களவர்களும் தமிழர்களும் மோதிக்கொண்டார்கள். ஒரு கட்டத்தில் இந்தியா தலையிட்டது. பின்னர் இந்தியாவும் ரத்தம் சிந்த வேண்டி வந்தது. அதன் விளைவாக ஈழப்போராட்டத்துக்கும் , இந்தியாவுக்கும் இடையே நிரந்தரமான சட்டப் பூட்டு விழுந்தது. இது பழைய பனிப்போர்க் கதை. இப்போது இன்னமும் முழு வடிவம் பெறாத ஒரு புதிய பனிப்போர்.

பழைய பனிப்போர் காலத்தில் அமெரிக்க ஆய்வாளர்கள் வருங்கால உலகப்போக்குக் குறித்து எதிர்வு கூறியபடியே கடந்த சுமார் நான்குதசாப்த கால உலகின் போக்கு அமைந்துவிட்டது. கம்யூனிசத்துக்கு எதிரான போரை அதாவது பழைய பனிப்போரை அவர்கள் "சிவப்பு ஆபத்துக்கு" எதிரான யுத்தம் என்று வர்ணித்தார்கள். அதன் பின்னர் "பச்சை ஆபத்துக்கு" எதிரான யுத்தம் என்று எதிர்வு கூறினார்கள். பச்சை ஆபத்து எனப்படுவது இஸ்லாமியத் தீவிரவாதம். அந்த யுத்தம் முடிவுக்கு வரும் பொழுது "மஞ்சள் ஆபத்துக்கு" எதிரான யுத்தம் வரும் என்று கூறப்பட்டது. மஞ்சள் எனப்படுவது மங்கோலிய இனமான சீனர்களைக் குறிக்கும்.பச்சைஆபத்துக்கு எதிரான யுத்தம் பெருமளவுக்கு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. அப்படி என்றால் இப்பொழுது மஞ்சள் ஆபத்துக்கு எதிரான பனிப் போர் தொடங்கி விட்டதா?

இதில் சிவப்பு ஆபத்துக்கு எதிரான பனிப்போரின் குழந்தையே தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டமாகும். அந்தப்பனிப்போருக்குப் பின் வந்த பச்சைஆபத்துக்கு எதிரான போரின் போது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முதலில் எழுச்சி அடைந்தது, முடிவில் வீழ்ச்சியடைந்தது. இப்பொழுது ஒரு வைரஸின் பின்னணியில் மஞ்சள் ஆபத்துக்கு எதிரான பனிப்போர் உருக்கொள்ளும் உலகச்சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்பட வில்லை.

ஐ.நா.வின் 31/1 தீர்மானம்; சவேந்திரசில்வாவுக்கு எதிரான அமெரிக்காவின் பயணத் தடை போன்றவை இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கிலானவை. அதாவது கொழும்பிலிருக்கும் அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கு திரும்பவும் திரும்பவும் தமிழ் மக்களின் விவகாரமே ஒரு கருவியாகக் கையாளப்படுகிறது. அப்படி என்றால் புதிய பனிப்போர் சூழலுக்குள்ளும் அதுதான் நடக்கப்போகிறதா ? " பூமியிலே சூரியனுக்குக் கீழே நூதனமானது எதுவுமில்லையா?"

பழைய பனிப்போர் சூழலுக்குள் தமிழ் மக்களிடம் ஆயுத சக்தி இருந்தது. பேரபலம் இருந்தது. ஆனால் இப்பொழுது தமிழ் மக்களிடம் வாய் மட்டும் தான் இருக்கிறது. பலமான புலம் பெயர்ந்த சமூகம் தன்னால் இயன்றதைச் செய்கிறது. தமிழகம் அவ்வப்போது கொதித்தெழும். ஆனால் நாட்டில் தமிழ்த் தரப்பு சிதறிக்கிடக்கிறது.பொம்பியோ கொழும்பிலிருந்து புறப்பட்ட அதே நாளில் கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவர் சம்பந்தரைச் சந்தித்திருக்கிறார். இது எதைக் காட்டுகிறது?

புதிய பனிப்போர் சூழல் தீவிரமானால் அது தமிழ் மக்களுக்கு புதிய சாத்தியவெளிகளைத் திறக்கக்கூடும். ஆனால் அதைக்கையாள்வதற்கு தமிழ்மக்கள் ஒன்றிணைந்த தரப்பாக இல்லை.தமிழ்மக்களிடம் பொருத்தமான வெளியுறவுத்தரிசனமோ, பொருத்தமான வெளியுறவுக் கொள்கையோ, பலமான ஒரு வெளிவிவகாரக்கட்டமைப்போ இல்லை. பழைய பனிப்போரிலிருந்து கற்றுக் கொண்டு புதிய பனிப்போரை எதிர்கொள்ள தமிழர்கள் இன்னமும் தயாராகவில்லை.

---

○ மின்னல்

## திரடி அரங்கு



## "யாரோடு நோவது?"



கொரொனா கட்டுப்பாட்டு விடயத்தில் மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றும், பொதுமக்கள் சுகாதார நடமுறைகளைப் பின்பற்றவில்லை என்றும் கூறும் பொலிஸ் அதிகாரிகளும், சுகாதாரப் பிரிவினரும் பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் தொடர்பில் சரியாகச் செயற்படுகிறார்களா என்பது கேள்விக்குறியே.

கோப்பாய் தெற்கில் உள்ள ஒரு குடும்பத்தினர் அண்மையில் தென்னிலங்கை சென்று திரும்பியுள்ளனர். ஆனால் அவர்கள் தங்களைத் தனிமைப் படுத்திக் கொள்ளவில்லை.

வெளிமாவட்டம் சென்று வந்தோர் தங்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் குடும்பம் தங்களின் வழமையான செயற்பாட்டில் ஈடுபட்டது.

அவர்கள் தென்னிலங்கைக்குச் சென்று வந்த விடயம் அயலில் உள்ளவர்களுக்குத் தெரிந்தது. தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள் என்று அந்தக் குடும்பத்துக்கு நேரடியாகக் கூறினால் உறவில் விரிசல் ஏற்படலாம் என்று கருதிய அயலவர்கள் இது தொடர்பாக கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். கிராம அலுலவரும் சுகாதாரப் பரிசோதகரின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து, அவர்களுக்குக் கூறுமாறு தெரிவித்திருக்கின்றார்.

அதன்பின்னர் சுகாதாரப் பரிசோதகருக்கு விடயத்தைத் தெரிவித்திருக்கின்றனர் அயலவர்கள். ஆனால் அங்கு வந்து இதுவரையில் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆராயவும் இல்லை, அந்தக் குடும்பத்தினர் தங்களை இன்னமும் சுயதனிமைப்படுத்தவும் இல்லை என்று அயலவர்கள் கூறுகின்றனர்.

வெளிமாவட்டங்கள் சென்று வந்தோர் பற்றித் தெரியப்படுத்துங்கள் என்று கூறுபவர்கள், அவ்வாறு தெரியப்படுத்தினால் நடைமுறையில் அலட்சியமாக நடந்து கொள்கின்றனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்படாது இருப்பவர்களால் தொற்று பரவினால் அதற்கு யார் பொறுப்பேற்பார்கள்?. மக்கள் தரும் தகவல்களை இவ்வாறு அலட்சியம் செய்தால் அவர்கள் மீண்டும் எவ்வாறு தகவல்களைத் தருவார்கள்?

## இவர்களையும் கவனியுங்கள்



கொரோனா தொற்று பலரின் வாழ்வாதாரங்களைப் புரட்டுப் போட்டிருக்கின்றது. அவர்களில் சிலருக்கு சில உதவிகள் கிடைத்திருந்தாலும், பலரும் இன்னமும் அதன் பாதிப்புக்களில் இருந்து மீள முடியாது தவிக்கின்றனர்.

அவர்களில் தனியார் கல்வி நிலையங்களில் மட்டும் கற்பிக்கும் ஆசிரியர்களும் அடக்கம். தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களில் சிலர் பாடசாலையிலும், கல்வி நிலையத்திலும் கற்பித்தாலும், பலர் தனியே தனியார் கல்வி நிலையங்களில் மட்டுமே கற்பிக்கினர். அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே அவர்களின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது.

கொரோனா தொற்றால் இப்போது கல்வி நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் முதல் பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. பின்னர் பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், கல்வி நிலையச் செயற்பாடுகள் சீராகவில்லை. "சூம்" தொழில்நுட்பத்தின் மூலம் கற்பித்தல் செயற்பாடுகளைச் சிலர் மேற்கொண்டாலும், அது பிரபல்யமான ஆசிரியர்களுக்கே வெற்றியளித்திருந்தது.

தனியார் கல்வி நிலையங்களை மட்டும் நம்பியிருக்கும், அதிலும் கிராமப் புறங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களின் வருமான வழிகளை இழந்து, இடர்களை எதிர்கொண்டுள்ளனர். அரசோ, ஏனைய அமைப்புக்களோ இவர்களுக்கு எந்த உதவிகளையும் இதுவரை வழங்கவில்லை. அரசோ அல்லது பொது அமைப்புக்களோ இது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். அவர்களுக்கான உதவிகளை வழங்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

நாதுவின் லீலைகள்

# நாரதருக்கு வந்த சோதனை





நாராயணா, நாராயணா என்று பாட்டை மாற்றிக் கொண்டு மாளிகைக்குள் நுழைய முயன்றார். அவர் நுழைவதை 'சிசிரீவி' திரையில் பார்த்த வள்ளி பதறினாள். அருகில் இருந்த போனை எடுத்து வாயில்காவலாளியிடம் ஏதோ சொன்னாள். அவ்வளவுதான், நாரதருக்கு முன்னால் ஈட்டி முனைகள் குறுக்கே பிடிக்கப் பட்டு பயணத்தடை விதிக்கப் பட்டது.

தேவலோகத்தில் வழக்கமாக இருக்கும் ஆரவாரத்தைக் காணவில்லை. கழுத்தில் கட்டித் தொங்கிக் கொண்டிருந்த கிற்றாரில் " ரகிட ரகிட .." என்று புதுப்பாடலை தனக்குத் தெரிந்த ராகத்தில், வாயைக் கோணி பாடியபடி சென்று கொண்டிருந்த மிஸ்டர் நாரதர் என்கிற நாதுவுக்கு இந்த அமைதி அவ்வளவு நல்லதாகப் படவில்லை.

" என்னாயிற்று தேவலோகவாசிகளுக்கு? " என்று நினைத்தவாறே பாடலைப் பழையபடி முணுமுணுத்தபடி, கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மாலை 6 மணியைத் தாண்டியிருந்தது நேரம்.

"எடக் கோதாரி, இண்டைக்கு ஒருத்தரையும் கொளுவி வைச்சுக் கூத்துப் பாக்கேலையே, அப்பிடிச் செய்யாட்டி என்ரை தலை வெடிச்சுப் போயிடுமே" என்று நினைத்தவராக, யார் யாருக்கிடையில் புதிய சண்டையை மூட்டி விடலாம் என்று யோசிக்கத் தொடங்கினார்.

'யாமிருக்கப் பயமேன்' என்ற வாசகத்தோடு முன்னால் தெரிந்த முருகனின் மாளிகை கண்ணில் பட்டது.

" ஆஹா, இருக்கவே இருக்கிறான் முருகன்" என்று ஆறுதல் பட்டார் நாது.

" நாராயணா, நாராயணா" என்று பாட்டை மாற்றிக் கொண்டு மாளிகைக்குள் நுழைய முயன்றார். அவர் நுழைவதை 'சிசிரீவி' திரையில் பார்த்த வள்ளி பதறினாள். அருகில் இருந்த போனை எடுத்து வாயில்காவலாளியிடம் ஏதோ சொன்னாள். அவ்வளவுதான், நாரதருக்கு முன்னால் ஈட்டி முனைகள் குறுக்கே பிடிக்கப்பட்டு பயணத்தடை விதிக்கப்பட்டது.

" என்ன ? நான் ஆரெண்டு தெரியும் தானே? எனக்கே தடையா?" கோபமானார் நாது.

" ஆராயிருந்தாலும் மாஸ்க் போடாமல், கை கழுவாமல் உள்ளுக்கை போக ஏலாது"

காவலாளியின் குரலில் இருந்த கண்டிப்பில், பணிந்தார் நாரதர். கைகழுவி விட்டு, இடுப்பில் சொருகியிருந்த 'மாஸ்க்'கை அணிந்த பின்னரே உள்ளே செல்ல முடிந்தது.

" எஃன முருகா, இந்தப்பாடு படுத்துகிறாய்" என்று போனதும் போகாதுமாக முறைப்பாடு செய்தார் நாது.

" என்ன செய்ய நாது மாமா. எல்லாம் உந்தக் கோதாரி விழுந்த கொரோனாவால வந்த வில்லங்கம். ஒரு இடத்துக்குப் போக வரமுடியாமல் இருக்கு. அவ்வளவு ஏன், உங்களுக்கெண்டாலும் பரவாயில்லை. ரெண்டு கைதான். நான் இந்தப் பன்னிரண்டு கைகளையும் வைச்சுக் கொண்டு அதை 'சனிற்றைசர்' போட்டுக் கழுவப்படுறபாடு இருக்கே.சீய்க்! வாழ்க்கையே வெறுத்துப் போச்சு" முருகன் சொல்லச் சொல்ல நாரதருக்கு பாவமாக இருந்தது.

" அதொண்டும் பயப்பிட வேண்டாம். இஞ்ச அந்தக் கொரோனா வராது"

நாது நம்பிக்கை கொடுத்தார். முறைத்தார் முருகன்.

" நீங்கள் தான் அடிக்கடி பூலோகப் பக்கம் திரியிறனீங்கள். உங்களால தான் இஞ்சை பரவுறதுக்கு சான்ஸ் கூட இருக்கு"

அதற்கிடையில் முருகன் வீட்டு 'ஸ்மார்ட்' ரீவியில் செய்தி ஒளிபரப்பாக, எல்லோரது கவனமும் அங்கு குவிந்தது.

" வணக்கம், முதலில் தலைப்புச் செய்திகள்.

இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியது

நிலைமை கைமீறிப்போய்விட்டதாக சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை

இலங்கையில் சமூகத் தொற்று இல்லை என்கிறார் சுகாதார அமைச்சர்"

செய்தியைப் பார்க்கப் பார்க்க நாரதருக்கு தலை சுற்றத் தொடங்கியது.

" கொரோனா வந்தும் கூட பொய் சொல்லுற இலங்கை அரசாங்கத்தின்ரை புத்தியை மாத்தமுடியேலையே" என்று அவர் சொல்லி முடிக்கவும் வாசலில் ஏதோ வாகனத்தின் சத்தம். எட்டிப் பார்த்தார் நாது. ஒரு அம்புலன்ஸ்.

" நான் தான் போன் பண்ணிச் சொன்னனான். போன கிழமையும் கொழும்புப்' பக்கம் போட்டு வந்தனியள் எல்லோ. உங்கள் ஒராளாலை இஞ்ச எல்லாருக்கும் பரவினாலும் எண்டு தான்.." வள்ளி சொல்லி முடிப்பதற்கிடையில், நாரதரை அள்ளிக் கொண்டு போனார்கள், தனிமைப்படுத்தல் முகாமுக்கு! ■



## நீள நினைதல்

வாசகர்களே, இது உங்களுக்கான பகுதி. உங்கள் வாழ்வில் சந்தித்த, கேட்டறிந்த, அனுபவப்பட்ட சுவாரசியமான மறக்க முடியாத, பகிர விரும்பும் நிகழ்வுகளை எழுதி அனுப்புங்கள். சிறந்த நினைவுப் பகிர்வுகள் 'நீள நினைதல்' பகுதியில் பிரசுரமாகும்.

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அநாதைகள்

ச.வாரித்தம்பி, கைதடி.

"அம்மா எங்கட வீட்டுக்கை சூரியன் சந்திரனை பார்க்கக் கூடியதாக இருக்கணை. ஆனா என்னோட படிக்கிற ரவி வீட்டுக்கை அப்பிடிப் பார்க்க இயலாமல் இருக்கு. ஏனணை, அவங்கடை வீடு கல் வீடு .எங்கடை வீடு மண் வீடு?"

"அவங்கட வீட்டுக்கு சீற்றுப் போட்டிருக்கு, எங்கட வீடு கிடுகால் மேய்ஞ்சிருக்கு. போன வருஷம் மேய வேண்டியது கொப்பன் சாராயத்துக்கும் கள்ளுக்குமெல்லோ காசைக் குடுக்கிறான். ரவியின்ர தமையன் வெளிநாட்டில நிண்டு காசு அனுப்புறான். எங்களுக்கு ஆர் அனுப்புறது? "

" நானும் வளர்ந்த பிறகு வெளிநாட்டுக்குப் போய் உழைச்சுக் காசு அனுப்புவன். நீங்களும் கல் வீடு கட்டுங்கோ"

"தம்பி உந்தக் கதை குருடன் யானை பார்த்த கதை மாதிரித்தான்"

"அம்மா நீ இனிமேல் அவா ரத்தினத்திட்ட காப்பு, சங்கிலிக்கு என்னை விடாதை, அண்டைக்கு கலியாண வீட்டை போறதுக்கு அந்த நகையளை வாங்கிவரச் சொல்லி விட்டனி. கள்ளர் சங்கிலி அறுக்கிறாங்கள். இதுகளை வேண்டித் தருவாவோ கொம்மா? எண்டு ரத்தினம் கேட்டவா.பேப்பரிலையும் நேற்றுப் பார்த்தனான். இப்ப வலுமோசமாய் சங்கிலி அறுக்கிறாங்கள். நீ 'றோல் கோட்' வாங்கிப் போட்டுக்கொண்டு போவணை. நானும் ஏ.எல் மட்டுமெண்டாலும் படிச்சுப் போட்டுக் கொண்டு வேலை வெட்டிக்கெண்டாலும் போகப் போகிறேன்"

" பொறடா. எங்களுக்கும் பொம்பிளைப்பிள்ளை இல்லையெண்டு உன்ரை மச்சாள் சரசுவை வளர்த்தனாங்கள். கொம்மான் மாமியாக்கள் வெளிநாடு என்று வசதியாய் இருக்கினம். அவளும் வெளிநாடு போனால் உன்னையும் எடுக்க உதவி செய்வினம்"

அவனுக்கு இப்போ வயது 20 ஆகிவிட்டது.

தாய் சொன்னது போல் மாமன், மாமி உதவி செய்து நோர்வேக்குப் போனான். அங்கே ஐஸ் கிறீம் கொம்பனியில் வேலை செய்து பணம் சம்பாதித்து அம்மாவுக்கு காசு அனுப்பினான். முதலில் தாலிக்கொடி, சங்கிலி ,காப்பு வாங்கும் படியும் சொல்லியிருந்தான். அதன்படியே தாய் வாங்கினாள். அடுத்தது மாடி வீடு கட்டச்சொல்லி காசு அனுப்பினான். அதுவும் நடந்தது. கூடவே தாயாருக்கு நோயும் வந்து விட்டது. அதுவும் மாற்ற முடியாத நோய். யாழ். போதனா மருத்துவமனையில் வைத்தியம் செய்தும் , வீட்டுக்கு டொக்டர்மாரை வரவழைச்சுப் பார்த்தும், லட்ச லட்சமாகச் செலவழித்தும் தனது தாயாரை அவனால் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. தகப்பனும் அந்த மாடி வீட்டில் தனியே இருந்து மனைவியைப் பற்றி நினைத்து கொஞ்ச நாளிலே சுகயீனம் வந்து இறந்து போய்விட்டார். நோர்ர்வேயில் அவனும், ஊரில் அந்த மாடி வீடும் இப்போது அநாதைகள். ■



# தாவல்களுக்கு பின்னால்...!



ராஜ்குமார்

பிரதமரை 'பீயோன்' ஆக்கும் 20 ஆவது சட்டத்திருத்தம் பலத்த பிரயத்தனங்களுக்குப் பின் நிறைவேற்றப்பட்டு விட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் பீயோனாகப் போகும் பிரதமரே இந்த சட்டவரைவை நிறைவேற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்ததுதான். 20 ஆவது திருத்தம் நிறைவேறியதன் பின்னணியில் தாம் கற்றுக்கொண்ட மொத்த வித்தையையும் ராஜபக்சக்கள் காட்டிய கதை இப்போதுதான் கசியத் தொடங்கியிருக்கிறது.

இந்த 20ஆவது திருத்தத்துக்கு எதிராக எதிர்கட்சிகள் மட்டுமல்ல ஆளும்கட்சியினரும், பௌத்த மதபீடத் தலைவர்களும் கிளர்ந்தபோது ஆடிப்போய்விட்டது அரசு. இனி 20 'அவுட்' என்றே பலரும் நினைத்திருந்தனர். மூன்றில் இரண்டு கேள்விக்குறியானது. அப்போதுதான் ராஜபக்சக்கள் தரப்பால் களமிறக்கப்பட்டார் பசில் ராஜபக்ச.

பசிலைப் பொறுத்த மட்டில் பிற கட்சிகளிலிருந்து குதிரை பேரம் பேசி ஆள்களை இழுப்பது என்பது அவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. எனவே களத்துக்கு வந்த பசில், அமைச்சர் ஜேன்ஸ்டன் பெரோவிடம் சஜித்தின் மக்கள் சக்தி எம்.பிக்கள் சிலரை இழுத்தெடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். ஜோன்ஸ்டன் வீசிய வலையில் மக்கள் சக்தியின் டயானா கமமேவும், அரவிந்தகுமாரும் சிக்கினர். இருவருக்கும் இராஜாங்க அமைச்சு பதவிகள் பெற்றுத்தருவதாக உறுதிவழங்கப்பட்டே இழுத்துவரப்பட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

இன்னொரு முனையில் பிரசன்ன ரணதுங்க, நிமல் லன்சா இருவருக்கும் முஸ்லிம் எம்.பிக்களுக்கு தூண்டில் போடும் வேலை கொடுக்கப்பட்டது. ஆனால் அது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை. அரச தரப்பிலிருந்து யாரும் வரமாட்டார்களா, அமைச்சுப் பதவி தரமாட்டார்களா? என்று வாசலை பார்த்த படி காத்திருந்த முஸ்லிம் கட்சிகளின் எம்.பிகளை வளைத்துப் போடுவது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை. ஆயினும் அவர்களும் இராஜாங்க அமைச்சு பதவிகளையே விலையாகக் கேட்டனர்

ஆனால் அது மறுக்கப்பட்டு, மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் போன்ற பதவிகள் தரப்படலாமென சில்லறைகள் சிதற விடப்பட, முஸ்லிம் எம்.பிக்கள் வாயைப் பிளந்தபடி கட்சி தாவத் தயாராகினர்.

ஆனால் சிக்கல் என்னவெனில், வெளியில் ஆள் பிடிக்கும் வேலைகள் சரிவர நடந்தபோதும், உட்கட்சிக் குழப்பங்களைத்தான் சமாளிக்க முடியாமல் இருந்தது. உட்கட்சிக் குழப்பவாதிகளை வழிக்கு கொண்டுவரும் பொறுப்பு ஜயந்த கொட்டகொடவிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் விமல் வீரவன்ச கட்சியின் தலைவர். ஆனால் தன் கட்சியைச் சேர்ந்த விமலைக் கட்டுப்படுத்துவதே அவருக்கு முடியாத காரியமாகிப் போனது. இதனால் கடைசியில் ஜனாதிபதி கோத்தாபய களமிறங்கி, அடங்க மறுத்தவர்களுக்கு நாணயக்கயிறு போட, ஒக்ரோபர் 22 ஆம் திகதி 20 ஆவது திருத்தம் இனிதே நிறைவேறியது.

இப்போது அரசை நம்பி வாக்களித்த பலர் அந்தரிக்கும் நிலைக்கு வந்துள்ளனர். அதில் ஒருவர் டயானாகமகே. இவர் ரெலி போன் சின்னத்துடன் கட்சி ஒன்றை வைத்து ஈ ஓட்டிக் கொண்டிருந்தவர். ரணில்-சஜித் பிணக்கின்போது புட்டுக் கொண்டுவந்த சஜித்துக்கு தனது கட்சியையும் சின்னத்தையும் கொடுத்து தேர்தலில் போட்டியிட வைத்தவர் டயானா. அதற்கு பிரதிப்பலனாக தேசியப் பட்டியல் மூலம் ஒரு எம்.பி. ஆசனத்தையும் பெற்றுக் கொண்டார். அப்படிப் பெற்ற ஆசனத்தை வைத்து இப்போது அரசுடன் சேர்ந்து இராஜாங்க அமைச்சைப் பெற ஆயத்தம் செய்கிறார். அரச தரப்போ அவருக்கு ஏதாவது சப்பையான அமைச்சைக் கொடுத்து சஜித்தின் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த திட்டமிடு கிறது. ஆனால் டயனாவோ.. எனக்கு மகளிர் விவகார சிறுவர் நலன்தொடர்பான அமைச்சே வேண்டுமென்று அடம்பிடிக்கிறார்.


சஜித் தரப்போ அவரைக் கட்சியிலிருந்து தூக்கி எறிய பார்க்கிறது. ஆனால் அவர்களின் தொலைபேசிச் சின்னம் டயானாவுடையது. இந்தநிலையில் அவரை கட்சியிலிருந்து நீக்கினால். தொலைபேசி சிக்கலில் சிக்கலாம் என்று அஞ்சுகிறது சஜித் தரப்பு. இந்தநிலையில் டயானா கமமே செய்த தில்லுமுல்லு ஒன்று இப்போது வெளிவந்திருக்கிறது. டயானா ஒரு இரட்டை பிரஜா உரிமை கொண்டவர் என்பது இப்போது தெரியவந்துள்ளது. முன்னர் இந்த விடயத்தை மறைத்து, தேசியப் பட்டியல் எம்.பி.யான டயானா, இப்போ 20 இல் இரட்டை ப்பிரஜா உரிமை சரத்து நீக்கப்பட்ட பின்னர் தான் ஒரு பிரிட்டன் பிரஜை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே இதனை வைத்து ஏதாவது நடவடிக்கை எடுக்கலாமா என்று ஆலோசித்து வருகிறது சஜித் தரப்பு.

இதேவேளை எதிர்கட்சியிலிருந்த முஸ்லிம் பிரதிநிதிகள் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை சஜித் தரப்புக்கு ஏகத்துக்கு கடுப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ரவூப், ரிஷாட் இருவரையும் எதிர்கட்சியிலிருந்து துரத்த வேண்டும் என்ற கோஷம் எழுந்துள்ளது. இந்த இரு தலைவர்களும் தமக்கு இது பற்றி எதுவுமே தெரியாது என்று சாதித்தாலும் "நீ முன்னாலே போனால் நான் பின்னாலே வாறன்" என்ற ரீதியிலேயே தங்கள் பிரதிநிதிகளை வாக்களிக்க அனுப்பியதாகவும், அடுத்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது இவர்களும் அரச தரப்புக்குப் போய்விடுவார்கள் எனவும் ஊகிக்கப்படுகின்றது. இனி என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ? எல்லாம் கோத்தாவுக்கே வெளிச்சம்.

# அமெரிக்க எச்சரிக்கையும் சீனாவின் நச்சரிப்பும்!

பரமேஸ்வரன்

அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோ கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கைக்கு வந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். மைக் பொம்பியோவின் வருகையைக் கண்டித்து ஜே.வி.பி ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியிருந்தது. அமெரிக்க, சீன வல்லாதிக்க போட்டிக்கு இலங்கையை பலிக்கடாவாக்க வேண்டாமெனக் கூறியே ஜே.வி.பி. இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தது. அத்துடன் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் போஸ்டர்களையும் நாடு முழுவதும் ஒட்டியிருந்தது. ஏனைய இடதுசாரி அமைப்புகளும் தமது கம்யூனிச விசுவாசத்தைக் காட்டுவதற்காக பொம்பியோவின் வருகையைக் கண்டித்துச் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தன. மைக் பொம்பியோவின் வருகையைக் கண்டித்து சீனத் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. " இலங்கைக்கும் சீனாவுக்குமிடையேயான உறவில் அமெரிக்கா தலையிட முடியாது. எமது உறவுகள் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை, அமெரிக்கா இலங்கையின் மீது சவாரி விட முடியாது" என சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மைக் பொம்பியோ வின் விஜயத்தின் நோக்கம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கைக்குறைப்பதே என சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் "சீனா வறிய நாடுகளைத் தனது கடன்பொறிக்குள் சிக்க வைத்து, அந்த நாடுகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் (நவீன காலனித்துவ) செயற்பாடுகளை பல நாடுகளில் அரங்கேற்றியுள்ளது. இந்த விடயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கினால் உங்களால் அதிலிருந்து மீளவே முடியாது" என்பதை மைக் பொம்பியோ ராஜ்பக்ச சகோதரர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.





(மைக் பொம்பியோவின் வருகைக்கு முன்னர் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜதந்திரி டீன் தொம்சன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலும் இதே விடயம் கூறப்பட்டிருந்தது)

ஆனால் அமெரிக்க உதவிகள் அப்படியல்ல, பெரும்பாலும் நன்கொடையாகவே வழங்கப்படுகின்றன என பொம்பியோ, கோத்தாபயவிடம் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளித்த கோத்தாபய " நாங்கள் சீனாவின் கடன் பொறிக்குள் சிக்க மாட்டோம் (சீனாவின் வலையில் விழா மாட்டோம்) "எனப் பதிலளித்தாராம்.

இலங்கையில் கால்பதிக்க முன்னர் இந்தியாவையும் எட்டிப் பார்த்துவிட்டே பொம்பியோ வந்துள்ளார். இதன்மூலமும் ஒரு செய்தியை அமெரிக்கா இலங்கைக்குச் சொல்லியுள்ளது. அதாவது தன்னுடன் இந்தியாவும் நிற்கின்றது என்பதே அது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் அவ்வப்போது பதவி வகித்த ஆட்சியாளர்கள் சீனாவுடன் நெருக்கமான உறவை கொண்டிருந்த போதும், இந்தியாவுக்கே முதலிடம் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்துள்ளனர். பண்டாரநாயக்கவாகட்டும், அவரது துணைவியார் சிறிமாவோ கட்டும் சீனாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த போதும் நேரு குடும்பத்தினருடன் குடும்ப உறவைப் பேணி வந்தனர். ஜே.ஆர், பிரேமதாச போன்றவர்கள் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தமைக்கு இந்தியா தமிழர் பக்கம் சாய்கிறது என்பதே காரணம். இப்போதும் ராஜபக்ச குடும்பத்தினர் சீன சார்பு நிலைப்பாட்டை எடுப்பதற்கு இந்தியா 13ஆவது திருத்தத்தை அமுல் படுத்துமாறு இலங்கையை வலியுறுத்துவதே காரணம். தமிழர் நலன்களில் இந்தியா தலையிடாது விட்டால் இந்தியாவுக்கே முதலிடம் என்பதே தென்னிலங்கை ஆட்சியாளர்களின் நிலைப்பாடு.

மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் அமெரிக்கா, பிரிட்டன் ஊடாக இலங்கைக்கு எதிராக கடுமையான தீர்மானம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கமாட்டோம் என்றபிடிவாதத்தின் காரணமாக 2025இல் சீனாவிடம் இலங்கையை அடகு வைத்து விட்டு செல்லப்போகிறதா தற்போதைய அரசாங்கம். அதைத்தான் ஜனாதிபதி மறைமுகமாக நாங்கள் சீனாவின் கடன்பொறிக்குள் சிக்க மாட்டோம் என கூறியுள்ளாரா? 2025 இல் பதவிக்கு வருகிற ஆட்சியாளர்கள் என்னவாவது செய்யட்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போதைய ஆட்சியாளர்கள் உள்ளனரா? இப்படி நிறையக் கேள்விகள் உள்ளன. ஆனால் பதில்கள் தான் எவரிடமுமில்லை.



# சூப்பர் ஸ்டாரா பவர் ஸ்டாரா?

○ மயூ

தமிழகத்தின் திரையுலக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், தனது அரசியல் பிரவேச அறிவிப்புகளால் "பவர் ஸ்டாராக" மாறிக்கொண்டிருக்கிறார்.

கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக "அரசியலுக்கு இந்தா வருகிறேன், அந்தா வரு கிறேன்" என்று கூறிக்கொண்டிருக்கும் ரஜினிகாந்த் பெயரில் சில நாள்களுக்கு முன்னர் வெளியான அறிக்கை ஒன்று, மீண்டும் இந்த விடயத்தைப் பேசு பொருளாக்கியுள்ளது.

இன்று, நேற்றல்ல ரஜினிகாந்த் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் விடயம் 1992 ஆம் ஆண்டு முதலே பேசப்பட்டு வருகின்றது. ஆனால் 1996ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற, மக்களவைத் தேர்தல்களில் போட்டியிடாத ரஜனி காந்த், அப்போது போட்டியிட்ட வேறு கட்சிகளுக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் 2017ஆம் ஆண்டுதான் ரஜினி காந்த் தனது ரசிகர்கள் மத்தியில் "தனிக்கட்சி ஆரம்பித்து வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவேன்" என்று அறிவித்தார். ஆனால் அது நடக்கவில்லை. ரஜினியின் உடல் நிலையால் அவர் அரசியல் நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டியதாயிற்று.

அவ்வப்போது ரஜினிகாந்த், "நான் எப்போது அரசியலுக்கு வருவேன் என்று எனக்கே தெரியாது" என்பது போன்ற "பஞ்ச்" வசனங்களுடன் தனது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டார். அவரது ரசிகர்களும், காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி என்று நொந்து ரஜினியின் அரசியல் விடயத்தை மறந்திருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் ரஜினி பெயரில் வெளியான அறிக்கை ஒன்று மீண்டும் இந்தப் பிரச்சினையை கிளறி விட்டுள்ளது. அந்த அறிக்கையின் சாராம்சம் இதுதான்.

"எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மாநாடு கூட்டி கட்சிப் பெயரை அறிவிக்க விருந்தேன். ஆனால் எனக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. வைத்தியர்களிடம் கேட்டபோது தற்போதுள்ள கொரோனா சூழ்நிலையில் வெளியில் செல்வது ஆபத்து, அதனால் வெளியே சென்று மக்கள் சந்திப்பில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியுள்ளனர். கட்சி ஆரம்பிப்பதாக இருந்தால் ஜனவரி 15க்கு முன்னர் ஆரம்பிக்க வேண்டும். டிசெம்பர் முடிவை அறிவிக்க வேண்டும். ரசிகர்களும், மக்களும் என்ன சொல்கிறார்களோ அதை ஏற்கின்றேன்" என்பதே அந்தக் கடிதம்.

ஆனால் இப்போது என்னவென்றால் அந்தக் கடிதத்தை தான் எழுதவில்லை என்று அடித்துச் சத்தியம் செய்திருக்கிறார் ரஜினி. ஆனால் அந்தக் கடிதத்தில் உள்ள உடல் நிலை பற்றிய விடயங்கள் சரிதான் என்றும் ஒப்புக் கொண்டுள்ளார். கிட்டதட்ட இதே ரஜினிகாந்த் நடித்த 'படையப்பா' படத்தில் அவர் சொல்வது போல வரும் "இவர்தான் மாப்பிள்ளை, ஆனால் இவர் போட்டிருக்கிற சட்டையைப் பற்றி எனக்குத்தெரியாது" என்கிற வசனம்தான் இந்த அறிக்கையைப் பார்க்கும் போது நினைவுக்கு வருகின்றது. ரஜினி "மக்கள் மன்ற நிர்வாகிகளுடன் பேசி எனது அரசியல் நிலைப்பாட்டை அறிவிப் பேன்" என்றும் கூறியிருக்கிறார். இந்த ஆண்டும் கட்சி ஆரம்பிப்பது பின்தள்ளிப் போனால், அதன்பின்னர் எப்போது அது நடக்கும் என்று ஆண்டவனுக்கும் தெரியாது, அருணாச்சலத்துக்கும் தெரியாது. ரஜினியின் உடல் நிலை, வயது என்பவற்றால் அவரது அரசியல் ஆசை நிறைவேறாதே போகும் என்ற நிலைமை தான் இப்போது அதிகமாக இருக்கிறது. ரஜினிக்கு வாக்களிக்க ஆசைப்பட்டு, பின்னர் தனது மகனாவது வாக்களிப்பான் என்று விருப்பப் பட்டு, சரி பேரனாவது வாக்களிக்கட்டும் என்ற நப்பாசையில் இருந்த ரசிகர்களுக்கு இது இன்னும் அதிர்ச்சியாகத்தான் இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

இதற்கிடையில், நீங்கள் அதற்கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டீர்கள் என்ற பாணியில் சீமான் அறிக்கை விட்டிருக்கிறார். "அரசியல் மிகவும் கடினமான ஆட்டம். உங்களுக்கெல்லாம் வேண்டாம். நீங்கள் மென்மையான உணர்வைப் பிரதிபலிக்கும் கலை ஞன். அமைதியாக இருங்கள். கெஞ்சிக் கேட்கிறேன் வேண்டாம்" என்று கூறியிருக்கிறார் சீமான். ரஜினி எடுத்த முடிவு நல்ல முடிவு என்று கூறியி ருக்கிறார் திருமாவளவன். அரசியல் சகதிக்குள் சிக்கி சின்னாபின்னமாகிவிட வேண்டாம் என்று அறிவுரையும் கூறியிருக்கிறார்.

ஏறத்தாழ தனது அரசியல் பிரவேச நிலைப்பாட்டில் "வரும் ஆனா வராது" என்றிருந்த ரஜனி இப்போது அதனை முற்றாகவே கைவிட்டுவிட்டார் என்றே நினைத்துக்கொள்ளலாம். எதிர்காலத்தில் கட்சி ஆரம்பித்தாலும் அதில் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவே.

இதற்கிடையில் "இப்ப இருந்தால் தான் எப்பயாச்சும்" பார்க்கலாம் என்ற கொரோனா நிலைமை விளங்காது, "இப்ப இல்லன்னா எப்போதும் இல்லை" என்ற வாசகங்கள் பொறித்த ரீசேர்ட்டுடன் ரஜினிகாந்தின் ரசிகர்கள் கூடி, அவரை அரசியலுக்கு வருமாறு கோசம் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

ரஜினி ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்ன மாதிரி என்ற நிலை மாறிப்போய்,இப்போது நூறு தடவை சொன்னாலும் அது நடக்கவே நடக்காது என்ற நிலையே அவரின் அரசியல் ஆசைக்கு ஏற்படிருக்கிறது. ■

# ஜின்பிங்: இன்னொரு மாவோ!

○ ஆர்.பிரகாஷ்



அடுத்த 15 ஆண்டுகளுக்கு சீனாவின் அதிபராகப் பதவி வகிப்பதற்கு ஜின் பிங்கிற்கு அனுமதி வழங்கியுள்ளது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி. இதன்மூலம் மா சே துங் கின் பிறகு சக்தி வாய்ந்த அரசியல் தலைவராக சீனாவில் உருவெடுத்துள்ளார் ஜின்பிங். அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர், சீன மக்கள் குடியரசின் அதிபர், சீனாவின் மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவர், கட்சியின் தனிப்பெரும் தலைவர் என்று ஒரே சமயத்தில் பல உயர் பதவிகளை வகிக்கின்ற நிலையில் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்தப் பதவி நீடிப்பு சேதுங்குக்கு நிகரான இடத்தை ஜின் பிங்குக்கும் வழங்கவுள்ளது. மாவோவின் சிந்தனைகள் எப்படி கட்சியின் சித்தாந்தங்களிலும் நாட்டின் சட்டங்களிலும் தாக்கம் செலுத்தினவோ அப்படி இன்றைய சீனாவில் ஜின்பிங்கின் சிந்தனைகளும் தாக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

### தந்தைவழி அரசியல்

1953ஆம் ஆண்டில் பிறந்த ஜி ஜின்பிங்கின் தந்தை ஜி ஜாங்க்ஸன், மாவோவின் ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பரப்புப் பிரிவின் தலைவராகவும் மாகாணத் துணை முதல்வராகவும் முக்கிய பொறுப்புகளை வகித்தவர். ஆனால், மாவோ முன்னெடுத்த கலாசாரப் புரட்சியின்போது, கட்சியிலிருந்து ஜி ஜாங்க்ஸன் நீக்கப்பட்டதோடு சிறையிலும் அடைக்கப்பட்டார். சிறுவனான ஜின்பிங்கும் யான்சுவான் என்ற ஊரகப் பகுதியில் முகாமில் அடைக்கப்பட்டார்.

ஆயினும், தந்தையின் வழியில் அவர் அரசியல் நோக்கி நகர்வதில் இவையெல்லாம் எந்தத் தடையையும் உருவாக்கவில்லை. ஜின்பிங் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியில் ஈடுபடுத்திக்கொண்டார். அங்கே அவர் தொழிலாளியாக, விவசாயியாக, இராணுவச் சிப்பாயாக வேலைகளைச் செய்து கொண்டே சிங் ஹவா பல்கலைக்கழகத்தில் படித்தார். பியுஜியான், ஷெஜியாங் ஆளுநராகப் பதவி வகித்தவர், 2007ஆம் ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2008ஆம் ஆண்டில் சீனத் துணை அதிபரானார். பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் அதிபராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### நிகரானவர் இல்லை

இதற்குப் பின் கட்சியிலும் ஆட்சியிலும் தன்னை மிக வலுவான இடத்திலும் அதிகாரங்கள் அத்தனையும் தன்னைச் சுற்றிலும் சுழல்வதாகவும் அவர் மாற்றிக்கொண்டார். இன்றைக்கு அவருக்குச் சவால்விடக்கூடிய தலைவர் எவரும் சீனாவில் இல்லை. அத்துடன் வரலாற்றில் மாவோவுக்கு அடுத்து சக்தி வாய்ந்த தலைவர் என்ற இடத்துக்கும் தன்னை நகர்த்திக்கொண்டிருக்கிறார்.

ஜின்பிங்கின் முக்கியமான சாதனை என்றால், மக்கள் இடையேயான ஏற்றத் தாழ்வைக் குறைப்பதிலும், எளிய மக்கள் மேலேறிவரும் பாதையைத் தடுப்பதில் பெரிய தடைக்கல்லாக இருக்கும் ஊழலை ஒழிப்பதிலும் அவர் காட்டிவரும் தீவிரம். இதில் சொந்தக் கட்சியினர், வேண்டப்பட்டவர்கள், விசுவாசிகள் என்ற எந்தப் பாகுபாட்டையும் அவர் பார்க்கவில்லை. மேலும், சாதி அமைப்பு போன்ற தடைச் சூழல் எதுவும் இன்றைய சீனாவில் இல்லை. ஜின்பிங் உண்டாக்கியிருக்கும் மோசமான பாதிப்பு என்றால், சீன அரசிலும் கட்சியிலும் எதேச்சதிகாரத்தை மேலும் அவர் வளர்த்திருக்கிறார்; ஜனநாயகத்தின் நிலை மேலும் மோசமாகியிருக்கிறது. தற்போது வழங்கப்பட்டிருக்கும் இந்த ஆட்சி நீடிப்பு அவரை ஒரு சர்வாதிகாரியாக மாற்றினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. புதிய பதவிநீடிப்பின் மூலம் 2035ஆம் ஆண்டு வரை சீனாவின் அதிபராக ஜின் பிங் இருப்பார். பதவி நிறைவடையும்போது அவருக்கு 82 வயதாக இருக்கும். அதன் பின்னரும் கூட பிறிதொரு ஆட்சி நீடிப்பு வழங்கப்பட்டாலும் வியப்பில்லை. உலகின் தலைமையை அமெரிக்காவிடமிருந்து பறித்து சீனாவை அந்த இடத்தில் அமர்த்துவது ஜின்பிங்கின் முக்கியமான லட்சியம். அவருடைய எந்த உறவும் முனைப்பும் இதை மையமாக உள்ளடக்கியது என்ற புரிதல் முக்கியமானது! இலங்கையும் தற்போது ஜின்பிங்கின் ஒரு பகைடைக்காய் என்பது தான் இன்னும் வேடிக்கை. ■

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

20

# கரகவாத்தி கதிர்காமத்தம்பி



○ இராகன்

சித்திரை மாதம் பிறக்கப்போகிறது என்றால் ஊரில் எல்லோரது மனங்களிலும் ஒருவித உற்சாகம் குடிகொண்டுவிடும். சித்திரை வருடப்பிறப்பை எண்ணி என்று நினைத்துவிடக் கூடாது. அது சித்திரைக் கஞ்சியை நினைத்துத்தான்! சித்திரா பௌர்ணமி அன்று அம்மன் கோயிலில் வார்க்கும் நீர்ப்பாளயத்தை நினைக்கும் போதெல்லாம் கரக வாத்தி கதிர்காமத்தம்பி மனத்திரையில் தோன்றுவார். ஊரில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களை வாத்தி என்று சொல்லிவரும் வழக்கம் இருந்து வருவதால் கதிர்காமத்தம்பியை ஆசிரியர் என்று கருதியே அவரது பெயருடன் வாத்தி என்பதையும் இணைத்துக் கொண்டனர். அவர் கல்லூரியில் கற்பிக்கும் உபாத்தியாயரல்லர். சங்கீதம், சித்திரம், வயலின் கற்பிப்பவர்கள் எல்லாரும் வாத்திமார் என்றால் கரகம் கற்பிப்பவரும் வாத்திதானே என்பது ஊராரின் நியாயம்!

இன்னொரு காரணத்துக்காக கதிர்காமத்தம்பியை ஊரார் வாத்தியார் என்று சொல்லி வந்தனர். வேட்டி உடுத்தி, நஷனல் போட்டு, தோளில் உத்தரியம் தரித்து, கறுப்பு நிறத்தில் சண்கிளாஸ் போட்டு, தலையில் ஒரு எம்.ஜி.ஆர். தொப்பி அணிந்து அவர் வெளிக்கிட்டு வரும் அழகு அதற்கு ஒரு காரணம். அந்த நாளில் எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றத்தின் தலைவர் அவர். எம்.ஜி.ஆர் வாத்தியார் என்றால் கதிர்காமத்தம்பி கறுப்பு வாத்தியார்! எம்.ஜி.ஆருக்கும் கதிர்காமத்தம்பிக்கும் சின்ன வித்தியாசம்தான்! எம்.ஜி.ஆர் ஓரேஞ் கலர் என்றால் கதிர்காமர் நனைஞ்சபனைக் கறுப்பு! அவ்வளவுதான்! ஊர்ச் சந்தியில் நிற்கும் எம்.ஜி.ஆர் சிலைக்கு ஜனன தினத்திலும், மரண தினத்திலும் பெயின்ற் பூசி, மாலைசூட்டி அழகு பார்ப்பதில் வருடா வருடம் அவர் அடைந்துவந்த ஆனந்தம் அளப்பரியது!

சித்திரா பௌர்ணமி தினத்தன்று தூர்ந்த கிணற்றடி அம்மன் கோயில் வேவிலந்தை மரங்களின் நிழலில் நீர்ப்பாளயத்துக்காக ஊரே கூடிவிடும். நான்கைந்து பெரிய கிடாரங்களில் அரிசி அவியும், பெரிய பனையோலைப் பாய் விரித்து குவிந்திருக்கும் மரக்கறிகளை பெண்கள் அரிந்து கழுவி கிடாரங்களில் கொட்டுவர். உடைத்துக் குவிக்கப்பட்ட தேங்காய்களை ஊரில் சேகரித்துக் கொண்டு வந்த துருவுபலகை களில் இருந்தபடி ஆண்கள் துருவிக் குவித்து, பால் பிளிந்தெடுத்துக் கிடாரங்களில் ஊற்றுவர். கிடாரத்தில் பச்சை அரிசி, தேங்காய்ப் பால், மரக்கறி சேர்ந்து கொதிக்கும் போது காற்றில் மிதந்துவரும் வாசனை கஞ்சிக்கான தாகத்தை அடிவயிற்றில் கிளப்பும்! இறக்கிவைத்த கஞ்சிக் கிடா ரத்தில் பிளிந்தெடுத்த எலுமிச்சம் புளியை கலந்ததும் கிளம்பும் வாசனை நரம்பு மண்டலத்தில் சுவறும்! இவ்வளவுக்கும் பின்னணி யாய் நிற்பவர் வாத்தியார்தான். கிடாரத்தில் நிற்பவர் அவர்தான். எதை எந்த அளவில் கலந்தால் கஞ்சி இதம்பேசும் என்ற பக்குவம் அவரது தீர்மானமே. அவ்வளவும் அவரது கைப்பக்குவம்தான்! கஞ்சி காய்ச்சியபடி அவர் பாடும் கூத்துப் பாட்டுகளைக் கேட்கவென கூடிய ஊரவர்கள் காத்திருப்பர். சத்தியவான் சாவித்திரி, காத்தான் கூத்து, அரிச்சந்திர மயானகாண்டம், பூதத்தம்பி என்று பல கூத்துக்களில் வரும் பாடல்களைப் பாடி ஊராரை மகிழ்விப்பார்.

கிடாரத்தில் கஞ்சியைத் துளாவ கையில் வைத்திருக்கும் பச்சைப் பனை மட்டையால் செய்த சவளை வெட்டியானின் தடியாக பாவித்து, கிடாரம் வைத்திருக்கும் அடுப்பிலிருந்து வெளியேறும் புகையை இடுகாட்டுப் புகையாய் எண்ணிக்கொண்டு கதிர்காமத்தம்பியர் பாடும் யாரடி கள்ளி நீ இங்கு.... என்ற அரிச்சந்திர மயானகாண்டப் பாடலைப் பாடும் போது அவர் அரிச்சந்திரனே ஆகிவிடுவார்.

கஞ்சி வார்ப்பதற்குத் தயாராகும் முன்னர் வெட்டுவித்த வடலி ஓலையில் வந்திருப்பவர்களின் உதவியுடன் பிளா செய்யத் தொடங்கிவிடுவார். பச்சை ஓலைப் பிளாவில் சுடுகஞ்சியை வார்க்கும் போது கஞ்சியுடன் ஓலை அவிந்து வரும் வாசனை உயிரை நிறைக்கும். குடிக்கக் குடிக்கத் தெவிட்டாத தேவாமிர்தம் தூர்ந்த கிணற்று அம்மனின் நீர்ப்பாளயம்!

ஊரில் வீடுவீடாகச் சென்று அரிசி, மரக்கறி சேகரிப்பது தொடக்கம் பச்சை ஓலையில் பிளா செய்யும் வரை கதிர்காமத்தம்பியர் ஓடியோடி நீர்ப்பாளயத்துக்கான அலுவல்களைச் செய்து வந்ததன் பின்னால் ஒரு பரம ரகசியம் இருந்தது. நீர்ப்பாளத்தன்று இரவு வாத்தியார் ஆடப்போகும் கரகாட்டம் தான் அவரது உற்சாகத்தின் உறைவிடம் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்த பரமரகசியம்! வருடாவருடம் சித்திரா பௌர்ணமியன்று இரவு அயலூரிலுள்ள முத்துமாரி அம்மன் கோயில் வாயிலிலிருந்து, தூர்ந்த கிணற்றடி அம்மனின் வாயில்வரை தன்னோடு சேர்ந்து கரகம் ஆடுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பிருந்தே வாத்தியார் பத்துப்பேருக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கிவிடுவார். முன்னுள்ள மாதம் முழுவதும் ஒவ்வொரு நாட்களும் மாலைப்பட்ட பின்னர் வாத்தியார் வீட்டு முற்றத்தில் உடுக்கை ஒலித்தபடியிருக்கும்.

பகலில் தங்கள் தொழிலிடத்து வேலைகளை முடித்துக் கொண்டு, மாலையில் ஆடு, மாடுகளை அவிழ்த்துக் கட்டி, அவற்றுக்குத் தீன் போட்டு, வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு வாத்தியார் வீட்டு முற்றத்தில் அவர்கள் கரகம் பயிலத் தொடங்கிவிடுவர். பெற்றோமக்ஸ் வெளிச்சத்தில் அவர்கள் ஆடும் ஆட்டமும், ஒலிக்கும் உடுக்கை ஒலியும் அவர் வீட்டு வேலிப் பொட்டுக்களில் இரசிகர்களைக் கூட்டும்! யாரையும் வீட்டு வளவுக்குள் அனுமதிக்க மாட்டார் வாத்தியார்.

வாத்தியார் வீட்டோடு இணைந்திருந்த மால் கரகங்கள் வைப்பதற்கென அமைக்கப்பட்டிருந்தது. மாலின் உட்கூரையில் அசவு கட்டி கரகங்களும், இரண்டு சோடி பறை வாத்தியங்களும், சில உடுக்கைகளும் தொங்கவிடப்பட்டிருக்கும். அவை வாத்தியாரே வடிவமைத்த கரகங்கள்.

## கிராமத்து மனிதர்கள்...

பறை, உடுக்கை வாத்தியங்களை இசைப்பதில் வாத்தியாருக்கு அளவு கடந்த திறமையிருந்தது. அம்மனுக்காக மட்டும்தான் அவற்றை வெளியே எடுப்பார்! கரகங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள செப்பினாலான கரகக் குடங்களை புளிதேய்த்து பவுண்போல விளக்கியெடுப்பார்.

கரகத்தின் மேலுள்ள அலங்காரங்களைப் புதுப்பிப்பார். பறை, உடுக்கைகளின் தோல்களை வாட்டி, பதப்படுத்தி மெருகேற்றிக்கொள்வார். கரகப் பாடல்களைப் மூத்தவர்களோடு சேர்ந்து பாட இளசுகளுக்குப் பயிற்சியளிப்பார். சித்திரா பௌர்ணமிக்கு முன்னுள்ள மாதம் முழுவதும் வாத்தியாரின் முற்றம் தாளத்தினாலும், ஜதிகளாலும் நிறைந்திருக்கும். ஊராரின் எதிர்பார்ப்பு உச்சத்துக்குச் செல்லும்! மூத்தோர் போட்ட சரியான தாளத்துக்கு இளசுகளின் கால்கள் ஆடிய காலம் அது!

சித்திரா பௌர்ணமியன்று வாத்தியார் குழுவினர் மாரியம்மன் கோயிலிலிருந்து தூர்ந்த கிணற்றடிக் கோயில்வரை தெருத்தெருவாக ஆடி வரும் கரகாட்டத்தைப் பார்ப்பதற்கு வெளியூர்க்காரர்கள்கூட தெருவோரங்களில் காத்திருப்பர். கரகாட்ட ஊர்வலத்தில் பறை ஒலி இருளைக் கிழிக்கும் பாட்டொலி பறையோடு போட்டிபோடும் உடுக்கை ஊரை அழைக்கும். மூன்று நான்கு பெற்றோமக்ஸ்களை தோளில் சுமந்து பக்குவமாய் பொறுப்புணர்வுடன் ஒளியமைப்புச் செய்தபடி நடுத்தர வயதுக்காரர்கள். வழி நீளத்துக்கு ஆடிச் செல்லும்போது இடையிடையே வரும் சந்திகளிலும், கோயில் முகப்புக்களி லும் தரித்து ஆடுவார்கள். பறை ஒலி ஆடுபவர்களை சன்னதங்கொண்டு ஆடவைக்கும். மாரியம்மன் பாடல்கள் கீழ் ஸ்தாயியிலும் மேல் ஸ்தாயியிலும் மாறி மாறிப் பாடப்படும்.

பாடப்படும் பாடல்களுக்கு ஏற்ப ஆடுபவர்கள் ஆடுவார்கள். தாறுபாய்ச்சி பச்சை நிற வேட்டிகள் கட்டி, இடதுபுறத் தோளுக்கும் வலதுபுற இடுப்புக்கும் உடலின் குறுக்காக மலர் மாலை தொடுத்து, மணிக்கட்டுகளில் மாலைகள் சுற்றிக் கட்டி, கால்களில் கொஞ்சும் சதங்கைகள் பூட்டி, அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் சுமந்து, வச்சிரமாய் இறுகிப் போன புரூஸ்லி உடம்புக்காரர்கள் ஆடுவார்கள். கரகாட்டத்துக்கேற்ப வளைந்து கொடுத்தும் துள்ளி மிதித்தும் அவர்கள் ஆடும் ஆட்டம் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தும். வாத்தியார் முன் வரிசையில் ஆடுவார்.

தூர்ந்த கிணற்றடி அம்மனின் வாயிலுக்கு வந்தவுடன் ஆட்டம் களைகட்டும். அம்மனுக்கு முன்னே அவர்கள் ஆடும் ஆட்டத்தில் உச்ச பக்தியும், உக்கிரமும் சேர்ந்திருக்கும். வாத்தியார் ஆடிக்கொண்டே தன்னை மறந்து சன்னதத்தோடு பாடவும் தொடங்குவார். உடுக்கை இசைப்பவர் வாத்தியாரின் முன்னிலையில் குனிந்தும் நிமிர்ந்தும் ஆடியபடி உற்சாகமாய் உடுக்கை வாசிப்பார். கரகாட்டம் கலையாட்டமாக பரவசத்தின் உச்சந் தொட்டு நிறைவுக்குவரும். கரகத்தை அம்மனுக்கு முன்னே இறக்கி வைக்கும் போது வாத்தியார் கண்ணீர் மல்குவார். ஊர்வாழ வேண்டுதல் வைத்து வருடா வருடம் ஆடும் ஆட்டத்தின் நிறைவில் வீழும் இரண்டொரு கண்ணீர்த் துளிகளில் ஊரின் வாழ்வுக்கான வேண்டுதல் உள்ளுறைந்திருந்தது.

பரோபகாரம் இதுதானோ! என்று எண்ணத்தோன்றும். காலம் பொய்க்காது மழை வரும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் கண்களிலும் பிரகாசமாய் தெரியும்!

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 - 1995




11

## ஈழநாதம்

○ தில்லைநாதன் கோபிநாத்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலை கொள்ளத் தொடங்கியதும் புலிகள் தமது போராட்டம் தொடர்பான பிரசாரங்களைத் தீவி ரப்படுத்தினர். போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதற்கான அவர்களது திட்டமிடலில் பத்திரிகை வெளியீடு என்பது பிரதானமாக இருந்தது. அவ்வகையில் இந்தியப் படையினர் வெளியேறத் தொடங்கிய காலத்திலேயே பத்திரிகைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் தொடங்கப்பட்டன. அவ்வகையில் தோன்றிய பத்திரிகையே ஈழநாதம் ஆகும்.

எண்பதுகளில் வெளியான ஈழமுரசின் தொடர்ச்சியாகவே ஈழநாதம் அமைந்தது. ஈழமுரசின் சட்டபூர்வமான உரிமையாளர் கொல்லப்பட்ட நிலையில் மீண்டும் ஈழமுரசைத் தொடங்கிப் பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாக நடத்துவது சாத்தியமாக முடியாத நிலைமை காரணமாகப் புதிய பத்திரிகையாக ஈழநாதம் தொடங்கப்பட்டிருக்கலாம். ஈழநாதம் தொடங்கப்பட்ட போது புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் மீண்டும் போர் மூண்டிருக்க வில்லை; கொழும்பிலும் ஈழநாதத்துக்கான கிளை அமைக்கப்பட்டது; தொடங்கிய இரு மாதங்களில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாக ஈழநாதம் குறிப்பிடப்பட்டது போன்ற தகவல்கள் அக்கால நிலைமைகளை விளக்குவதாக அமைகின்றன.

1990ஆம் ஆண்டு ஈழநாதத்தைத் தொடங்கும் யோசனை தை மாதத்தில் உருவானது. யோசனையைச் செயல்வடிவமாக்கும் பணிகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன. பத்திரிகையாளர்கள், ஊழியர்கள், அச்சகம், அலுவலகம், விநியோக வலையமைப்பு எனச் சகல ஏற்பாடுகளையும் குறுகிய காலத்துக்குள் செய்து பத்திரிகையை வெளியிட வேண்டியிருந்தது.

பத்திரிகைக்கான திட்டமிடலின் முதலாவது கட்டமாக ஆசிரியர் குழு உருவாக்கப்பட்டது. ஈழநாதத்தின் பிரதம ஆசிரியராக மூத்த பத்திரிகையாளர் எஸ். எம். கோபாலரத்தினம் (எஸ். எம். ஜி) பொறுப்பேற்றார். அவருடன் அனுபவம் மிக்கவர்களும் புதியவர்களுமாகப் பலர் இணைந்து கொண்டனர். பத்திரிகைக்கான அலுவலகமாக நல்லூரை அண்மித்து வைமன் வீதியில் 31ஆம் எண் கொண்ட வீடு தெரிவானது. அக்கட்டடம் விமானத் தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்திருந்தமையால் அதனைத் திருத்தும் பணிகள் தொடங்கப்பட்டன. மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு போன்ற பல்வேறு இடங்களில் கிளை அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. பருத்தித்துறை முதல் திருக்கோயில்வரை, தமிழர் பிரதேசங்கள் அனைத்துக்கும் ஈழநாதம் கிடைக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது.

ஆசிரியர் குழுவினரைத் தெரிவு செய்த வேகத்தில் ஏனைய ஊழியர்களை இணைத்துக் கொள்ள முடியவில்லை. செய்தி சேகரிப்போர், அச்சுக் கோப்பாளர்கள், ஒப்பு நோக்குநர்கள், தட்டெழுத்தாளர்கள், விளம்பரப் பகுதியினர், கிளை நிர்வாகிகள், கணக்காளர்கள் எனப் பலதரப்பட்ட ஊழியர்களையும் இணைத்துக் கொள்ளவென விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. குறிப்பாக ஈழமுரசில் பணியாற்றியோரை மீண்டும் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் அனுபவம் மிக்க ஆளணி ஈழநாதத்துக்கு உருவானது.




குறிப்பாக ஆசிரியர் குழு, விநியோக ஏற்பாடுகள், நிர்வாகம் போன்ற பகுதிகளுக்குப் போதிய ஆளணி கிடைத்தது. ஆயினும் அச்சுக் கோப்பாளர்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவியதாக அறிய முடிகிறது. கொழும்பில் விநியோகிக்கவும் தமிழகத்துக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அலுவலகம், ஆசிரியர் குழு, விநியோக ஏற்பாடுகள் போன்றவை யாவும் முழுமையடைந்த நிலையிலும் பத்திரிகையை அச்சிடத் தேவையான அச்சியந்திரங்கள் வந்து சேரவில்லை. கொழும்பிலிருந்து அச்சியந்திரத்தினைத் தருவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது பல்வேறு காரணங்களால் அது தாமதமானதுடன் எப்போது கிடைக்கும் என்பதிலும் தெளிவற்ற நிலை காணப்பட்டது. அச்சியந்திரம் வரும்வரை காத்திருக்க வேண்டாம் என்ற முடிவு எடுக்கப்பட்டு வெளி அச்சகங்களின் உதவியுடன் ஈழநாதம் வெளிவரத் தொடங்கியது.

ஈழநாதத்தின் முதலாவது இதழ் 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை பெரிய அளவில் ஆறு பக்கங்களுடன் வெளியானது.

அன்றைய முரசு
இன்றைய நாதம்
இருட்டினைக் கிழித்து
வெளிச்சத்தைத் தேடும்
விடிவிளக்கைப்
புதைக்கவா முடியும்?

என்று முடியும் கவிதை ஒன்றினை வவுனியா திலீபன் முதலாவது இதழில் எழுதியிருந்தார். ஊர்சுற்றி என்ற புனைபெயரில் எழுதிய ஈழநாதம் ஆசிரியர் ஈழமுரசு நிறுத்தப்பட்டது தொடர்பாகக் குறிப்பிட்டுச் சில ஆண்டுகளின் பின்னர் மீண்டும் வாசகரைச் சந்திப்பதாகப் பதிவு செய்துள்ளார். ஈழமுரசு அச்சகமும் அச்சியந்திரங்களும் இந்தியப் படையினரால் குண்டுவீசித் தகர்க்கப்பட்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டமை பற்றியும் அதன் பின்னரும் ஒரு மாதம் தொல்புரம், சங்கானை போன்ற பகுதிகளிலிருந்து ஈழமுரசு வெளியானமை பற்றியும் ஊர்சுற்றியின் பத்தியில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் ஈழமுரசின் தொடர்ச்சியே ஈழநாதம் என்பது உத்தியோகபூர்வமாகப் பதிவாகியுள்ளது எனலாம்.

ஈழநாதத்தில் உள்ளூர்ச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள் மட்டுமல்லாமல் கட்டுரைகள், கேலிச்சித்திரம், நேர்காணல் போன்றவையும் இடம் பெற்றிருந்தன. வெளியாகத் தொடங்கிய குறுகிய காலத்திலேயே மக்கள் மடல் எனும் பகுதி அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் மடல்கள் நாள்தோறும் வெளியிடப்பட்டன,

ஈழநாதம் தொடங்கப்பட்டு மூன்று வாரங்களில் ஞாயிறு மலர் இணைப்பிதழும் வெளியாகத் தொடங்கியது. கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் தொடர்பான பதிவுகள், சமூகப் பிரச்சினைகளைப் பேசும் உலைக்களம் பத்தி, இலக்கியத் தடம், கவிதைத் தொடர், மருத்துவபீடம், சிறுகதை, குட்டிக்கதை, மகளிர் பகுதி, அங்கதம், போராளிகள் தொடர்பான பதிவுகள், நூல் அறிமுகம், சிறுவர் பக்கம் எனப் பல்வேறு இலக்கிய, சமூக, பண்பாட்டு உள்ளடக்கத்துடன் ஞாயிறு மலர் வெளியாகத் தொடங்கியது. ஞாயிறு மலரில் பிரசுரமான ஆக்கங்களுக்குச் சன்மானமும் வழங்கப்பட்டது.

அச்சுக் கோர்த்துப் பத்திரிகைகள் வெளியான அக்காலத்தில் படமொன்றை இணைப்பதாயின் புளொக் தயாரிக்கப்பட்டு அந்த புளொக்கைப் பாவித்தே படத்தை அச்சில் சேர்த்துக் கொள்ள முடியும். அந்த வகையில் படங்களை எடுப்பதற்கும் அந்தப் படங்களை புளொக்குகளாக்குவதற்கும் ஆரம்பத்திலேயே ஈழநாதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஈழநாதத்தின் புளொக் தயாரிக்கும் பிரிவினரால் ஈழநாதத்துக்கு மட்டுமல்லாமல் வெளி அச்சகங்களுக்கும் கூட படங்கள், புளொக்குகளாக்கப் பட்டு வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது.

ஈழநாதத்தின் ஆரம்ப காலத்தில் ஈழநாதத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் விளம்பரங்கள் தொடர்ச்சியாக வெளியாகி வந்தன. ஈழநாதத்தின் தொடக்க காலச் செலவுகளை ஈடுசெய்யப் பல்வேறு வர்த்தக நிறுவனங்களிடம் பெறப்பட்ட இத்தகைய விளம்பரங்கள் உதவியுள்ளதாகத் தெரிகிறது.

மார்ச் மாத இறுதியில் ஈழநாதத்துக்கான சொந்த அச்சியந்திரம் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தது. ஈழநாதம் தொடங்கப்பட்டு மூன்று மாத காலத்தில் ஒரு நாளிதழுக்கான சகல பிரிவுகளையும் வசதிகளையும் கொண்டதாக அது உருவாகி விட்டிருந்தது. அக்காலத்தில் புலிகளுக்கும் பிரேமதாச அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்து ஜூன் 11ஆம் திகதியன்று மீண்டும் போர் வெடித்தது. பத்திரிகைகளுக்கான தாள், மின்சார வசதி போன்றவை தடைப்பட்டன. யூன் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கோட்டையை அண்டிய சண்டைகளும் அதனுடனிணைந்த விமானத் தாக்குதல்களுமென நெருக்கடியான காலகட்டத்தில் ஈழநாதத்தின் பக்க அளவு ஏ3 ஆக அளவு குறைந்ததுடன் பக்க எண்ணிக்கையும் குறைந்தது, பொ. ஜெயராஜ் ஈழநாதத்தின் ஆசிரியரானார்.

நாதமாய் எழுந்தாய்; எங்கள்
நரம்பினில் உணர்வு ஏற்றும்
சாதனம் ஆனாய்; ஈழத்
தமிழரைச் சூழ்ந்த வெம்மை
வேதனை யாவும் தூர
வீசிடும் போர்வாள் ஆனாய்.

புதுவை இரத்தினதுரை

# மௌன மொழி

**19 இற்கான கவிதைகள்**



**பரிசு பெறும் கவிதை**

கைகளால் காற்றசைத்து
நாவினால் பாட்டிசைத்து
விருத்தர்கள் விரும்பிடும்
விண்ணுலகப் பயணம் –இங்கு
ஓடமது மிதந்திடும்
இறக்கைகளோ இல்லை
கற்பனையின் கண்களுக்கு
வானமே எல்லை!

எ.தமிழ்ப்பிரியா,
திருநெல்வேலி.

கனவுகளை நோக்கித்
தினமும் பயணம்.
ஒன்றாக நால்வரினதும்
ஒற்றுமை துணைவரும்.
தன்னம்பிக்கை உடனே
திறமையும் கைகொடுக்க
பெற்றுக் கொடுப்போம்
வெற்றி உலகை!....

ஆர்த்திகா சுவேந்திரன்
தொல்புரம் கிழக்கு

தார் ஊற்றி பதனிட்ட தரை தனில்
வான்முகில் வரைந்து
ஊடுருவி விமான தடம் பதித்து
இலத்திரனியல் சாதனத்திலன்றி
மெய்நிகராய் உடலசைவுகளோடு
கற்பனையில் கைகளை விரித்த படி
விமானம் செலுத்தி ஒத்திசைவோடு
மகிழ்வாய் விளையாடும் மழலைகள்

சஞ்சிகா திருச்சபேசன்

வரியில் ஆரம்பிக்கும் சிந்தனை
ஆகாய விமானத்தைக்கூட
தரை மீது பறக்க வைக்கும்.
இன்று கோடிட்ட கோலங்கள்
என்றோ ஒரு நாள்
கொடிகட்டிப் பறக்கும் நம்பியிருங்கள்.

ஆர். கே. மேனன்
ஆசிரியர், யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி

இளமையின் எண்ணமும
இளமையின் தூரநோக்கும்
இனங்கண்டு கொள்ள முடியாத
ஆகாயத்தின் முடிவை ஒத்த
இளமையின் கற்பனையும்
மனம் கொண்டதே மாளிகை
என இளமையின் கனவை
யதார்த்த வாழ்வாக்குகிறதோ....!

சதுர்ஜா அருள்லிங்கம்
வவுனியா

விஞ்ஞானமதில் புதுமை காண
மூடர் செயலால்
முளைத்த கொரோனாவெனும்
வைரஸ் எம்மில் பரவாதிருக்க
மெஞ்ஞானம் மறந்தே
விஞ்ஞானமதில் புதுமை செய்வோனும்
மூடரில்லா உலகு தேட
விமானமேறி செல்வோமே !

ந.கஜவாணி
சாவகச்சேரி

வானில் பறக்க
ஆசை என்று
இலட்சியம் கொண்டு
வாழ்ந்தால்
வானம் நமது
கையில் என்று
வாழ்க்கை எமக்கு கூறும்

து.சோபினி,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

விமானத்தை அமைத்து அன்று
வியக்க வைத்தார்கள் ரைட் சகோதரர்கள்
இன்று விந்தைமிகு உலகில் மாற்றத்தால்
இச்சையுடன் பயணம் செய்ய
இனித் தடை விதித்து விட்டது கொரோனா

த.துளசிகா
யாழ். இந்து மகளிர் கல்லூரி

விரல் சூப்பும் சிறுவர் நாம் – விடியற்காலையிலேயே
விளையாட்டாய் விமானத்தில் பறக்கிறோம் வீதியில்
விண்ணுலகில் சஞ்சரிக்க வேறுபட்ட கனவுகளுடன்
விரைந்து நாம் முயன்றாலும்
வீழ்ந்திடுவோர் இவ்வுலகில்
விதிவசமென்பர், விபரீத முடிவென்பர் – முடியாததற்கு
முயற்சிக்கிறாய் நீ என்பர்
விழலுக்கிறைத்த நீர் போல – விண்ணுக்காக கனவு
வெறிச்சோடிப் போனதய்யா

ந.புஸ்பராஜா, காரைநகர்

ஆகாய விமானம் ஒன்று தரையிலே பறக்குதடா!
சிறுவர்கள் இங்கு சித்திர விமானத்தில் பறக்கிறார்களடா!
நிகழ்கால கனவுகள் எதிர்காலத்தில் பலிக்குமடா!
முயற்சிதனை கைவிடாது முயன்று தான் பாருங்களடா!
வெற்றி என்றும் உங்கள் கைகளில் தானடா!

**ச.மாலவன்**, யாழ்ப்பாணம்

அல்லும் பகலும் அழகூட்டும் மழலைகளின் விழிகளால்
விண்மீன்கள் வெட்கித் தோல்வியை ஒப்புக்கொள்கின்றன
கருவறையில் மழலைகள் பெற்ற கதகதப்பை மழலைகளிடம்
காற்றும் கடன் கேட்கும் விஞ்சும் பட்டு மேனியை
கொஞ்சம் தொட்டுப் பார்க்க மலர்த் தோட்டமும் கெஞ்சும்
பார்ப்பவர்களைக் கொள்ளை கொள்ளும் மழலைகளுக்கு எண்ணற்ற ஆசைகள்
இன்றோ மழலைகளின் எண்ணங்கள் எல்லாம்
இனிமையாக வானத்தில் பறக்க வட்டமிடுகிறது

**இ.கிருபிகா**, மிருசுவில்

ஆடம்பரம் நிறைந்திருந்தும்
எதிலும் திருப்திகொள்ளாத மனித மனம்
எதுவும் நிரந்தரமன்று
"போதும் என்று பேரின்பம் கொள்ளும்
பேதையவள் மழலை மனம்
வானளாவிய உயரம்தனை
தொட்டுவிடும் உன் குழந்தை உள்ளம்....

பி.சகானா
திருகோணமலை

வீதியில் இங்கு வெறும் விளையாட்டல்ல
வீரம் கொண்டெழும் வித்துகள் நாம்
உயரப் பறக்க எண்ணம் உண்டு
உலகை வலம் வர மனம் கொண்டு
புதுமை சித்திரம் வரைந்தே நாம்
புயலெனப் புறப்படத் துணிந்தோம்
கனவுகளை நன்றே காண்போம்
கற்பனைகளை நாளை நிஜமாக்குவோம்

சிவரம்யா, யாழ்ப்பாணம்



# மௌன மொழி 20

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**07.11.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப் புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதி யில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

**நட்பா, தாரமா எது சிறந்தது?**

தாரம் என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில் சாதாரண தரத்தில் படிக்கும் போது வந்த நட்பு உயர்தரத்தில் தொடர்வதில்லை. உயர்தர வகுப்பு நட்பு, பல்கலைக்கழகத்தில் தொடர்வதில்லை. வியாபாரத்தில் வந்த நட்பு அரச வேலைக்குப் போனதன் பின் தொடர்வதில்லை. ஆனால் தாரம், பேரப்பிள்ளைகள் காணும் போதும் கூட தொடர்கிறதே. விதிவிலக்காக குழந்தைப் பருவத்திலிருந்தே தொடரும் நட்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன.



# வித்துவான் பதில்கள்!

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்



**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 316 5555




**வித்துவான் ஐயா, இது பரீட்சைகள் நடைபெறும் காலம். உங்களுக்குப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட அனுபவம் இருக்கிறதா?**

ஒரே ஒரு முறை பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமையாற்றினேன். மாணவன் ஒருவன் ஒரு துண்டை வைத்துப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான். நான் அவன் அருகில் போய் என்ன செய்கிறான் என்று பார்த்தேன். அவன் சொன்னான் "நீர் மேற்பார்வையாளராக என்றால் மேலே தானே பார்க்க வேண்டும். கீழே எல்லாம் பார்க்கக் கூடாது" அதன் பிறகு பரீட்சைக் கடமைகளுக்குப் போவதில்லை.

**ஐ.பி.எல்லில் சிறப்பாட்டக்காரர்களை எவ்வாறு தெரிவு செய்கிறார்கள்?**

மு.மதிவண்ணன், அம்பனை.

தேசபக்தியின் அடிப்படையில் முதலில் இந்தியர்களுக்கு வழங்க முடியுமா என்று பார்க்கிறார்கள். அதையும் மீறி அதீத திறமையை வெளிப்படுத்தினால்தான் வெளிநாட்டவர்களுக்கு கிடைக்கும். உதாரணமாக மும்பை இந்தியன்ஸ் வெற்றிபெற்றுவிட்டது. நியூஸி லாந்துக்காரர் ரென்ட் போல்ட் 4 விக்கெட்டுக்களும் இந்தியரான பும்ரா 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றி உள்ளனர். சிறப்பாட்டக்காரராக பும்ரா அறிவிக்கப்படுகிறார். இப்படி எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. நீங்களும் கவனித்துப் பாருங்கள்.



**வித்து டார்லிங், பாடசாலைக் காதலுக்கும் பல்கலைக்கழக காதலுக்கும் என்ன வித்தியாசம்?**

விதுர்சா, கொடிகாமம்.

பார்த்தவுடன் வருவது பள்ளிக்காதல். பார்க்கப் பார்க்கவருவது பல்கலைக்கழக காதல்.

**டியர் வித்தா, தமிழர்களிடையே வாள்வெட்டுக் குழுக்கள், ஆள்வைத்து அடித்தல் முதலிய பழக்கங்கள் எப்போது தொடங்கின?**

சிவபெருமானது யாகத்தைக் குழப்புவதற்காக வீரபத்திரரை அனுப்பிய தக்கனாகிய மாமனுக்கு ஆள் வைத்து அடித்தபோதே அது தொடங்கிவிட்டது.

## பொடுகுத் தொல்லைக்கு நிரந்தரத் தீர்வு



இன்றைய காலத்தில் ஆண்களும் சரி, பெண்களும் சரி பொடுகுப் பிரச்சினையால் அவதிப்படுவதுண்டு. வரண்ட சருமம், ஹார்மோன்களின் அளவில் ஏற்படும் மாறுபாடு, பூஞ்சை போன்ற நுண்ணுயிரித் தொற்றுகள், மனஅழுத்தம், முறையற்ற உணவுப் பழக்கம், தலையைச் சுத்தமாகப் பராமரிக்காமை போன்றவை பொடுகுப் பிரச்சினை உருவாக முக்கிய காரணங்களாகும். இவ்வாறு பொடுகு தொல்லையால் அவதிப்படுபவர்கள், தத்தம் வீடுகளிலுள்ள சில பொருள்களை வைத்தே பொடுகை விரட்டிவிட முடியும். தற்போது அவை என்ன என்பதைப் பார்ப்போம்.

- நாட்டுக்கோழி முட்டையின் வெள்ளைக்கருவைச் சேர்த்து அடித்து அதைத் தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். முட்டை நாற்றம் போக சீயக்காய் பயன்படுத்த வேண்டும். இதை வாரத்தில் இரண்டு நாள் வீதம் செய்து வந்தால் பொடுகுப் பிரச்சினை தீரும்.
- வெந்தயம் இரண்டு ஸ்பூன் அளவு எடுத்து முதல் நாள் இரவே நீர் விட்டு ஊற வைக்க வேண்டும். அதை மறுநாள் காலை எடுத்து நன்றாக அரைத்து தலைமுடி மற்றும் மண்டை ஓட்டின்மீதும் படுமாறு தேய்க்க வேண்டும். அரை மணி நேரம் கழித்து முடியை நீரில் அலச வேண்டும்.
- பசளிக்கீரையை அரைத்து தலையில் தேய்த்துக் குளிக்கலாம். இதை அவ்வப்போது செய்து வந்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.
- வசம்பை தட்டிப்போட்டு தேங்காய் எண்ணெயில் ஊறப்போட்டு அடிக்கடி தலையில் தடவி வந்தாலும் பொடுகுத்தொல்லை சரியாகும்.
- கற்றாழையின் ஜெல்லை தலையில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து குளித்து வந்தாலும் பொடுகு நீங்கும். குளிக்கும்போது தேவைப்பட்டால் சீயக்காய் பயன்படுத்தலாம்.
- எலுமிச்சைப்பழத்தைப் பிழிந்து அதன் சாற்றினால் தலையில் நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். இதைச் செய்து 15 இலிருந்து 20 நிமிடங்களுக்குப் பின்னர் தலையை அலசலாம்.
- ஒரு கைப்பிடி வேப்பம் இலையை எடுத்து, நன்றாக அரைத்து பேஸ்ட் போலச் செய்ய வேண்டும். அதை தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரிலோ அல்லது சாதாரண நீரிலோ தலையைக் கழுவ வேண்டும்.
- துளசி மற்றும் காய்ந்த நெல்லிக்காய்ப் பொடிகளை நீரில் கலந்து பசை போலச் செய்து தலையில் மசாஜ் செய்ய வேண்டும். அரை மணி நேரம் கழித்து தலையை அலச வேண்டும்.

## கீரைச் சப்பாத்தி

சாதாரணமாக சப்பாத்தியை நீங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அதில் கோதுமை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், இவ்வாறு செய்யப்படும் சப்பாத்தியுடன் கொஞ்சம் காய்கறி வகைகளையும் சேர்த்தால், நார்ச் சத்து அதிகரிப்பதுடன், கொழுப்புச் சத்தும் குறையும்.

**தேவையான பொருள்கள்**

கோதுமை - 200 கிராம்
கீரை(ஏதாவது ஒரு கீரை)- 100 கிராம்
புதினா - 150 கிராம்
மிளகாய்த் துாள் - 1 டீஸ்பூன்
தக்காளிச் சாறு - 150 மி.லீற்றர்
உப்பு சிறிதளவு - (சுவைக்காக)

**செய்முறை:**

சப்பாத்தி செய்வதற்குத் தயார் செய்வது போன்றே கோதுமை மாவைத் தயார் செய்துகொள்ள வேண்டும். பின்னர், கோதுமை மாவில், சுத்தம் செய்து கழுவிய கீரையை நன்கு அரிந்து கொட்ட வேண்டும். அத்துடன், அரிந்த புதினா, மிளகாய்த் துாள், தக்காளிச் சாறு ஆகியவற்றையும் கலந்து நன்கு பிசைய வேண்டும். பின்னர், அதை சாதாரணமாகச் சப்பாத்தி செய்வது போலவே, நொன்ஸ்டிக் பானில் எண்ணெய் சேர்க்காமல் சுட்டு எடுத்துப் பரிமாற வேண்டும்.



# பொய்த்துப் போகும் மழை!

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்



சில ஆண்டுகளுக்கு முன்பு, மழையில்லாமல் எங்களுடைய வயலெல்லாம் எரிந்தழிந்தன. பச்சையாக நின்ற பயிரெல்லாம் முதலில் மெல்ல மஞ்சளாக வெளிறத் தொடங்கின. பிறகு மெல்ல மெல்ல வாடிக் கருகின.

"இந்தா இண்டைக்கு மழை வரும்"
"நாளைக்கு வரும்"
"அட்டமிக்குப் பெய்யும்
" பௌர்ணமிக்குக் கொட்டும்"
"கும்பச் சரிவுக்குப் பொழியும்"
"கந்தசஸ்டிக்கு (வானம்) இறங்கும்"

என்றெல்லாம் ஆயிரம் ஆருடங்கள் சொல்லப்பட்டன. சிலர் தங்கள் குல தெய்வங்களுக்குப் பொங்கலிட்டனர். சிலர் குளிர்த்தி செய்தனர். வயல்களில் இருந்த காவல் தெய்வங்களுக்கு மடை கூட வைக்கப்பட்டது. ஆனால், ஒன்றுக்கும் மழை மசியவேயில்லை.

**வானம் இரங்காப் பொழுதுகள்**

வானம் இரங்கவுமில்லை. இறங்கவுமில்லை. அந்த வருசம் மழை பொய்த்தது. மழை பொய்த்தால்... விவசாயிகளின் வாழ்க்கையும் பொய்த்துப்போகும் என்பது அழியா விதி. மாடு, கன்று எல்லாம் செத்து மடியும். அல்லது, விலை போகும். பஞ்சம் தலையெடுத்தால் வேறு என்னதான் வழி. கட்டையில் நிற்கும் கால்நடையை விற்க வேணும். அல்லது கழுத்திலிருக்கும் தாலியை அடைவு கடைக்குக் கொடுக்க வேணும்.

அந்த வருசத்தோடுதான் எங்களுக்குக் கஷ்டமும் வறுமையும் தலையெடுத்தன. வளவில் நின்ற ஆடு, மாடுகளை விற்றே செலவுகளை ஈடுகட்டினார் அப்பா. வருமானம் தரக்கூடிய வளங்களை விற்று விட்டால் பஞ்சம் பிடிக்காமல் என்ன செய்யும்? "பயிர் கருகினால் வறுமைதான் முளைக்கும்" என்று அம்மா சொன்னது இப்பொழுதும் நினைவுக்கு வருகிறது. அதுக்குப் பிறகு ஒரு பத்து ஆண்டுகள் அந்த வறுமைச் சூழலிலிருந்து எங்களால் மீள முடியவில்லை. அந்தப் பத்தாண்டுகளும் நாங்கள் பட்ட பாடும், கெட்ட கேடும் சொல்லி மாளாது.

**மீண்டுமொரு இடர்காலம்**

இப்போதும் அப்படியொரு கஷ்டகாலம் வந்திருக்கிறதோ என்று அச்சமடைய வேண்டியிருக்கு. ஒரு பக்கத்தில் கொரோனாப் பிசாசு. அது வரவர வளர்ந்து, கட்டுப்படுத்தவே முடியாத பெரியதொரு பூதமாக மாறப்போகிறதோ என்று கலக்கத்தை உண்டு பண்ணுகின்றது. மறுபக்கமாக மழையில்லை என்ற ஏக்கம். இன்னும் ஒரு பத்து நாட்களுக்கு மழை இல்லை என்றால் மழையை நம்பிச் செய்கை பண்ணப்பட்ட அத்தனை வயல்களையும் கை விட வேண்டியதுதான். கல்லுண்டாய், செம்மணி, மறவன்பிலவு, கெருடாவில், பூநகரி, இயக்கச்சி, மிருசுவில், ஒட்டுவெளி தொடக்கம் முல்லைத்தீவு, மன்னார் என எல்லா இடத்திலும் கடுமையான வறட்சி. குடிக்கும் தண்ணீருக்கே பல இடங்களிலும் பெரிய பிரச்சினை.

இன்றோ, நாளையோ மழை பெய்தால் பாதிக்கு மேலான வயல்கள் திரும்ப விதைக்க வேண்டி



வரலாம். ஆனால், அப்படி விதைப்பதற்கு , விதை நெல்லுக்குப் பெரிய பிரச்சினை.ஏற்கனவே ஐயாயிரம் வரை போகிறது ஒரு மூடை. இனி அதை விடவும் கூடலாம். அப்படிக் கூடினால், அந்த விலைக்கு நெல்லை வாங்கி, திரும்பவும் உழவு காசைக் கொடுத்து விதைப்பதால் என்ன பயன்?

**லாப நட்டம் பார்த்துப் பயனில்லை**

காணியைச் சும்மா விட முடியாது என்று விதைக்கலாமே தவிர, தொழில், லாபம் என்ற கணக்கில் செய்ய முடியாது. ஆனால், விவசாயிகள் நட்டம் வந்தாலென்ன, லாபம் வந்தாலென்ன ஒரு காணியை வெறுமேதரிசுபத்தவிடமாட்டார்கள். பிறகு அடுத்த போகத்துக்கு புல் எழும்பி, களை பத்தி இரட்டிப்பு வேலையாகி விடும். அதனால் ஊரோடு ஒத்தது என்ற கணக்கில், லாபநட்டத்தைப் பற்றி யோசிக்காமல், செலவழிப்பார்கள். எப்படியும் திரும்ப விதைத்தே தீருவார்கள். இது தனியே விவசாயிகளுக்கு இருக்கிற பொதுக் குணம் என்றில்லை, மீனவர்கள், கள்ளிறக்குவோர் போன்ற இயற்கையை நம்பிய பாரம்பரியத் தொழி லாளர்கள் அத்தனை பேருக்குமுள்ள பொதுப் பிரச்சினை.

**கடலன்னை கைவிடாள்**

மீன் பாடு நல்லாயிருக்கோ இல்லையோ மீனவர்கள் கடலுக்குப் போய்க் கொண்டேயிருப்பார்கள். வலைபடுக்கப்படும். தொழிற்பாடு நல்லாயில்லை என்று கையைக் கடித்தாலும் கடனுக்கு எண்ணையை அடித்துக்கொண்டு கடலில் இறங்குவோரே அதிகம். என்ன, கடலம்மா கைவிட மாட்டாள் என்றொரு நம்பிக்கை. இப்படி நம்பிக்கை வைத்துக் காலை இறக்கிக் கையைக் கடித்துக் கொண்டவர்கள் அதிகம். ஆனாலும் அவர்கள் தங்கள் மரபைக் கைவிடுவதில்லை. கடலை விட்டு நீங்குவதுமில்லை. லாபமோ நட்டமோ எல்லாம் அந்தக் கடலன்னை வரம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**பஞ்சி பார்த்தால் பஞ்சமே!**

இப்படித்தான் பனை, தென்னை வளத் தொழிலாளர்களுடைய நிலையும் வாழ்க்கையும். இயலாது என்றாலும் பனையில் ஏறித்தான் ஆக வேணும். பஞ்சி என்று ஒரு நாள் தொழிலைச் செய்யாமல், மரத்தைச் சீவாமல் விட முடியாது. அப்படி விட்டால், பிறகு தொழில் கெட்டுப்பட்டு விடும். அதற்குப் பின் பஞ்சம் அடுப்படியிலேறிப் படுக்கையில் வந்துறங்கும்.

இதையெல்லாம் ஏன் இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், இந்த வருசமும் மழை பொய்த்துக் கொண்டிருக்கிறது. மழை பொய்த்தால் பயிர், கொடி எல்லாமே பொய்த்து விடும். நோய் முற்றிப் பிணி சூழ் வாழ்வே மிஞ்சும். ஏற்கனவே நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும்போது இயற்கையும் பாதகமாகி நின்றால்...!

அப்படியென்றால் இதற்கு என்ன செய்யலாம்? மழை பொய்த்துப் போனால் நாமென்ன செய்ய முடியும்? என்ற மாதிரியே பலரிடத்திலும் கேள்விகள் எழும்.

**நாமே காரணம்**

இயற்கை பிழைத்துப் பிறழ்வடைந்து போவதற்குப் பெரிய காரணம் மனிதர்களாகிய நாங்களே! நம்முடைய சூழலைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால், அந்தச் சூழலே இயற்கையைக் கெடுக்கும். இயற்கை கெடுதியானால் அதன் விளைவு இப்படித்தான் பிழையாகவும் பிறழ்வாகவும் இருக்கும். இதில் முக்கியமானது காடழிப்பு. மரங்களை தொடர்ந்து வெட்டிக் கொண்டேயிருக்கிறோம். பனைகளை, தென்னைகளை வளவுகளில் உள்ள இலுப்பையை, மாவை, புளியை, வேம்பை, நாவலை, பலாவை என்று என்ன மரம் நின்றாலும் அதையெல்லாம் வெட்டி எடுக்கிறோம். அந்தளவுக்குப் பதிலுக்கு மரங்களை நடுவதுமில்லை. பராமரித்து வளர்ப்பதுமில்லை. அங்கங்கே நடக்கின்ற மர நடுகைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளாகவே மாறி விட்டன. பயனுள்ள மரங்களாக வளர்வது மிகக் குறைவு. ஆனால், முன்னர் அப்படியல்ல. மரங்களை நடுவது நம்முடைய வாழ்க்கை முறையாக இருந்தது. மரங்கள் வருவாய்க்கும் சூழலுக்கும் என்றே வளர்க்கப்பட்டன. நம்முடைய வேலிகள் கூட உயிர் வேலியாகவே, மரங்களாலேயே அமைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது அத்தனையும் மதில்களாகி விட்டன.

> வானம் இரங்கவு மில்லை. இறங்கவு மில்லை. அந்த வருசம் மழை பொய்த்தது. மழை பொய்த்தால்... விவசாயிகளின் வாழ்க்கையும் பொய்த்துப்போகும் என்பது அழியா விதி. மாடு, கன்று எல்லாம் செத்து மடியும். அல்லது. விலை போகும். பஞ்சம் தலையெடுத்தால் வேறு என்னதான் வழி.

**எல்லாம் நமக்கே?**


போதாக்குறைக்கு வன்னியிலும் கிழக்கிலும் உள்ள காடுகளையும் அழித்துக் கொண்டிருக்கிறோம். நின்றால் பால். செத்தால் இறைச்சி என்ற கணக்கில்தான் எல்லாம். கிடைப்பதை எல்லாம் எடுப்போம். எடுக்கக் கூடியதையெல்லாம் எடுத்துக்கொள்வோம். நாம் வாழும் வரை நமக்கே எல்லாம் என்ற மாதிரியான ஒரு மன நிலை பலரிடத்திலும் வளர்ந்துள்ளது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். பொறுப்பானவர்கள் என்றிருப்பவர்கள் இதைக்குறித்து எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. முக்கியமாக அரசியல் தலைமைகள் ஏனோ தானோ என்றே இருக்கின்றன. ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களும் இதுபற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)



# கல்வியே கரையேற்றும் படகாகும்



ம.பா.மகாலிங்கசிவம்

மனித குலத்தை அறியாமையிலிருந்து, வறுமையிலிருந்து, தீய நடத்தைகளிலிருந்து மீட்டுக் கரையேற்றும் படகாக, வரப்பிரசாதமாக அமைந்திருப்பது கல்விச் செல்வமாகும். இதனாலேதான் காலந்தோறும் பல்வேறு அறிஞர்களும் கல்வியின் பெருமை பற்றிப் பாடி வருகின்றனர்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே என்கிறது.**
**சங்க இலக்கியமான புறநானூறு**
**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"** என்கிறது.

இந்தநிலையில் எமது சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சோலைக்கிளியும் "சீறி ஓடாத அருங்கால நதி" என்னும் கவிதையில் கல்வியின் பெருமையைக் கூறியுள்ளார்.

உதுமா லெவ்வை முகம்மது அதீக் என்னும் இயற்பெயர் கொண்ட சோலைக்கிளி கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாம்பு, நரம்பு மனிதன், காகம் கலைத்த கனவு, பனியில் மொழி எழுதி, எட்டாவது நகரம், என்ன செப்பங்கா நீ.. முதலிய எட்டுக் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதை இரண்டு தடவையும் ஜப்பான் அரசின் கலாசார வுங்கா விருதையும் பெற்றவர்.

**"அந்த எழுதத் தெரியாத பையன்**
**இன்று என்னைச் சந்தித்தான்"** என நேரடியாகவே கவிதையை ஆரம்பிக்கின்றார். கல்வியறிவற்றவனின் வரவு கவிஞனின் கவித்துவத்துக்கு உயிர் கொடுக்கிறது.

அடுத்துத் தன்னைச் சந்தித்த அந்தக் கல்வியறிவற்றவன் பற்றிய நுட்பமான வர்ணணை வாசகன் முன், வைக்கப்படுகின்றது.

**"பெரிய பரிதாபத்தின் முழுமொத்த வடிவமாய்**
**என் முன்னே நிற்கிறான்**
**"மீசைக்கு விதைதூவி இளமை மழை பெய்ய**
**பயிர் முளைக்கும் பருவம்"**

இங்கு கல்வியறிவு இல்லாதவனைப் பெரிய பரிதாபத்தின் முழுமொத்த வடிவமாகக் காட்டும் கவிஞர் சோலைக்கிளி அடுத்து வைக்கும் படிமம் அவரது கவித்துவத்தின் உச்ச நிலையை வெளிப்படுத்துகிறது. இளமைப் பருவத்தை மீசை முளைக்கும் பருவம் என்று சாதாரண கவிஞன் கூறுவான். ஆனால் சோலைக்கிளியோ "மீசைக்கு விதை துாவி இளமை மழை பெய்ய பயிர் முளைக்கும் பருவம்" என மிகுந்த கற்பனைச் சிறப்போடு கூறுகின்றார்.

கவிஞன் வந்தவனிடம் கையொப்பம் வைக்கும் படி கூறுகிறார்.

அப்போது நிகழ்ந்ததை "இடது கையின் பெருவிரலை ஊன்றா வெட்கிச் சிரித்தான். அது ஒரு செத்த சிரிப்பு" எனக் கவிஞர் காட்டுகின்றார். இங்கு கல்வியறிவின்மை, கையொப்பம் வைக்கத் தெரியாத நிலை குறித்த நபருக்கே வெட்கத்தையும் தாழ்வு மனப்பாங்கையும் ஏற்படுத்தும் என்பது வெளிப்படுத்தப்படும். அவனது வெட்கச் சிரிப்பு கூடச் செத்த சிரிப்பாக அமைந்துவிடும். கல்வியறிவற்ற நிலை கல்லாதவருக்கு மட்டுமல்ல கல்லாதவனைக் காண்பவனுக்கும் கடுமையான வேதனையை ஏற்படுத்தும் என்பது

**"என் இதயம் கழன்று**
**அவன் இட்ட**
**ஒப்பத்தின் மேல் விழுந்து**
**கத்தியது**
**பின் கருகிப் பற்றியது"** என்னும் அடிகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு கவலைப்படுவதுடன் மட்டும் கவிஞர் நிற்கவில்லை கல்வியறிவு இல்லாதவனின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்றும் சிந்திக்கின்றார்.

**"அவன் காதல் உணர்வுகளை என்னென்று ஒருத்திக்கு**
**எழுதுவான் வருங்காலம்**
**அழகு முகம்**
**கீழுதடு இரத்தச் சிவப்பு**
**பெண் விழுவாள் இவற்றில் மயங்கி**
**காகம் போல் அவன் விழுந்தவனின் வேலி ஓரமெல்லாம்**
**கரைந்து திரிவானோ**
**எழுதவருகின்ற உணர்ச்சிகளை**
**ஒலியாக்கி வந்திருக்கக்கூடாது**
**அவன் இன்று அலுவலுக்கு**
**எனக்கு**
**நிறைய வேலைகள் இருக்கின்ற தினம் இன்று**
**இனியென்ன**
**நானில்லை**
**அந்த எழுதத் தெரியாத வருங்கால மனித நதி**
**போனாலும் நான்**
**இருந்தபடி கதிரையிலே"**


என்னும் பகுதி காதலியின் வீட்டின் முன் நின்ற காகம் போல் கரையாமல் தனது காதல் உணர்வுகளை கடிதமாகவோ, குறுந்தகவலாகவோ அனுப்புவதற்காவது எழுத வாசிக்க தெரிந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. கவிதையின் நிறைவிலே கல்வியறிவற்றவனை எழுதத் தெரியாத வருங்கால மனித நதியாக உருவகித்துக் கவிஞர் கூறும் விடயம் உலக மக்கள் அனைவருக்குமே முக்கியமான செய்தியாக அமைகிறது.

**"உலகப் பாடசாலை அனைத்தையுமே நினைத்துவிட்டு**
**எண்ணுகிறேன்**
**அந்த நதி வரும் நாளில்**
**சீறி ஒலியெழுப்பி ஓடாது**
**உறையும் சிறு துளியாய்"**

ஒரு பெரிய மனித நதியையே கல்வி அறிவில் சிறு துளியாக உறையச் செய்து விடும். வாழ்வில் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது. கல்வி அறிவற்றவன் தனக்கு மட்டுமன்றி பார்ப்பவர்களுக்கும் பரிதாபத்தையும், துயரத்தையும் ஏற்படுத்துவனாக இருப்பான்.

எனவே கிடைக்கின்ற வாய்ப்புக்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கல்வியைக் கற்போம்! கல்வியால் உயர்வோம்!

தேன் சுடு



# பொய்த்துப் போகும்...



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

காடழிப்பு, மணல் அகழ்வு மட்டுமல்ல, குழாய்க்கிணறு என்ற ஆழ்துளைக் கிணறுகள் இப்பொழுது வகைதொகையில்லாமல் கண்டபாட்டுக்கு அடிக்கப்படுகின்றன. காணியில் இடம் மிச்சமாகிறன. கிணறை வெட்டிக் கட்டுவதற்குச் செலவாகும் காலத்தை விட விரைவாக குழாய்க்கிணறுகளை அடித்து விடலாம்.

ஆழத்துக்கொண்டு சென்று குழாய்களை இறுக்குவதால் கோடைகளில் உருவாகும் தண்ணீர்ப்பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டு பலரும் குழாய்க்கிணறுகளையே அடிக்கிறார்கள். இது குறித்து நீர்த்துறை சார்ந்தோரின் ஆய்வுகள், பரிந்துரைகள், அறிவுறுத்தல்கள் என எதுவுமே கணக்கில் கொள்ளப்படுவதில்லை. இதை ஒரு சரியான முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கு படுத்தலின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று எந்தத் தலைமையும் யோசிக்கவேயில்லை. இப்படித்தான் அனைத்து விடயங்களிலும் தலைமைத்துவமும் வழிகாட்டலும் இல்லாமலே மக்கள் இன்றுள்ளனர்.

### சூழலைக் காத்த புலிகள்

மழை, தண்ணீர்ப் பிரச்சினை, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றிக் கதைக்கும் போதெல்லாம் தவிர்க்க முடியாமல் விடுதலைப் புலிகளுடைய நினைவுகளே வருகின்றன. அவர்கள் இதையெல்லாம் எப்படிக் கவனித்தனர். கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்! என்றே யோசிக்கத் தூண்டுகிறது. இதற்குக் காரணம், அவர்கள் இந்த மண்ணை நேசித்தனர். மக்களை நேசித்தனர்.

மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தங்களை அர்ப்பணித்தனர். அதற்காக தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். செய்யத் துணிந்தனர். இதனால் தாம் நேசித்த மண்ணையும் அதன் வளங்களையும் பேணிப் பாதுகாத்தனர். அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அப்படித்தான் தங்களுடைய மக்கள் சிறப்பாக, நல்ல பண்பாட்டுடன், நல்ல சூழலில் வாழ வேண்டும் என்று விரும்பினார்கள். அந்தக் கனவைச் சாத்தியப்படுத்துவதற்காக அவர்கள் பாடுபட்டனர்.

### நெஞ்சு பொறுக்குதில்லையே

இன்றுள்ள தலைமைகளோ மக்களையும் மண்ணையும் சூழலையும் வைத்துத் தம்மை வளப்படுத்திக் கொள்கின்றன. இவையெல்லாம் தமது நலனுக்கானவையே என்றே எண்ணுகின்றன. இப்படிச் சிந்தித்தால் எப்படி விடிவும் விடுதலையும் சாத்தியாகும்?

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைக்கையில்" என்ற பாரதியும் "நீர் இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு - (குறள் 20) என்ற வள்ளுவரும் இப்போதிருந்தால் என்ன சொல்வார்கள்?

**தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் 'பூகோள' அரசியல் தொடர்பில் அதிகம் கருத்துக் கூறுபவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தற்போது இலங்கையைச் சுற்றி நகரும் பூகோள அரசியல் தொடர்பாகவும், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை விடயம் பற்றியும், கட்சியிலிருந்து மணிவண்ணன் நீக்கப்பட்டமை அதனோடு எழுந்த விவகாரங்கள் தொடர்பிலும், 'உதயன் – சஞ்சீவிக்கு' அவர் வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**



சந்திப்பு: ஏ.ஏ

**கேள்வி : உங்கள் கட்சியிலிருந்து சட்டத்தரணி மணிவண்ணனை நீக்கியிருந்தீர்கள். அதற்கு அமைவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை பிரதி நிதித்துவப்படுத்திய அவரது மாநகர சபை உறுப்புரிமையை நீக்கவும் நடவடிக்கை எடுத்தீர்கள். நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. மணிவண்ணன் விவகாரத்தில் நீங்கள் அவசரப்பட்டுவிட்டதாக கருதுகின்றீர்களா?**

**பதில்** ஒருபோதும் இல்லை. மணிவண்ணன் தொடர்பில் தற்போது எமக்குத் தெரியவந்துள்ள விடயங்கள் முன்னரே தெரிந்திருந்தால் அவரைத் தேர்தலில் போட்டியிடுவதற்கே அனுமதித்திருக்க மாட்டோம். உலகவல்லரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றுவது தொடர்பில் கதைக்கும் நாங்கள், மணிவண்ணனின் நடவடிக்கைகளைக் கவனிக்காமல் விட்டமை தொடர்பில் எமது கட்சிக்குள்ளும் சரி, வெளியிலும் பலர் எங்களிடம் கேள்வி எழுப்புகின்றார்கள். நானும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் கஜேந்திரனும் இதற்குப் பொறுப்பேற்றாகவேண்டும்.

## முன்னணி உருவாகியபோது மணிவண்ணன் இருக்கவில்லை

**கே: 2010ஆம் ஆண்டு மிகமோசமான காலகட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆரம்பிக்கும்போது அதில் பிரதானமானவர்க ளுள் ஒருவராக இருந்தவர் மணிவண்ணன். கட்சியின் மூன்று தூண்களாக நீங்கள் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) செயலர் (கஜேந்திரன்), மணிவண்ணன் ஆகியோர் நோக்கப்பட்டனர்...?**

ப: (இடைமறித்து) நீங்கள் சொல்வது தவறு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நானும், கஜேந்திரனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் இணைந்தே ஆரம்பித்தோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவெ டுக்கப்பட்ட பின்னர் வேட்பாளர்களைத் தேடினோம். பேராசிரியர் வி.பி.சிவநாதன், வரதராஜன் ஆசிரியரையும் மணிவண்ணனையும் அறிமுகப்படுத்தினார். கட்சியை உருவாக்குவதில் மணிவண்ணனுக்கு எதுவித தொடர்பும் இருக்கவில்லை. இதை நாங்கள் கடந்த 10 ஆண்டுகளாகவே கூறிவரு கின்றோம்.

**கே: மணிவண்ணன் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னரே கொள்கையிலிருந்து சறுக்கத் தொடங்கியதாக தங்களால் பகிரங்கமாக பல இடங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?**

ப: மணிவண்ணன் ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள்சென்றுவிட்டார். அதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. அவரது பிழையான பாதை தொடர்பான விவரங்கள் விரைவில் வெளிவரும்.

## கூட்டமைப்பின் நிலைப்பாடே மணியின் நிகழ்ச்சிநிரல்

**கே: நிகழ்ச்சி நிரல் என்று நீங்கள் எதைக் குறிப்பிடுகின்றீர்கள்?**

ப: தமிழ் அரசியலை முடக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், விக்னேஸ்வரனினதும் நிலைப்பாடுக ளுக்குள் அவர் சென்றுவிட்டார்.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு மணிவண்ணன் விரும்பவில்லை. அந்தக் காலப் பகுதியில் தமிழ் மக்கள் பேரவையில் நாங்கள், சுரேஸ் பிரேமச்சந்திரன் தரப்புடன் இருந்தோம். ஒன்றாக உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்தியாவுக்குச் சென்று வந்த பின்னர் ஆனந்தசங்கரியின் உதயசூரியன் சின் னத்தில் போட்டியிடவேண்டும் என்றார். 2004 ஆம் ஆண்டு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனாலேயே துரோகியாக அடையாளப்படுத்தப்பட்டவர் ஆனந்தசங்கரி.

## மறுத்தவர் மனம் மாறினார்

எனவே உள்ளூராட்சித் தேர்தலை நாங்கள் தனித்து எதிர்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டோம். தனித்துப் போட்டியிட்டால் ஓர் ஆசனம் கூட வெல்ல முடியாது என்று மணிவண்ணன் கூறினார். அவரை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முதன்மை வேட்பாளராக நியமிக்க நாம் கேட்ட போது முதலில் மறுத்துவிட்டார். உதயசூரியன் சின்னத்தில் இணைந்து போட்டியிட வேண்டும் என்று கட்சிக்குள் மிகப்பெரும் அழுத்தத்தை அவர் கொடுத்தார்.

இதற்கிடையில் ஊடக ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றில், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் யார் என்ற கேள்வி எங்களிடம் முன்வைக்கப்பட்டது. இதன்போது மணிவண்ணனை நாம் கேட்டு அவர் மறுத்துவிட்டார் என்றும் அதனால் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த தீபம் திலீசனை நியமிக்கப்போகின்றோம் என்றும் கூறினோம்.

ஆனால் மறுநாள் யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை முதன்மை வேட்பாளர் மணிவண்ணன்தான் என்றவாறு செய்தி வெளியாகியது. இதனைப் பார்த்த பலர் மணிவண்ணனுக்கு அழைப்பு எடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர். உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெல்வதற்கு வாய்ப்பு இருப்பதாக அப்போதுதான் மணிவண்ணன் தெரிந்து கொண்டார். கட்சி தேர்தலில் தோற்கும் என்பதால் போட்டியிட மாட்டேன் என்று முதலில் சொன்னவர், இதன் பின்னரே தனது முடிவை மாற்றினார்.

நாங்கள் பூகோள அரசியல் கதைக்கும் வரையில் வல்லரசுகளே எங்களைத் தோற்கடிக்கும். சதி செய்தாவது தோற்கடிக்கும்.

## மாறச் சொன்னார் மணி

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் ஓர் ஆசனத்தைக்கூடக் கைப்பற்றவில்லை. இதனால் . நாங்கள் கொள்கையை மாற்றவேண்டும். கொள்கையை மாற்றாமல் வெல்ல முடியாது என்று கருத்தைத் தெரிவித்து மணிவண்ணன் ஒதுங்கிப் போனார். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து வாக்கெண்ணும் நாள் இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

நாம் முன்னெடுக்கும் அரசியலை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. இதனால்தான் நானும், செயலரும் அவரைத் தொடர்ந்து அரசியலில் இழுத்து வைத்திருந்தோம்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்திலும், விக்னேஸ்வரன் தரப்புடன் நாங்கள் இணையாவிடின் ஓர் ஆசனத்தைக் கூட கைப்பற்ற முடியாது என்று மணிவண்ணன் கூறியிருந்தார். அவருக்கு யதார்த்தம் விளங்கவில்லை.

நாங்கள் தோல்வியடைவோம் என்பதைச் சொல்லி, ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் கொண்டு செல்லும் வகையில்தான் அவர் 2015ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றார். இப்போது அது எங்களுக்குப் புரிகின்றது.

## கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிப்போம்

**கே: உள்ளூராட்சிச் சபைகளில் தொங்கு சபைகளே அமைந்தன. பெரும்பாலான சபைகள் கூட்டமைப்பின் வசம் உள்ளன. இந்த ஆண்டு உள்ளூராட்சி சபைகளில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுவது தீர்க்கமான ஒன்றாக உள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை உள்பட உள்ளூராட்சி மன்றங்களில் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் உங்கள் கட்சி உறுப்பினர்கள் எத்தகைய நிலைப்பாடுகளை எடுக்கப் போகின்றார்கள்?**

ப: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பல சபைகளில் தவிசாளர் பதவியை வைத்துக் கொண்டு எங்களது உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றவில்லை. அத்தகைய சபைகளில் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராகவே எங்களது உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள். யாழ்ப்பாணம் மாநகர சபை தொடர்பில்

உறுப்பினர்களுடன் க
முடிவு எடுக்கப்படும்.

## இன்னொரு கூட்டமை
## உருவாக்க துணைபே

**கே: நாடாளும**
**வுகள் தமி**
**ளுக்கு ஓ**
**விடுத்திரு**
**னர் தமிழ்த் தேசியக்**
**ளுக்கு எதிரான ந**
**ஓரணியில் நின்று**
**நடத்தினர். தமிழ்த்**
**ஒற்றுமை முயற்சி**
**தொடர்ந்தும் பங்கே**

ப: தமிழ்த் தே
னணி மாத்
தேசியக்
இருக்கும்
ரன் தயாரித்த ஒற்றையாட்
ஏற்றுக் கொண்டு அதன்
தான் பேச்சுக்கள் முன்னெ
டும் என்று சொல்கின்ற கட்
தமிழ்த் தேசியக் கட்சிகள
யாது. ஜனாதிபதித் தேர்த
தமிழ்க் கட்சிகளின் பேச்
ஒற்றுமையை உருவாக்கு
புக்கள் இருந்தன. ஒற்றை
கொள்வோம் என்ற அடி
கையில் அவர்கள் துரோ
யால்தான் அன்று ஒற்றுமை
மல் போனது.

இவர்கள் தமிழ்த் தேசிய
யாக இருப்போம் என்று
பார்களோ, எமக்கும் இ
ஏமாற்றமாட்டார்கள்
உருவாகும் வரையில்,
றுமை இருக்கப்போவதில்
தமிழ்த் தேசியக் கூட்ட
இன்னொரு அமைப்பை
நாங்கள் தெரிந்து கொண்
முடியாது. மக்கள் இதனை
கொள்வார்கள்.

## சீனாவின் பிடிக்குள் இ

**கே: நீங்கள் அ**
**பூகோள அ**
**கனிந்து வ**
**கின்றீர்களா**

ப: நிச்சயமாக
பூகோள அ
நாம் கூறுப
கிண்டலடி
அப்படியொன்று கிடைய
னார்கள். இன்று எல்லோ
சியல்தான் கதைக்கின்றா

# நாங்கள் அப்போது சொன்னதே இப்போது நடக்கிறது!



ளுடன் கலந்தாலோசித்து
ப்படும்.

**கூட்டமைப்பை துணையோகோம்**

**நாடாளுமன்றத் தேர்தல் முடி வுகள் தமிழ்த் தேசியக் கட்சிக ளுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்திருந்தன. அதன் பின் ழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்க எதிரான நடவடிக்கைகளுக்கு ல் நின்று போராட்டங்களை ர். தமிழ்த் தேசியக் கட்சிகளின் ம முயற்சியில் தங்கள் கட்சி ந்தும் பங்கேற்குமா?**

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி மாத்திரம்தான் தமிழ்த் தேசியக் கொள்கையுடன் இருக்கும் ஒரு கட்சி. சுமந்தி ஒற்றையாட்சி அரசமைப்பை டு அதன் அடிப்படையில் ள் முன்னெடுக்கப்பட வேண் ல்கின்ற கட்சிகள் ஒருபோதும் க் கட்சிகளாக இருக்க முடி தித் தேர்தலுக்கு முன்னரான களின் பேச்சுக்களின் போது உருவாக்குவதற்கான வாய்ப் ன. ஒற்றையாட்சியை ஏற்றுக் என்ற அடிப்படைக் கொள் ர்கள் துரோகமிழைத்தமை று ஒற்றுமை சாத்தியமில்லா

ழ்த் தேசியத்துக்கு நேர்மை ாம் என்று எப்போது நிரூபிப் மக்கும் இனியும் இவர்கள் டார்கள் என்ற நம்பிக்கை ரையில், கொள்கையில் ஒற் ப்போவதில்லை.
க் கூட்டமைப்பைப் போல மைப்பை உருவாக்குவதற்கு து கொண்டே துணைபோக கள் இதனை ஒரு நாள் புரிந்து
.

**டிக்குள் இலங்கை**

**நீங்கள் அடிக்கடி கூறிவரும் பூகோள அரசியல் இப்போது கனிந்து வருவதாகக் கருது கின்றீர்களா?**

நிச்சயமாக. 2010ஆம் ஆண்டு பூகோள அரசியல் குறித்து நாம் கூறும்போது பலரும் கிண்டலடித்தார்கள்.
று கிடையாது என்று கூறி று எல்லோரும் பூகோள அர தக்கின்றார்கள்.

இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கின்றது. இலங்கைத் தீவைக் கையாளுவதற்கு ஒவ்வொரு வல்ல ரசும் கடும் முயற்சி எடுக்கின்றது. இன்றைய சூழலில் சீனாவின் கை ஓங்கியுள்ளது. ராஜ பக்சக்களின் முதல் சுற்று பத்து ஆண்டுகளில் சீனாவிடமிருந்து கடன்களைப் பெற்று, தன்னைத் தவிர்த்து இலங்கை இயங்க முடி யாத சூழலை சீனா ஏற்படுத்தியுள்ளது.
முன்னைய காலங்களில் மேற்கு இலங்கை யில் ஆதிக்கம் செலுத்தியது. 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் இந்தியாவும் ஆதிக் கம் செலுத்தியது. பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கும் மேற்குக்கும் நல்ல உறவு ஏற்பட்டது.
ஆனால் அதன் பின்னர் இலங்கை சீனாவின் பிடிக்குள் சென்று விட்டது. மேற்கும், இந் தியாவும் தங்களின் பிடிக்குள் இலங்கை யைக் கொண்டு வருவதற்கான நகர்வுகள் தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.
இலங்கைத் தீவை ஆளுவது சிங்கள பௌத் தம். அந்த சிங்கள பௌத்தத்துக்கு அழுத் தம் கொடுக்கக் கூடிய ஒரே ஒரு விடயம் 'தமிழ்த் தேச அரசியல்'. இந்த நிலைமையில் தமிழர் அசைக்க முடியாத உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்கவேண்டும். தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம் தொடர்பா கவும், தமிழ்த் தேசத்தின் இறைமையின் அங்கீகாரம் தொடர்பாகவும் அசைக்க முடி யாத உறுதியான நிலைப்பாட்டுடன் இருந் தேயாகவேண்டும்.

**மேற்கின் துணையோடு சாதிப்போம்**

**கே: எந்தத் தரப்பு ஊடாக இதனைத் தமிழர் தரப்பு சாத்தியமாக்கப் போகின்றது?**

**ப:** மேற்கின் ஊடாகத்தான். சீனாவைப் பொறுத்தவரை யில் எந்தவொரு நாட்டிலும் அந்த நாட்டின் அரசின் பக் கமே சீனா நிற்கும். மேற்கு அப்படியல்ல. மேற்குக்கு தங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு அரசையே மாற்றவேண்டும்.
மேற்குக்கும் இந்தியாவுக்கும் ஒரு தேவை இருக்கின்றது. தமிழர் அரசியலைக் கையா ளாமல் சிங்கள பௌத்தத்தை தங்கள் வழிக்கு கொண்டு வரமுடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.
சிங்கள -பௌத்தம் இந்தியாவை ஓர் நிரந்தர எதிரியாகப் பார்க்கின்றது. இந்தியாவிலிருந் துதான் மன்னர் காலத்திலேயே இலங்கை மீது படையெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. இலங்கையை முழுமையாக ஆக் கிரமிக்கும் நோக்குடன்தான் இந்தியா இருக்கின்றது. இதனால் இந்தியாவை தனது எதிரியாகவே சிங்கள பௌத்தம் பார்க்கும். இந்தியாவின் அந்தப் போக்குக்கு, இந்தியா வுடன் கலாசார ரீதியாக இணைந்து போகக் கூடிய தமிழர்களைப் பாவித்துத்தான் இந்தியா எதனை யும் செய்யும் என்பதால் சிங்கள பௌத்தத்துக்கு நாங்களும் எதிரி. மேற்கின் காலனித்துவத்திலிருந்து விடுபடுவதற்கு சிங்கள பௌத் தம் மேற்குக்கு எதிரான சிந்தனை யையும் கொண்டிருக்கின்றது. அது அநாகரிக தர்மபாலா காலத் திலிருந்து இருக்கின்றது.
இதனால் இந்தியாவும், மேற்கும் இலங்கையை கடந்த காலங்களில் அரசை வழிநடத்தக் கூடிய தலை மைத்துவத்தை உருவாக்கி கையாண்டிருக்கின்றன. ஆனால் நிலைமை இன்று அப்படி அல்ல. சிங்கள பௌத்தம் இன்று பெரும் எழுச்சி கண்டிருக்கின்றது. குறிப்பாக ராஜபக்சக்களின் காலத்தில் அது உச்சத்தை தொட்டிருக்கின்றது. எனவே அழுத்தம் கொடுத்துத்தான் கையாள முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு தமி ழர் அரசியல் மிக முக்கியம். இதனை விட்டால் அவர்களுக்கு வேறு வழியில்லை.

**நாமே பூகோள அரசியலைக் கையாளும் தலைமை**

**கே: இவ்வாறான சூழலில் தற்போ துள்ள பூகோள அரசியலை கையாளப் போகின்ற தமிழ் தலைமை எது?**

**ப:** நாங்கள் மட்டும்தான். ஏனெனில் ஏனைய தமிழ்த் தரப்புக்கள் கூட்டமைப்பு, விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு விசுவாச மாக, இந்தியா சொல்வதை கண்ணைமூடிக் கொண்டு செய்கின்ற தரப்பாகத்தான் இருக் கின்றன.

**கே: பூகோள அரசியலை கையா ளப்போகின்ற தரப்பு நீங்கள் மாத்திரம் தான் என்று குறிப் பிட்டிருந்தீர்கள். ஆனால் இதே வல்லரசுகள் பூகோள அரசியலை பேசும் உங்களை தோற்கடிக்க சதி செய் யும் என்றும் குறிப்பிடுகின்றீர்கள். அப்படியானால் இதனை எவ்வாறு கையாளப் போகின்றீர்கள்?**

**ப:** இது எதிர்பார்க்கப்படும் விடயம். இதையும்தாண்டி நாங்கள் செல்வோம். இதுவரையும் நாங்கள் வளர்ந்திருக்கின்றோம்.
இந்தியாவுக்கோ மேற்குக்கோ நாங்கள் எதிரிகள் அல்ல. அதில் நாங்களும் தெளிவாக உள்ளோம். அவர்களுக்கும் அதில் தெளிவு. தமிழ் அரசியலை கையாள்வதற்கு முகவர் களை வைத்துக் கொண்டு, அவர்களைக் கொண்டு சிங்கள தேசத்தை கையாள்வது தான் வல்லரசுகளின் முதல் தெரிவு. தமிழ் மக்களும் அந்த முகவர்களுக்கு ஓர் அங்கீ காரத்தைக் கொடுத்து வருகின்றார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இறுக்க மாக பயணிக்கக் கூடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு தமிழ் மக்கள் என்று முழுமையான ஆணையை வழங்குகின்றார் களோ அப்போது எங்களுடன் பேரம் பேசும் நிலைக்கு வல்லரசுகள் தள்ளப்படும்.

**கே: கடந்த காலங்களில் சீனாவைக் காட்டி இந்தியாவை வளைத் துப்போட்டதைப்போன்று இப் போது மேற்குலகையும் இலங்கை வளைத்துப்போட முயற்சிக்கின்றதா? கடந்த காலங்களில் அமெரிக்கா, ராஜ பக்சக்களுக்கு கொடுத்த நெருக்குதல் கள் அழுத்தங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது இங்கு வந்து சென்ற அமெ ரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம் பியோ இலங்கைக்கு பிரயோகித்த அழுத்தம் என்பது மிக மிகக் குறைவு. கடந்த காலங்களில் மேற்குல இராஜதந் திரிகளின் இலங்கைப் பயணத்தின் போது தமிழர் தரப்புக்களைச் சந்திக்கா மல் செல்வதும் இல்லை. ஆனால் இம் முறை அவை எதுவும் நடைபெறவில் லையே? அமெரிக்கா இலங்கை அரசு பக்கம் சாய்கின்றதா?**

**ப:** தமிழ் தரப்புக்களை சந்திப் பது என்பது அவர்களின் கையாள்களை (முகவர்களை) சந்திப்பது என்ற வகையில் தான் இதற்கு முன்னர் இருந்தது. இப்போது அப்படியில்லையே. இப்போது நாங்களும் இருக்கின்றோம். எங்களைச் சந்திக்காமல் புறக்கணிப்பது என்றால் என்ன அடிப்படை யில் புறக்கணிக்கின்றோம் என்பதைச் சொல்லவேண்டுமே? தமிழர் தரப்பை அவர் கள் விரும்பியவாறு இன்று கையாள முடி யாது. தமிழர்தரப்பை சந்திக்காமைக்கு உண்மை யான காரணம் அதுதான். தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்ற முடிவில் வல்லரசுகள் இல்லை. அது வெளிப்படையாகத் தெரி கின்றது. சீனத் தூதுக்குழு இலங்கை வந்து சென்ற கையோடு மோடி கூட்டமைப்பு டன் பேச முற்படுகின்றார் என்ற செய்தியை உங் கள் பத்திரிகை வெளியிட்டிருந்தது. நீங்கள் சீனாவுக்கு அளவுக்கு அதிகமாக இடம்கொ டுக்கப் போகின்றீர்கள் என்றால், நாங்கள் எங்களது முகவர்களை வைத்துக் கொண்டு உங்களுக்கு அழுத்தத்தை கொடுக்கப் போகின்றோம் என்பதுதான் இத னூடாகச் சொல்லப்பட்ட செய்தி.
தமிழ் அரசியல் வல்லரசுகளின் தேவைக் காக வெறுமனே பயன்படுத்தப்படுகின்றதே தவிர பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கவேண்டுமோ, பொறுப்புக்கூறல் ஊடாக நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண் டுமோ என்று இதுவரை சிந்திக்கவில்லை. எங்களை வல்லரசுகள் கருவிகளாக மாத்தி ரம் பயன்படுத்த முடியாது என்ற நிலை மையை என்று உருவாக்கின்றோமோ அன் றுதான் தமிழ் அரசியல் முன்னுக்குப்போகும்.



**தமிழ் அரசியல் வல்லரசுகளின் தேவைக்காக வெறுமனே பயன்படுத்தப்படுகின்றதே தவிர பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கவேண்டுமோ, பொறுப்புக்கூறல் ஊடாக நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமோ என்று இதுவரை சிந்திக்கவில்லை.**

# மாறாக் கொள்கையாளன் மனோ கணேசன் ஐயாவுக்கு...



வணக்கம்.

நான் நல்ல சுகம். உங்கடை சுகம் எப்பிடி எண்டு கேக்க வேண்டியிருக்கு...! ஏனெண்டால், இப்ப நீங்கள் செய்த வேலைதான் என்னை அப்பிடிக் கேக்க வைச்சிருக்கு. "உங்களுக்கு புலன் மாறிப்போச்சுதோ!" எண்டும் பயப்பிட வேண்டிக் கிடக்கு.

கொஞ்சக் காலத்துக்கு முன்னம் நீங்களும் அதாவுல்லாவும் பங்குபற்றின மின்னல் நிகழ்ச்சியை நானும் பாத்தனான். அதிலை மலையக மக்களை "தோட்டக்காட்டான்" எண்டு அதாவுல்லா சொல்லிப் போட்டார் எண்டு கோவிச்சுக் கொண்டு நீங்கள் குடிச்ச எச்சில் கிளாசிலை இருந்த மிச்சத் தண்ணியை அவற்றை முகத்திலை எத்தினியள். அதை நான் ஒரு மனுசன் செய்யக் கூடிய வேலை எண்டு ஒத்துக் கொள்ள மாட்டன். ஒரு பொது நிகழ்ச்சியிலை நீங்கள் அப்பிடி நடந்துகொண்டிருக்கக் கூடாது எண்டது என்ரை அபிப்பிராயம். ஆனால், உங்கடை "ஈரக்குலையை" பிடிச்சு ஒருதன் ஆட்டுறான் எண்டவுடனை உங்களுக்கு வந்த கோபம், உங்கடை இனத்தைப் பற்றி ஒருதன் கேவலமாக் கதைக்கிறான் எண்டவுடனை உங்களுக்கு வந்த ரோசம். "ஆ... சுப்பர்.." அப்ப நினைச்சன். விடுதலைப் புலியளை அரசாங்கம் அழிச்சாலும் எங்களுக்கை, எங்கடை பக்க நியாயத்தைத் தட்டிக் கேட்க "புலி" ஒண்டு மலையகத்திலை இருக்கு எண்டு இறுமாப்புக் கொண்டன். பலரும் அப்பிடித்தான் நினைச்சிருந்தவை. ஆனால், இப்ப அது எல்லாம் "புஸ்வாணமா" போச்சு தெண்டு கவலையாக் கிடக்கு. அப்ப புலி எண்டு பாத்தது ஒரு உண்மையான புலி இல்லை எண்டும், காத்து அடிச்சுக் காட்சிக்கு வைச்சிருக்கிற பஞ்சடைஞ்ச புலி எண்டும் தான் இப்ப தெரியிது. அது எனக்கு பெரிய ஏமாற்றமாக் கிடக்கு.

"கொலையாளி துமிந்த சில்வாவை விடுவிக்கக் கோருவது வெட்கக் கேடு" எண்டு மனோ அணிக்குத் திலகர் குடுத்த சாட்டையடியைப் பேப்பரிலை பாத்தன்.ஒரு கொலைக் குற்றத்துக்காக தண்டனை அனுபவிச்சுக் கொண்டிருக்கிற ஒரு கைதியை விடுவிக்க ஜனாதிபதியின்ரை நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிக்கச் சொல்லி, மனோ கணேசன் கேட்டிருக்கிறார் எண்டு செய்தியும் உள்ளுக்கை இருந்தது. மனோவை மட்டுமில்லை. மனோ அணி எண்டு எல்லாரையும் சேத்துத்தான் சொல்லியிருக்கினம். இது உங்களுக்கு அவமானமா இல்லையோ? எட! ஒரு நல்லவன், பெரியவனை மன்னிப்பிலை விடுங்கோ எண்டு கேட்டிருந்தால் பரவாயில்லை. ஒரு பட்டைத் தூள் முதலாளியை, அதுவும் வியாபாரப் போட்டியிலை, குடு உலகிலை மொத்த வியாபாரி எண்டு சொல்லுற தூள் மன்னனை, பாரத லக்சுமணனைக் கொலை செய்த ஒரு குற்றவாளியை, வெளியாலை கொண்டு வர உங்கடை நாடாளுமன்றப் பதவியை, அதுவும் மக்கள் நம்பிக்கையோடை தங்களைக் காப்பாற்றுவார் எண்டு வாக்களிச்ச பதவியை, இது மாதிரியான ஒரு மூண்டாந்தர வேலைக்குப் பாவிச்சதாலை, இதுவரை உங்களுக்கு இருந்த மக்கள் சப்போட் அவுட்டாப் போச்சுது எண்டு நினைக்கிறன். இதுதான் சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுக்கக் கூடாது எண்ணுறது...

உங்கடை எம்.பி எண்ட அஸ்திரத்தைப் பாவிக்க எத்தினை வழி இருந்தது. இப்பவும் இருக்கு? முன்னம் நல்லெண்ண அரசாங்கத்தோடை ஒட்டிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலை, இது மாதிரி எத்தினை அரசியல் கைதியளை விடச் சொல்லி ரணிலை, மைத்திரியைக் கேட்டிருக்கலாம். வன்னியிலை மைத்திரி வெளியாலை விட இருந்த ஆனந்த சுதாகரன் எண்ட குடும்பகாரனை விடுவிச்சிருந்தால்... இண்டைக்கு நீங்கள் எங்கையோ இருந்திருப்பியள்.

மலையகத்துக்கெண்டு இல்லாமல் ஒரு பொதுவான மனுசன் எண்டு எல்லாரும் உங்களை நம்பி இருந்தம்.

அரசாங்கத்துக்கு விலைபோன பல தமிழ் அரசியல் தலைவர்களை விட உங்களுக்கு இருந்த மரியாதை உச்சம். அதுவும் வடபகுதியிலை உங்களுக்கு இருந்த மரியாதை சொல்லி வேலை இல்லை. அப்பிடி உங்களை எல்லாரும் தலையிலை தூக்கி வைச்சுக் கொண்டாடினவை. ஆனால், இண்டைக்கு உங்களைச் சனம் காறித் "தூ" எண்டு துப்பிற மாதிரி நடந்திட்டீங்கள்.

துமிந்தவுக்கு பொது மன்னிப்புக் குடுத்து அவரை வெளியாலை விடுங்கோ எண்டு நீங்கள் கேக்கிறது, அவரைத் திரும்பவும் தூள் வியாபாரம் செய்ய விடுங்கோ எண்டு சொல்லுறமாதிரித்தான் இருக்கு.

இன்னொரு விசயமும் கேள்விப்பட்டன். சரியோ எண்டு வடிவாத் தெரியாது. நீங்கள் துமிந்தவை வெளியாலை விடச் சொல்லிக் கேக்க அவற்றை சகோதரத்திட்டை "உங்கடை றேடியோவிலை என்ரை பேரை அடிக்கடி சொல்ல வேணும்" எண்டதைத் தான் கைமாறாக் கேட்டனியளாம்!!! சனம் சிரிக்கினம். அது உண்மையோ???

ஏமாந்து போன,
அப்பாவி அன்னமுத்து.

# II குழைக்காட்டு கதைகள்

○ கோகுலராகவன்

கணவன் -மனைவியையோ மனைவி கணவன்னையோ விட்டுக் கொடுக்காது வாழும் குடும்பங்கள் எம்மி டையே அதிகம். மனைவியின் சிறப்பை கணவன் கொண்டாடுவதும், கணவனின் சிறப்பை மனைவி பெருமையாகக் கொண்டாடுவதும் வழமை. அது கறுவலோ, சிவலையோ, கறுப்பியோ ,சிவப்பியோ, கணவனுக்கு மனைவி அழகுதான். மனைவிக்கு கணவன் அழகன் தான்.

"என்ர மனுசன் எண்ணெய் வைச்சு தலை இழுத்தா சிவாஜிதான்"

"அந்தாளுட்ட இல்லாத காசோ?"

"அவர் உழைச்ச உழைப்பு தெரியுமோ?"

"எனக்கொண்டெண்டா என்ரை மனுசன் உயிரை விட்டிடும்"

"மனிசி மீன்கறி வைச்சா ஏழு கட்டைக்கு மணக்குமப்பா"

இப்படிப் பல கதைகள் இந்த உறவைப் பற்றி எங்கள் ஊரில் பிரபல்யமானவை.

சில தசாப்தங்களுக்கு முன்பாக கணவன், மனைவி உறவு செய்கைகளால் நிகழ்பவையாகவே இருந்தன. கதைப்பது குறைவு.

"இஞ்சை" என்பதோ அல்லது "இஞ்சாருங்கோ" என்றழைப்பதோ சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறான தகவல்களை பரிமாற்றும் பிரதான சொற்பதங்களாக அப்போது இருந்தன.

கணவன் சந்தைக்குப் போகும் பொழுது காசு, பை, மீன்பை முன்னால் வைக்கப்படும். அதன் மூலம் மனைவி சொல்லவருவதை உணர்ந்து, கணவனும் தேவையான பொருள்களை அளவாக வாங்கி வருவார். பிள்ளைகளுக்கு என்ன மீன் பிடிக்கும் என்பது தகப்பனுக்குத் தெரியும். தாய் சொல்வதில்லை. இப்படித்தான் தங்கக்கா வும் புருசன் மயில்வாக னத்தாரும் ஒருவருடன் ஒருவர் பெரிதாகக் கதைப் பதில்லை. மிகக் குறைவு. தங்கக்கா அதனை தன் பணிவிடைகளில் ஒன்றாக நினைத்துக் கொண்டார்.



எல்லாம் நேர அட்டவணையில் இடையில் குடும்பத்தில் கொஞ்சம் பொருளாதார நலிவு. மயில்வாகனத்தார் செய்த விறகு வியாபாரம் எழுப்பமாக இல்லை. கடன் தொல்லைகளில் மாட்டுப்பட்டிருந்தார்.

இரண்டு தீபாவளிக்கு மனைவி பிள்ளைகளுக்கு புது உடுப்புகூட எடுத்துக் கொடுக்க முடியவில்லை.

தீபாவளிக்கு வாங்கும் புது உடுப்பை "கோடி "என்று சொல்வது எங்கள் ஊரின் வழமை.

புதுச்சாரம் கட்டிக் கொண்டு போனால்

"என்ன கோடியோ?"

"கோடி கலக்குது"

எனும் வார்த்தைகள் மனதை மகிழ்விக்கும்.

தங்கங்காவுக்கு இது மனதளவில் பெரும் கவலையாக இருந்தது. அவரின் " உயரிய பணிவிடையால்"( நேரடியாகக் கதைக்காமை) கணவனிடம் இது பற்றி கேட்கமுடியவில்லை. அடுத்த வருடம் வியாபாரம் கொஞ்சம் பரவாயில்லை. மயில்வாகனத்தாரின் கடும் உழைப்பால், கடன் தொல்லைகள் குறைவடைந்து கையில் காசு புரளத் தொடங்கியது.

ஒரு தடவை விறகு வாங்கிய ஒருவர் பணத்தைத் தராததால் அவரை பணத்தை தரும்படி வற்புறுத்தி மயில்வாகனத்தால் சண்டை போட வேண்டியிருந்தது.

"இரண்டு வருசமா மனிசிக்கும் பெடியளுக்கும் தீபாவளிக்கு கோடி உடுப்பு எடுக்கேல்லை. காசைக் கெதியா கொண்டுவா" என்று பேசியிருக்கிறார். இப்படிக் கதைவளிப்பட்டதை அவரின் வேலையாள் சாமி, தங்காக்காவுக்கும் கதை வாக்கில் சொல்லியிருக்கிறார்.

தங்கங்காவுக்கு அதைக்கேட்டதும் மிகவும் சந்தோசமாக இருந்தது.

"இம்முறை நானும் பெடியளும் தீபாவளிக்கு புதுஉடுப்பு போடலாம்" என்று நினைத்துக் கொண்டார்.

அந்த சந்தோசத்தை தங்காக்கா தன்னிடம் ஏதும் அலுவலாக போவோர் வருவோரிடம் இப்படிப் பகிர்ந்து கொண்டார்.

"இம்முறை தீபாவளிக்கு எனக்கும் பெடியளுக்கும் மனுசன் கோடி உடுப்பு எடுக்கப் போறாராம். நான் இடையால அறிஞ்சனான்"

எப்படி இருக்கிறது அந்தக்கால குடும்ப உறவு?

# யாழ். மாநகர சபையின் வரலாறு 20

ந.பரமேஸ்வரன்




(1906 - 1949)

**29.05.1940**
யாழ்ப்பாண நகரசபை தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைப்பது என்ற தீர்மானம் சட்டசபையில் இரண்டாவது வாக்கெடுப்பின் போது தோற்கடிக்கப்பட்டது.

✪ ✪ ✪ ✪

16.09.1940 திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் M.ஜேக்கப் யாழ்ப்பாணத்தில் பால் பதனிடும் பயிற்சி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையை முன்வைத்தார் V.A.துரையப்பா அதனை வழி மொழிந்தார்.



✪ ✪ ✪ ✪

செப்டம்பர் 1940 - 1941ம் ஆண்டிற்கும் 1940ம் ஆண்டு அறவிட்ட அதேயளவு வரிகளையே அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது. வர்த்தக நோக்குடன் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு கார் தவிர்ந்த ஏனையவற்றுக்கு ஒரு ரூபாவும் காருக்கு 5 ரூபாவும் அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது. வண்டில் 4 ரூபா கைவண்டி, ரிக்ஸா, குதிரை வண்டி, 2.50ரூபா நாய்களுக் கான பதிவுக்கட்டணம் 1.
மின் அத்தியட்சகர் செல்வத்துரைக்கு போக்குவரதுகொடுப்பனவாக வருடமொன்றுக்கு 144 ரூபா வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. சிவன் கோவில் வடக்கு வீதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு 1209.65 ஒதுக்குவதென தீர்மா னிக்கப்பட்டது.

✪ ✪ ✪ ✪

**09.11.1940**
1941ம் ஆண்டிற்கான தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்தோர்.
முதலாம் வட்டாரம்: R.R.நல்லையா இமானுவேல் திருச்செல் வம்.
**இரண்டாம் வட்டாரம்:** செவாலியர் S.அருளானந்தம்V.மோசஸ்
**மூன்றாம் வட்டாரம்:** V.A.துரையப்பா M.சின்னத்துரை
நான்காம் வட்டாரம்: C.பொன்னம்பலம்E.D.ஹென்ஸ்மன்
**ஐந்தாம் வட்டாரம்:** K.V.சின்னத்துரை, V.S.இராமநாதன், T.நவரத்தினம்
**ஆறாம் வட்டாரம்:** K.ஐயாத்துரைM. ஆசைப்பிள்ளை
**ஏழாம் வட்டாரம்:** S. பதஞ்சலிR.சிவகுருநாதர்
**எட்டாம் வட்டாரம்:** சாம் சபாபதி, S.M அபூபக்கர், S.A.C.ஹபீப் முஹமட்

16.12.1940 உள்ளூராட்சி அமைச்சு சாள்ஸ் பத்திரான V.சுப்பையா ஆகிய இருவரையும் யாழ் நகரசபைக்கு நியமன உறுப்பினர்களாக நியமித்தது. நகரப்பகுதியில் வாழ்ந்த சிங்களவர்களின் நலன்களைகவனிப்பதற்காகவே பத்திரான உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு பல் வைத்திய நிபுணர். இரண்டாம் குறுக்குத்தெருவில் வசித்து வந்தார். ஆண்டிற்குரிய கடைசிக்கூட்டம் டிசெம்பர் 19ஆம் திகதி மாலை தலைவர் C. பொன்னம்பலம் தலைமையில் 5.00 மணிக்கு நடைபெற்றது.
உபதலைவர் S.M.அபூபக்கர், V.ஐயாத்துரை, M.ஜேக்கப், V.A. துரையப்பா, S.பதஞ்சலி, C.R.தம்பையா, R.R. நல்லையா, K.V. சின்னத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.
30 ஆம் திகதிய சுகாதார வைத்திய அதிகாரியின் கடிதத்தின் பிரகாரம் படவரைஞர் ஒருவரை நியமிப்பது.
பயிலுனர் சுவிட்ச் பலகை இயக்குநர் பொன்னுத்துரைக்கு 1941ஆம் ஆண்டு முதல் வருடாந்த சம்பளமாக 240 ரூபா வழங்குவது.
சங்கரப்பிள்ளையை 1941 முதல் துப்பரவுத் தொழிலாளியாக நாளொன்றுக்கு 70 சதம் சம்பளத்தில் நியமிப்பது.
ஏவலாள் சுப்பிரமணியத்திற்கு வருடாந்த சம்பளமாக 180 ரூபா வழங்குவது.
வீதி விளக்குகளுக்கான பயிலுனர் foreman சம்பளமாக ஆண்டொன்றுக்கு 241 ரூபா வழங்குவது.
மின் அத்தியட்சகர் செல்வதுரைக்கு வீட்டு வாடகைப்பணமாக ஆண்டொன்றுக்கு 60 ரூபா வழங்குவது.
Lighter செல்வத்துரைக்கு 300 ரூபாவும் சங்கரப்பிள்ளைக்கு 270 ரூபாவும் சம்பளமாக வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.
06.01.1941 அன்று தலைவர் உபதலைவர் தெரிவு நடைபெற்றது சிவகுருநாதர் தலைவராகவும் செவலியார் அருளானந்தம் உபதலைவராகவும் தெரிவு செய்யப் பட்டனர்.


(தொடரும்)



# தனிக்கருங்கல்லில தலையிட்டி வைரவர் கோயில்!

பொக்கிசன்

சம்பந்தர் வீமன்காமத்திலை , தலையிட்டியில, ஒரு வைரவர் கோயில் கட்டுறாராம், தனிக்கருங்கல்லிலை. எல்லாரும் போய்ப் பாக்கினம். சம்பந்தர் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கிழக்கு வாசலிலை முழுக்க முழுக்க தன்ரை செலவிலை கோபுரம் கட்ட வெளிக்கிட்டவராம்.ஐயருக்கும் அவருக்கும் ஏதோ மனஸ்தாபமாம். அதாலை சம்பந்தர் வீமன்காமத்திலை முழுக்க முழுக்க தன்ரை செலவிலை ஒரு வைரவர் கோயில் கட்டுறாராம்.இந்தியாவிலையிருந்து ஆசாரிமார் வந்து கருங்கல்லிலை பொழிஞ்சு கட்டுகினமாம். மேற்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மேற்கு வாசலிலை தனிக் கருங்கல்லிலை கட்டின கோபுரம் கிடக்கு. அது ரங்கூனார் (நாகலிங்கம்) முழுக்க முழுக்க தன்ரை செலவிலை கட்டின கோபுரம். இந்தக் கோபுரம் தான் இலங்கையி லேயே பெரிய கோபுரமாம். 81 அடி. மாவிட்டபுரம் சந்தியிலை இருந்து கீரிமலைக்கு போற பாதையிலை கிடக்கிற அலுமினியம் பக்டரி சம்பந்தருடையது தான். அதிலை ஒரு நூற்றைம்பது பேர் மட்டிலை வேலை செய்யினம். இலங்கையிலேயே இது தானாம் முதலாவது அலுமினியம் பக்டரி. இந்தப் பக்டரி துவங்கின போது சீனாவிலையிருந்து தானாம் ஆக்கள் வந்து றெயினிங் குடுத்தவங்கள். அந்தச் சீனாக்காரர் கீரிமலையில தான் குளிக்கிறது. ஒருநாள் அப்பிடி குளிச்சிட்டு வரேக்க ரோட்டில ஒரு பாம்பு. அவ்வளவு தான். அதைக் கலைச்சுப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். அதுக்குப் பிறகு எனக்கு அவங்களைக் கண்டால் ஒரு அருவருப்பு.



அலுமினியம் பக்டரிக்கு அங்காலை கே.கே.எஸ் றோட்டிலை வாளி பக்டரியும் இருக்கு. அது சின்னத்தம்பரின்ர பக்டரி. சம்பந்தரும் சின்னத்தம்பரும் மச்சான்மாராம் . போட்டிக்கு தான் ரெண்டு பேரும் பக்டரி துவங்கினவையாம். அதுகும் இலங்கையிலேயே முதலாவது வாளி பக்டரி சின்னத்தம்பரின்ர பக்டரி தானாம். இப்ப கொழும்பிலையிருந்தெல்லாம் வாளி வருகுது .ஆனா சின்னத்தம்பற்றை "எல்பிஹெம் "வாளி தான் திறம் வாளி. அது மாதிரி தான் சம்பந்தரின்ரை டொலர் அலுமினியம் பக்டரியும்.இப்பிடி எங்கட ஏரியா முழுக்க ஒரே பக்டரி மயம் தான். அப்பவே அது ஒரு தொழில்நகரம்தான்.
நான், கணேசன்,சிறி எல்லாருமா சைக்கிளிலை வெளிக்கிட்டம், கோயில் பாக்கிறதுக்கு. வீமன்காமம் போற பாதையிலை கொஞ்ச இடம் பள்ளம் . அதிலை சைக்கிள் சீற்றிலை இருக்காமை எழும்பி நிண்டு தான் போக வேணும். எங்கடை ஆசாரி மனிசனும் வீமன்காமத்திலை தான் இருக்கிறது. அந்தாள் குடும்பி முடிஞ்சிருக்கும். சேர்ட் போடுறேல்லை. தோளில் நாலு முழ சால்வை போட்டிருக்கும். முன் மக்காட்டிலை குதிரை பூட்டின றலி சைக்கிள் ஒண்டு வைச்சிருக்கு . அந்த மனிசன் இந்தப் பள்ளத்திலை இறங்கி உருட்டிக்கொண்டு தான் போறது. அவ்வளவு பக்குவம் சைக்கிளிலை. உண்மையிலை கோயில் 'அந்த மாதிரித்தான்' கிடக்கு. வாசலிலை இருக்கிற நாயின் வாய்க்குள் ஒரு எலுமிச்சம்பழம் அளவு சைசிலை உருண்டையா பந்து மாதிரி செதுக்கியிருக்கிறாங்கள். அதைச் சுண்டி விட்டா அப்பிடியே உள்ளுக்கை கிடந்து சுத்திக்கொண்டிருக்கு. வெளியிலை வராது. என்னெண்டு தான் இப்பிடி செதுக்கினாங்களோ தெரியாது. இந்த கோயிலிலை 365 நாளும் அபிஷேகம் நடக்குது எண்டு ஈழநாடு பேப்பரிலை செய்தி வந்தது.
(இந்தக் கோயிலைத்தான் சில வருடங்களுக்கு முன்னர் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருத்தர் போய் பார்த்து விட்டு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புராதன கோயில் ஒன்று பாழடைந்த நிலையில் கண்டு பிடிப்பு என்று அறிக்கை விட்டவர். நல்ல வேளை, பல்கலைக்கழக் வரலாற்றுத்துறையினர் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் சோழர் காலக் கோயில் கண்டு பிடிப்பு என்று அறிக்கை விட்டிருப்பார்களோ தெரியாது)

சஞ்சீவி

# மாணவர் கழகம்

101



**பெயர்:** சி.சிவப்பிரியன்
**முகவரி:** சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
**பி. திகதி:** 2014.11.14
**பாடசாலை:** சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.

102



**பெயர்:** கவிநயா
**முகவரி:** அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
**பி. திகதி:** 2005.10.30.
**பாடசாலை:** ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

103



**பெயர்:** சத்தியரூபன் வித்தகன்
**முகவரி:** இ.26, பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு.
**பி. திகதி:** 2006.09.07
**பாடசாலை:** கொக்குவில் இந்துக் கல்லூரி.

104



**பெயர்:** விஷ்ணுகா சசிதரன்,
**முகவரி:** 132/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2007.05.18
**பாடசாலை:** யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

105



**பெயர்:** கி.தனுஸ்காந்
**முகவரி:** இல.12, சொர்ணவடலி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
**பி. திகதி:** 2006.08.02
**பாடசாலை:** யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

106



**பெயர்:** இ.மதுர்சன்,
**முகவரி:** கிராஞ்சி, சிவபுரம்.
**பி. திகதி:** 2005.01.15
**பாடசாலை:** கிளி/கிராஞ்சி அ.மி.த.க. பாடசாலை.

107



**பெயர்:** விசாகரன் வினித்
**முகவரி:** கிராஞ்சி, சிவபுரம்.
**பி. திகதி:** 2004.10.29
**பாடசாலை:** கிளி/கிராஞ்சி அ.மி.த.க. பாடசாலை.

108



**பெயர்:** பி.ஹேசாயினி,
**முகவரி:** குப்பிளான் தெற்கு, ஏழாலை.
**பி. திகதி:** 13.08.2015
**பாடசாலை:** உரும்பிராய் கிட்ஸ் பார்க்.

109



**பெயர்:** மனோகரன் கிரிதரன்
**முகவரி:** 101/5 கீதாகோயில்வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.
**பி. திகதி:** 2004.06.17
**பாடசாலை:** யா/தாவடி இ.த.க. பாடசாலை.

110



**பெயர்:** குமாரதாஸ் சங்கீதன்
**முகவரி:** விஜிவீதி, முழங்காவில்.
**பி. திகதி:** 2004.07.16
**பாடசாலை:** கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
*sanjeevi@uthayan.com*

# சொற்சிலம்பம் போட்டி 19

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | 5 | |
| | ■ | 6 | | ■ | 7 | | ■ |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | | 12 | | ■ | ■ |
| 13 | | ■ | 14 | | ■ | 15 | 16 |
| 17 | | 18 | ■ | 19 | | | |
| ■ | 20 | | 21 | | ■ | 22 | |
| 23 | | | | ■ | 24 | | ■ |

**அனுப்புபவர் பெயர்:**..............................
**முழுமையான தபால் விலாசம்:** ..............................
..............................
**கையொப்பம்:**..............................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. அதிர்ஷ்டமின்மையை இப்படியும் அழைப்பர். 6. இந்திய டெஸ்ட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். (இறுதி எழுத்தை இழந்துள்ளது) 07. புலிகளின் முக்கியத் தளபதியின் செல்லப் பெயர். ஒரு போர் சங்கேத சொல்லும் கூட. 08. ஒரு வகை தோல் வாத்தியம். 10. விதிக்கப்படும் வரிப்பணம். 11. ஒருவர் சிறப்பாகச் செயலாற்றுவதை இப்படிச் சொல்வர். 13. வதனம் (கடைசி எழுத்தைக் காணோம்) 14. நிஷ்டை நிலை. 15. முதிர்ச்சி 19. பயணிக்க உதவும். (குழம்பியுள்ளது) 20. நித்திரை (குழம்பியுள்ளது) 22.கடற்றொழிலுக்கு இது பிரதானம். 23. கண்ணன் இதில் வல்லவன். (குழம்பியுள்ளது) 24. சிப்பி வகை.

### மேலிருந்து கீழ்

1.எல்லாளனைத் தோற்கடித்தவன். கோழி அடைக்கும் கூண்டையும் இப்படிச் சொல்வர். (குழம்பியுள்ளது) 3. தேவலோகத்து மலர் என்று இதனைச் சொல்வர். (குழம்பிவிட்டது) 4. பேடு 5. இந்த நாட்காட்டியை வைத்து வருங்காலத்தைக் கணிப்பதுண்டு. (இதுவும் குழம்பியுள்ளது) 9. தாலி 12. கிரேக்கத்தை இப்படியும் சொல்வர். 15.கடிதம் போய்ச் சேர இது முக்கியம். 16.கர்ப்பப்பை கழிவு வெளியேற்றம். 18.தூய்மையானது. 21. நீர். தலைகீழாகி இறுதி எழுத்துக் காணாமல் போய்விட்டது.

### சொற்சிலம்பம் போட்டி 17 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. மாதாமாதம், 5. சாவி, 6. சித்தம், 7. பாய, 8. கதாப்பிரசங்கி, 11. காண், 12. துறவி 14. மலடு, 15. கர்ப்பகாலம், 17. புத்தர், 19. திரு, 20. துணி, 21. தசை

**மேலிருந்து கீழ்**

1. மாசிகம், 2. தாத்தா, 3. மாதப்பிறப்பு, 4. தம்பி, 5. சாயங்காலம், 7. பாச 9. ரதி, 10. கிண்டு, 12. துர், 13. விபத்து, 14. மலர், 15. கத்தி, 16. காதணி, 18. பசை

**சொற்சிலம்பம் போட்டி இல.19**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**07.11.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 17இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**பாலகிருஷ்ணன் அபிஷிகா**
புதிய புன்னை நீராவி, விசுவமடு

**2 ஆம் பரிசு**
**சி.டனுசன்**
இல.1 பத்து ஏக்கர் திட்டம் கல்மடுநகர், கிளிநொச்சி

**3 ஆம் பரிசு**
**செ.சந்தனராசா**
எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்

**4 ஆம் பரிசு**
**சி.பிரணவி**
இல187, உதயநகர் மேற்கு கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
**க.அருணோதயம்**
நீர்வேலி வடக்கு, நீர்வேலி




# ஒலி வேறுபாட்டு விடுகதைகள்

1. அ. நான் படங்களை சுவரிலே மாட்டுவதற்கு பயன்படுவேன்.
   ஆ. நான் ஒரு தமிழ் மாதமாவேன்.
2. அ. நான் வீட்டின் மேற்பகுதியாவேன்.
   ஆ. நான் மணப்பெண்ணை அலங்கரிப்பேன்.
3. அ. நானில்லாமல் உயிர்கள் இல்லை.
   ஆ. கீழே தடக்கி விழுந்தால் நான் வருவேன்.
4. அ. நான் மரத்தின் ஒரு பகுதியாவேன்.
   ஆ. தைப்பதற்கு அல்லது பொருள்களை கட்டுவதற்கு நான் உதவுவேன்.
5. அ. நான் பூவிலே இருப்பேன், அம்மா சமைத்த சுவையான உணவிலும் இருப்பேன்.
   ஆ. "நான் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என பெரியோர் கூறுவர்.
6. அ. நான் புல்லாங்குழல் செய்ய பயன்படுவேன்.
   ஆ. நான் பயிர்களுக்கு இடையிலே வளர்ந்திடுவேன்.
   இ. நான் அறுபத்து நான்கு வகை கவினாவேன்.
7. அ. பகலிலே நீலப்பந்தல், இரவெல்லாம் என்னில் நட்சத்திரப் பந்தல்.
   ஆ. மின்னலாக மின்னுவேன். சர சர வென வெடிப்பேன். நான் இல்லாமல் சிறுவர்களுக்கு பண்டிகை நாளும் சிறக்காது.
8. அ. நான் ஒரு வகை மீன் ஆவேன்.
   ஆ. என்னில் சிற்பங்களை அழகாக செதுக்க முடியும்.
9. அ. நான் கடற்கரையில் காணப்படுவேன்.
   ஆ. நான் பாம்பு, கறையானின் வாழிடமாவேன்.
10. அ. நான் பச்சை நிறத்தழகி, மூக்கிலே இரத்தம் அழகாக பேசிடுவேன்.
    ஆ. கொடிய மிருகங்களை கண்டால், நான் வந்திடுவேன்.

### விடைகள்

1.அ. ஆணி
ஆ. ஆனி

2.அ. கூரை
ஆ. கூறை

3.அ. வளி
ஆ. வலி

4.அ. இலை
ஆ. இழை(நூல்)

5.அ. மணம்
ஆ. மனம்

6.அ. கழை (மூங்கில்)
ஆ. களை
இ. கலை

7.அ. வானம்
ஆ. வாணம் (பட்டாசு)

8.அ. பாரை
ஆ. பாறை

9.அ. அலை
ஆ. அளை (புற்று)

10.அ. கிளி
ஆ. கிலி (பயம்)



மு.விகாசினி
யா| யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
தரம் 03
அங்கத்துவ இல: 81

### பிஞ்சு தூரிகைகள்

க.துளசிகா,
தரம்-9
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இலக்கம்-92



தமிழினி ரவிதாசன்
தரம்-6
யாழ். இந்து மகளிர் கல்லூரி.



ம.கிரிதரன்,
தரம்-11
யா/தாவடி இ.த.க.பாடசாலை.



### விந்தை மிகு பறவைகள்

பறவைகளின் விந்தைகளில் "பறத்தல்" முக்கிய இடம் பெறுகிறது. பருந்து, கழுகுகள் உயரத்தில் இருந்து தமது இரையை பார்க்கும் திறன் உடையவை. காகங்கள் கழிவுகளை உண்டு சுற்றாடலைச் சுத்தப்படுத்துபவை. குயில்கள் புத்தாண்டு காலத்தை அறிவிப்பவை. ஆட்காட்டிக் குருவி மழை வருவதை முன்கூட்டி அறிந்து தாளப் பறக்கும். மயில்கள் காட்டை அழகுபடுத்தும்.

### என் கதை கேளீர்!

நான் பாட்டுப் பாடுதல், செய்தி வாசித்தல், கதை கூறல் என்று பலவற்றைச் செய்வேன். என்னை மார்க்கோணிப்பெட்டி என்று அழைப்பர். ஏன்? என்றால் என்னைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி என்பவர் ஆவார். எனின் நான் யார் என்று தெரியவில்லையா? நான் தான் நீங்கள் விரும்பும் வானொலியாவேன்.

### பயன் மிகு மரங்கள்

மரங்கள் உணவு, விறகு, நிழல் என்பவற்றைத் தருகின்றன. இவை நமக்குத் தளபாடங்கள் செய்ய மரப்பலகைகளை அளிக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி ஔடதம் தயாரிக்கின்றோம். இவை காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. பிராணிகளுக்கு வசிப்பிடமாக அமைகின்றன.



பகீதரன் அறிவழகன்
செட்டிவளவு ஒழுங்கை,
2/30 இணுவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

மௌனா

## மணிக் கதை

# தேவை

தூரத்தேயிருந்து பறந்து வந்து அந்தப் பகுதியில் இரைதேட முற்பட்டன பறவைகள். அவற்றில் ஒன்று அந்தக் கோயிலின் உயர்ந்த கோபுர உச்சியில் அமர்ந்து கொண்டது.

– மற்றது கீழே உள்ள குப்பை மேட்டை துழாவத் தொடங்கியது.

கோபுர உச்சிக் காகம் குப்பை மேட்டுக் காகத்தை கத்திக் கத்தி அழைத்தது.

"இங்கே வா...... இங்கிருந்து பார்க்க இந்த நகரமே தெரிகிறது"

குப்பை மேட்டுக் காகம் அலட்சியமாக அண்ணாந்து பார்த்தபடியே கூறியது

"...சீ..... நான் அங்கு வரமாட்டேன். இங்கிருந்து பார்க்க எனக்குத் தேவையான உணவு தெரிகிறது..!"




# மறுபக்கம்

ஆ.ரவீந்திரன்

அலுவலக நேரத்தில் அரட்டை அழக்கும் வழக்கம் அவனிடம் இல்லை. அதிலும் பெண்களோடு அநாவசியமாய் அவன் பேசுவதே இல்லை. அதனால் அவன் பெண்களால் நன்கு மதிக்கப்படுவனாய் அதிகமாக பேசப்படுபவ னாயும் இருந்தான். அப்படி இருக்க இன்று என்ன வந்தது.

அந்த அலுவலகம் வழமையான கலகலப்பில் ஆழ்ந்திருந்தது. பலர் தமது அன்றைய பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

சங்கீதா ஒருவித பரபரப்போடு சற்றே விரைவாய் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். அன்று சற்றே தாமதமாக அலுவலகத்துக்கு வந்ததனால் ஏற்பட்ட களைப்பு வியர்வையாய் அவள் முகத்தில் வெளிப்பட, மெதுவாய்த் தன் கைக்குட்டையை எடுத்து முகத்தை ஒற்றிக் கொண்டாள்.

“இண்டைக்கு எப்படியாவது இந்த எக்கௌன்ஸ் வேலையளை முடிச்சுப் போட வேண்டும்” என்று நினைத்தபோதே ஒரு வித ஆயாசம் அவளைப் பற்றிக்கொண்டது. பெருமூச்செறிந்தவாறு தன் முன்னே கிடந்த காகிதக் கட்டுக்களை எடுத்துப் புரட்டினாள். இரண்டு மூன்று நாள்களாக, அவள் அலுவலகத்துக்கு வரும்போது அபிநயம் காட்டியவாறு அவன் முன் காட்சியளிக்கின்ற அந்த அந்நியனின் முகம் ஒருகணம் அவள் மனத்திரையில் தோன்றி மறைந்தது.

“நாக்கையும் தொங்கப் போட்டுக் கொண்டு இந்த விசர் நாயளெல்லாம் ஏன் தான் றோட்டிலை அலையிதுகளோ? நாசமாய்ப் போகட்டும். இதுகளெல்லாம்.....” என்று தனக்குள் புழுங்கியவாறு தன் முழுக் கவனத்தையும் முன்னே கிடந்த காகிதங்களின் பக்கம் திரும்ப முயன்று கொண்டிருந்தாள். காகிதத்திலே சிரித்துக் கொண்டிருந்த எண்களுடனான தனது போராட்டத்தின் வெற்றிகளை அவற்றின் கீழே அழகாக எழுதிக் கொண்டிருந்தாள் அவள். கல்குலேற்றர், பேனா, காகிதம் இந்த மூன்றுடனும் அவள் விழிகளும் விரல்களும் அழகாய் உறவாடிக் கொண்டிருந்தன. ஏதோ ஒரு உணர்வு அவளை உந்த சட்டென நிமிர்ந்து பார்த்தாள். மோகன் ஒருவித தயக்கத்தோடு அவளையே பார்த்தவாறு முன்னே நின்று கொண்டிருந்தான். மோகனைக் கண்ட போது சங்கீதாவுக்கு சற்றே ஆச்சரியமாக இருந்தது. அலுவலக நேரத்தில் அரட்டை அடிக்கும் வழக்கம் அவனிடம் இல்லை. அதிலும் பெண்களோடு அநாவசியமாய் அவன் பேசுவதே இல்லை. அதனால் அவன் பெண்களால் நன்கு மதிக்கப்படுவனாய் அதிகமாக பேசப்படுபவனாயும் இருந்தான். அப்படி இருக்க இன்று என்ன வந்தது. சங்கீதா சினேக பூர்வமான ஒரு புன்னகையை வரவழைத்தவாறு வினாக் குறியோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

இண்டைக்கு உங்களுக்கு சரியான வேலையென்ன என்றவாறு எதையோ அவன் கேட்கத் தயங்குவது போல நின்று கொண்டிருந்தான். ஓமோம், லஞ்சுக்கிடையில இதை முடிச்சுப் போடவேணும் என்றவாறு சற்றே தன் விழிகளை தாழ்த்தி மேசையைப் பார்த்தாள் சங்கீதா.

உங்கடை ரைற்றிங் ஸ்ரைலும் வடிவாய் இருக்கிறது. அதேநேரத்திலை ரைற்றிங்கும் வடிவாய் இருக்கிறது என்றவாறு அவன் அவளின் கைகளையே பார்த்தபடி நின்றான். சங்கீதாவுக்கு என்னவோ போல இருந்தது. மெல்லியதாய் ஒரு மின்னோட்டம் அவளை ஊடுருவிப் பாய்வது போல் இருந்தது. சங்கீ உன்ர முகத்தை விட உன்ர கைதான்டி வடிவு. நீ எழுதிறதை யாராவது கண்டால் அந்த இடத்திலேயே மயங்கிவிழுந்து போவாங்கள். நான் மட்டும் ஆம்பிளையா இருந்தால் உன்னைத் தான் கட்டியிருப்பன் என்று அடிக்கடி அவளைக் கேலி பண்ணும் சுகந்தியின் நினைவு வந்தது. கூடவே, காலையிலே அலுவலகத்துக்கு வரும்போது தான் கண்ட அந்த அந்நியனின் முகமும் அவள் மனத்தில் தோன்றி மறைந்தது.

‘அப்படியெண்டால் இவன்....’

‘சீ அப்படியிருக்காது’.

‘அப்பிடியெண்டால் பிறகேன் இப்பிடி?’

சீ, இந்த மோகனுக்கு இண்டைக்கு என்ன வந்தது? அதுவும் கலியாணம் கட்டி இன்னும் இரண்டு மாதம் கூட ஆகேலை ஒருவேளை ஐம்பது வயதைத் தாண்டிய பின்பும் தான் ஐந்து பிள்ளைகளின் தந்தை என்பதைக்கூட மறந்து விட்டு தனது அறிவுக்கும் அழகுக்கும் தன் மனைவி பொருத்தமில்லை என்று கூறித் திரியும் ஸ்ரீனிவாசனை நினைத்துப் பார்த்தாள். பட்ட மரத்துக்குச் சீலை சுத்தி விட்டாலும் பல்லிழிச்சுக் கொண்டு நிற்கிற பரதேசி. இவனுக்கும் விடிய நான் கண்ட அந்த விசர் நாய்க்கும் என்ன வித்தியாசம்?

மோகன் தன் முன்னே நின்று கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது . ஆனாலும் , அவன் முகத்தைப் பார்க்காமல் குனிந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் “ வெரி சொறி . உங்கடை வேலையை நான் குழப்பிப் போட்டன் “ என்றான். அவன் மென்மையான குரலில் ,

இண்டைக்கு நான் ஆற்றை முகத் திலை முழிச்சனோ ? என்று மனம் ஓலமிட , சிரமப்பட்டு ஒரு சிறு புன்ன கையை வரவழைத்துக்கொண்டு “ சீ , அப்பிடியில்லை “ என்றவாறு சற்றே தலையை நிமிர்த்தினாள் .

“என்ரை பென்னையொருக்காத் தந்திங்களெண்டால் ... ” என்று இழுத்தான் அவன் . அதுவரை வெறும் குச்சியாய் அவள் கைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடந்த அந்தப் பேனா உயிர் பெற்றுக் குறுகுறுப்பது போலிருந்தது .

சட் டென நிமிர்ந்து அந்தப் பேனாவை அவனிடம் நீட்டியவாறே “நான் மறந்திட்டன் , வெறி சொறி” என்றாள் சற்றுக் கெஞ்சலாக , “ இற்ஸ் ஓல் றைற் .. நான் எங்கடை றெஜிஸ்ரேஷனண்டு இந்தப் பென்னாலைதான் கையெழுத்துப் போட்டனான்” என்றவாறு பத்திரமாய் அதனை வாங்கி மேலும் கீழும் பார்த்தவாறே அப்பால் சென்றான், சங்கீதாவின் எண்சாண் உடம்பு ஒரு சாணாய்க் குறுகிவிட்டது போலிருந்தது . தன்மீதே அவளுக்கு ஒருவித பச்சாத்தாபமேற்பட்டது . ‘ அந்தப் பேனையை நான் சரியாய்ப் பாவிச்சிருப்பனோ ? அல்லது ஊண்டி எழுதி அதைப் பழுதாக்கியிருப்பனோ ? சிலவேளை என்னையுமறியாமல் அதின்ரை மற்றப் பக்கத்தைக் கடிச்சிருப்பனோ ? தொடர்ந்து அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காதவளாய் கன்ரீனை நோக்கி நடந்தாள்.

(யாவும் கற்பனை)

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்ப டையான விழிப்புணர்வு களை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வரு கின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

18

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி



கடந்த வாரம் பல்கலைக்கழக அனுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதில் க.பொ.த சாதரணதரத்தின் வகிபாகம் குறித்து ஒரளவுக்கு விரிவாக ஆராயப்பட்டிருந்தது. குறிப்பாக ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் பெறுபேறுகள் கொண்டுள்ள தாக்கம் தொடர்பாக சமூகக் கவனத்தை திருப்பத்தக்க வகையில் புள்ளிவிபரங்களுடன் ஆராயப்பட்டிருந்தது. இவ்வாரம் பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாக பேச ஆரம்பித்தபோது இக் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்ட நான்கு விடயங்களில் நிறைவான விடயமான பல்கலைக்கழக அனுமதியொன்றை இழப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறித்து ஆராயலாம்.

**பல்கலைக்கழக அனுமதியொன்றை இழத்தல்**

பல்கலைக்கழக அனுமதியொன்றை மாணவர் ஒருவர் இழப்பது என்பது அவரது கல்வி வாழ்க்கையில் முழுமையைத் தொலைப்பதற்கு சமனானது.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சூழலில் உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகமையைப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்தபோதும் பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிடும் அல்லது பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு பெருந்தொகையானது. ஒரு மாணவர் பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிடுவதற்காக பல்வேறு காரணங்களில் பின் வருவன வற்றை வழமையானவை அல்லது முக்கியமானவை எனும் வகையில் குறிப்பிட முடியும்.

1. பொருத்தமற்ற பாடச் சேர்க்கைகளை உயர்தரத்தில் கற்றிருத்தல்
2. தான் விண்ணப்பித்த கற்கை நெறிக்கான வெட்டுப்புள்ளியாக அமையும் Z புள்ளியை விட குறைந்த புள்ளியைப் பெற்றிருத்தல்
3. க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பொதுச் சாதாரண விவேகப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்றிருத்தல்
4. மூன்று தடவைகளுக்கு மேல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல்
5. பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவத்தை அனுப்பத் தவறுதல். தற்போது இவ் விண்ணப்பம் இணையவழி கோரப்படுவது குறிப்பிடத்தக்கது.
6. முதற்படிவத்தை நிரப்பும் போது விடும் தவறுகள்.
7. குறிப்பிட்ட பல்கலைக்கழக கற்கை நெறியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான மேலதிக தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத்தவறுகின்றமை. உதாரணமாக க.பொ.த சாதரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்
8. குறிப்பிட்ட பல்கலைக்கழக கற்கை நெறியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத்தவறுகின்றமை. உதாரணமாக பல்கலைக்கழகங்களினால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்காது விடுதல் அல்லது தோற்றாது விடுதல் அல்லது சித்தியடையத்தவறுதல்
9. தான் பெற்றுக்கொண்ட Z புள்ளிகளின் அடிப்படையிலும் மாவட்ட மற்றும் தேசிய நிலைகளின் அடிப்படையிலும் தனக்கு கிடைக்கத்தக்க கற்கைநெறியொன்றை விண்ணப்பிக்கும் போது தெரிவுசெய்யாது விடுதல்
10. சில குறித்த கற்கைநெறிகள் பற்றிய தவறான புரிதலினால் அவற்றுக்கு விண்ணப்பிக்காது தவிர்த்தல்
11. பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது ஏற்கனவே ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் இலவசமாக அல்லது சலுகை அடிப்படையில் கற்கும் வாய்ப்பைப் பெற்றிருத்தல்
12. பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான புலமைப்பரிசில் ஒன்றை ஏலவே பெற்றிருத்தல்
13. பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அனுமதி கிடைக்கப்பெற்ற கற்கையை தொடர தனது சம்மதத்தை தெரிவிக்கும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுகளை மேற்கொள்ளத் தவறுகின்றமை.
14. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுகளை மேற்கொண்டபோதும் குறித்த பல்கலைக்கழகத்துடன் தொடர்புகளை பேணி அவர்களது நடைமுறைகளுக்கு ஏற்ப தன்னை குறித்த பல்கலைக்கழக மாணவராக வழங்கப்படும் காலக்கெடுவுக்குள் பதிவுசெய்து கொள்ள தவறுகின்றமை.
15. குறித்த கற்கையொன்றுக்கு அனுமதி பெற்று பதிவுகளை மேற்கொண்ட பின்னர் வெற்றிடம் நிரப்பல் வகையில் தான் விண்ணப்பித்த பிறிதொரு கற்கைக்கு அனுமதிக்கப்படும் போது அதனை உரிய வகையில் கையாளத் தவறுகின்றமை.
16. பரீட்சை மோசடிகள் எவற்றிலாவது ஈடுபட்டு சட்டரீதியான தண்டனையைப் பெற்றிருத்தல் அல்லது கறுப்பு பட்டியலில் பெயரைக் கொண்டிருத்தல்.
17. ஏற்கனவே ஒரு தடவை பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று கற்கையைத் தொடர்ந்த போதும் அதனை இடைநடுவில் கைவிட்டு பின் பரீட்சைக்குத் தோற்றி அதன்வழி விண்ணப்பித்தல்.

**கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை**

மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களுள் பல, மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்த நிலையில் கூட பல்கலைக்கழக அனுமதிகளை இழப்பதற்கு ஏதுவாக அமையும் காரணங்கள்.

குறிப்பாக பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவம் தொடர்பில் விடும் தவறுகள் அநியாயமாக தனக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்பை ஒரு மாணவர் இழப்பதற்கு வழி செய்கின்றது. இவ் விடயங்களில் சமூகப் புரிதல் தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காக கட்டுரையாளர் அறிந்துள்ள சில சம்பவங்களின் ஊடாக இவற்றை விளக்குவது பொருத்தமாதாகவிருக்கும்.

**சம்பவம் 1**

மாணவன் ஒருவன் கலைப்பிரிவில் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி மாவட்ட நிலையில முதல் இடம் மற்றும் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றிருந்த போதும் அவரால் சட்டத்துறைக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது. இதற்கான காரணம் பல்கலைக்கழகமொன்றில் சட்டத்தை கற்க விரும்பும் கலைத்துறை மாணவர்கள் தமக்கான பாடத்தெரிவுத் தொகுதிகளுள் ஒன்றாக அமையும் அழகியல் பாடத் தொகுதிக்குள் இருந்து ஒரு பாடத்தைக்கூட தெரிவுசெய்திருக்கக் கூடாது. இத் தொகுதிக்குள் நடனம், சித்திரம், சங்கீதம் மற்றும் நாடகமும் அரங்கியலும் பாடங்கள் இடம்பெறுகின்றன. சரியான புரிதல் அற்ற தெரிவால் உயர் பெறுபேற்றைப் பெற்றிருந்த போதும் குறித்த கற்கைக்கான வெட்டுப்புள்ளியைத்தாண்டியபோதும் அம் மாணவனால் தான் விரும்பும் சட்டத்துறைக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது.

**சம்பவம் 2**

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவியொருவர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று மாவட்ட நிலையிலும் முன்னேற்றகரமான இடத்தைக் கொண்டிருந்த போதும் அவருக்குப் பின்னான நிலையிலுள்ள மாணவிக்கு மருத்துவ அனுமதி கிடைத்தபோதும் குறித்த மாணவிக்கு மருத்துவத்துக்கான அனுமதி கிடைக்க வில்லை. பல் மருத்துவத் துறை அனுமதியே கிடைத்திருந்தது. இதனால் தனக்கு அநீதி நடந்து விட்டதாக கருதி குறித்த மாணவி தனது ஆசிரியர் ஒருவர் மூலம் கட்டுரையாளரின் ஆலோசனையை நாடியிருந்தார்.

அவரது பல்கலைக்கழக விண்ணப்பத்துக்கான படிவங்களை நன்கு ஆராய்ந்த கட்டுரையாளர் தவறு குறித்த மாணவியினுடையதே என்பதைத் தெளிவுபடுத்தி அவர் மருத்துவ அனுமதியைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டி அதனை கிடைக்கவும் செய்தார். இங்கு நடந்த பிரதான தவறு குறித்த மாணவி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த வருடம் தான் முதன் முதலாக Uni Code முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. குறித்த கற்கைக்கான மாவட்ட வெட்டுப்புள்ளிகள் எனும் நிலை மாறி குறித்த பல்கலைக்கழகத்தின் குறித்த கற்கைக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள் எனும் முறைமையே தற்போது வரை நடைமுறையில் உள்ள Uni Code முறையாகும். இதன் பிரகாரம் குறித்த மாணவி கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களைத் தெரிவுசெய்திருந்த நிலையில் அப் பல்கலைக்கழகங்களின் மருத்துவபீடத்துக்கு அனுமதி பெற அவரது வெட்டுப்புள்ளி போதாமலிருந்தது.

ஆனால் அவருக்கு பின் நிலையிலிருந்த மாணவி கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் தெரிவு செய்தமையால் அவருக்கு மருத்துவம் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. பின் மனிதாபிமான அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விசேட தீர்மானத்தின் பிரகாரம் குறித்த மாணவிக்கு கிழக்குப் பல்கலைக்கழக அனுமதியை வழங்கியிருந்தது.

இவ்வாறு பல்வேறு கவனயீனத் தவறுகள் மூலம் பல மாணவர்கள் தமது பல்கலைக்கழக வாய்ப்புக்களை இழக்கின்றனர். மேலும் இவ் விடயங்கள் குறித்து சில உண்மைச் சம்பவங்களுடாக அடுத்த வாரமும் ஆராயலாம்.

(தொடரும்)

# அறிந்தும் அறியாமலும்



## சொந்தக் கையெழுத்தில் சூனியம்!

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைபுக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை, தமிழ் முற்போக்கு கூட்டணியிலிருந்து வெளியேற்றி அதிரடி காட்டிய மனோ கணேசனுக்கு சமூகவலைத்தளங்களில் வாழ்த்துகளும், பாராட்டுகளும் குவிந்தன.சஜித் அணியும் தலையில் தூக்கிவைத்து கொண்டாடியது. ஆனால் இந்த முடிவை எடுத்து 24 மணிநேரம்கூட செல்லவில்லை. மனோவுக்கு ஆதரவாக உருவாகிய பேரலை, அவருக்கு எதிரான பெரும் சூறாவளியாக திருப்பி சுழன்றடித்தது.அதன் தாக்கம் இன்னும் குறையவில்லை. மனோவுக்காக சொம்பு தூக்கும் போராளிகள்கூட அவருக்கு எதிராக வலைத்தளங்களில் கம்பு சுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.

மரண தண்டனை கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறுகோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்ட மனுவில் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் பலரும் கைச்சாத்திட்டனர், இதில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள் ஐவர் கைச்சாத்திட்டமையே பெரும் சர்ச்சையாக மாறியது.

இதனையடுத்து நிலைமையை சமாளிப்பதற்காக மனோ கணேசன் விரிவானதொரு அறிக்கையை விடுத்தார். அதில் கூறப்பட்டிருந்த விடயங்களுக்கும் எதிர்ப்புகள் கிளம்பின. இதனால் தனது முகநூல் பக்கத்தில் இருந்துகூட அந்த அறிக்கையை நீக்கவேண்டிய நிலை மனோவுக்கு ஏற்பட்டது. அவரது அரசியல் பயணத்தில் இம்முறை நடைபெற்ற சம்பவமே பெரும் தாக்கமாக அமைந்துள்ளது என அவருக்கு நெருக்கமானவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, குறித்த மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணி கண்டி மாவட்ட எம்.பியான வேலுகுமார் கையொப்பமிடவில்லை. தனக்கு துமிந்த சில்வா என்பவர் யாரென்றே தெரியாது,சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்பட்ட ஒருவரை எவ்வாறு மன்னிப்பது என தனக்கு நெருக்கமானவர்களிடம் வேலுகுமார் குறிப்பிட்டுள்ளார். மறுபுறத்தில் பொதுத்தேர்தலில் வாய்ப்பு மறுக்கப்பட்ட முன்னாள் எம்.பி., திலகரும் இதனை வாய்ப்பாக பயன்படுத்தி கூட்டணியினரை விளாசித்தள்ளிவருகின்றார். கையெழுத்து போட்ட மனுவில் இருந்து விலகிக்கொள்வதாக மனோ அறிவித்தபோதும் அவருக்கு ஒரு மாறாக் களங்கத்தை இந்த விவகாரம் உண்டாக்கி விட்டது.

சொந்தச் செலவில் சூனியம் வைத்துக்கொண்டதுபோல முற்போக்கு கூட்டணியின் தலைவரும், சகாக்களும் தற்போது தடுமாறிவருகின்றனர்.



அமெரிக்காவுக்கு எதிராக அதிரடியான கருத்துகளை வெளியிட்டு, அதீத தேசப் பற்றை வெளிப்படுத்தும் விமல்வீரவன்ஸ, நல்லாட்சியின்போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இலங்கைக்கு வரவிருந்த வேளை அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார். இலங்கை அமெரிக்காவின் பிராந்யமாகப்போவ தாகவும் பதறினார். சிங்கள தேசியவாத அமைப்புகளும் விமலின் பின்னால் அணி திரண்டன. எனினும், அமெரிக்க இராஜாங்கச்செயலாளரின் இலங்கை பயணம் ஒத்திவைக்கப்பட்டது.அதற்குள் இலங்கையில் ஆட்சிமாற்றமும் ஏற்பட்டுவிட்டது. இந்நிலையில் நெருக்கடியான சூழ்நிலையிலும் தற்போது இலங்கைக்கு வந்துசென்றுள்ளார் மைக் பொம்பியோ. அவரின் வருகைக்கு பின்னால் ஆயிரம் இராஜதந்திர வியூகங்கள் மறைந்திருந்தாலும், அவரின் இலங்கை விஜயம் பற்றி விமல் வாய் திறக்கவே இல்லை. ஐ.நாவுக்கு எதிராக உண்ணாவிரதம்கூட இருந்த, எதனையும் வெளிப்படையாக விமர்சிக்கக்கூடிய விமல்வீரவன்ஸ, பொம்பியோ விவகாரத்தில் ஏன் வாயடைத்துபோனார் என்ற வினா எழுந்துள்ளது. எதிரணி உறுப்பினர்களும் இந்த வினாவை தொடுத்தனர். அதுமட்டுமல்ல அமெரிக்காவுக்கு அஞ்சி, விமல் மௌனித்துவிட்டாரெனவும் வலைத்தளங்களில் கிண்டலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எது எப்படியோ இராஜதந்திர மட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரமே விமல்வீரவன்ஸ மௌனம் காத்தார் என இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

○ சுழியன்



## அமைச்சராகிறார் பஸில்!

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைபு அமுலுக்கு வந்துள்ள நிலையில் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கான தடையும் நீங்கியுள்ளது. '20' இல் இருந்து இந்த சரத்தை நீக்குமாறு பௌத்த தேரர்களும், பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும் அழுத்தங்களை பிரயோகித்தபோதி லும், புதிய அரசமைப்பில் அது நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் குறித்த சட்டம் நிறை வேற்றப்பட்டது.

இரட்டைக்குடியுரிமைக் கொண்ட பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்து அமைச்சராக்கும் நோக்கிலேயே '20' ஊடாக அதன்கான ஏற்பாடும் செய்யப்பட்டது.

இதன்படி ஜனவரியில் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவார் எனவும், இதற்காக ஆளுங்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியொருவர் தனது பதவியை இராஜினாமா செய்வார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும்பாலும் பஸில் ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமான ஜயந்த கெட்டகொடவே இந்த தியாகத்தை செய்வாரெனவும் தெரியவருகின்றது.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது பஸில் ராஜபக்சவுக்கு பலம்பொருந்திய அமைச்சு பதவியொன்றும் வழங்கப்படவுள்ளது.

## மன்கவியர்களுக்கு மாகாண ஆசை

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் முழுமையாக நீங்கி விட்டால் 2021 முற்பகுதியில் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும், அரசியல் வாரிசுகளும் போட்டியிடவுள்ளனர் என்பது உறுதியயாகியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட மேலும் சில கட்சிகளின் சார்பிலேயே வாரிசுகள் களமிறங்குகின்றனர். மஹிந்த அணியில் போட்டியிட்டு ஊவா மாகாணசபைக்கு தெரிவாகியிருந்த முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவின் மகன் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஊவாவில் போட்டியிடவுள்ளார்.

அமரர் சந்திரசேகரனின் மகள் அனுசா சந்திரசேகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். இராஜரட்ணத்தின் மகன் ஜனா ஆகியோர் மத்திய மாகாணத்தில் போட்டியிடவுள்ளனர். மைத்திரிபால சிறிசேனவின் மகன் அல்லது மகள் வடமத்திய மாகாணத்தில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முக்கிய அரசியல் பிரமுகர்களும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பிலேயே முன்னாள் எம்.பிக்கள் பலர் களமிறங்கவுள்ளனர். ஏனெனில் நடைபெற்று முடிந்ததேர்தலில் குறிப்பிட்டளவு வாக்கு வித்தியாசத்திலேயே அவர்கள் தோல்வியடைந்திருந்தனர்.




## மாகாணத் தேர்தலில் மனோவின் சகோதரர்!

ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து மஹிந்த பக்கம் தாவி அரசியல் பயணத்தை தொடர்ந்த பிரபா கணேசன், தற்போது சுயாதீனமாகச் செயற்பட்டுவந்தாலும் ஆளுங்கட்சியுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் வன்னிக்கு பொறுப்பான அபிவிருத்தி ஆலோசகராகவும் பிரபா கணேசன் செயற்பட்டதுடன்,அரசியலையும் முன்னெடுத்தார். ஜனநாயக மக்கள் காங்கிரஸை பலப்படுத்தும் நடவடிக்கையிலும் இறங்கினார்.

கொழும்பு அரசியலைக் கைவிட்டு அவர், வன்னி நோக்கி நடையைக்கட்டினார். சில தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து கூட்டணியும் அமைத்தார்.ஆனால், எதிர்பார்த்தளவு பெறுபேறு - வெற்றி கிடைக்கவில்லை. இதனால் சிறிது காலம் மௌனம் காத்துவந்தார்.

கொரோனா பிரச்சினை முடிவுக்கு வந்ததும் மீண்டும் தீவிர அரசியலில் இறங்கவுள்ளாதாக இப்போது அவர் அறிவித்துள்ளார். மாகாணசபைத் தேர்தலில் வன்னியிலும், கொழும்பிலும் தனது கட்சி போட்டியிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தனிவழியா அல்லது கூட்டணியா என்பது தொடர்பான விபரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.



# புத்தம் புதுக் காலை

ஆரதி

கொரோனா காலத்தில் தமிழ்ச் சினிமாவில் ஏற்பட்ட ஒரு பேரிழப்பு பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மரணம். வரவு என்றால், "புத்தம் புதுக்காலை" என்ற அந்தோ லோஜி படம். 2020 ஒக்ரோபர் 16 பார்வைப் பரப்புக்கு வந்த இந்தப் படம் (படங்கள்) பற்றியே இப்போது பேச்சாயிருக்கிறது. புதிய சூழலுக்கு ஏற்ற மாதிரி, அமேஸன் பிரைமில் பார்க்கக் கூடியவாறு இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார்கள். எளிய, ஆனால், வலுவான உருவாக்கம். ஐந்து வெவ்வேறு கதைகள். ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு இயக்குநர். ஐந்து கதைகளும் இணைந்தும் தனித்தனியாகவுமாக 'புத்தம் புதுக்காலை'யாகியுள்ளது. கொரோனா கால வாழ்க்கை பற்றிய சித்திரங்களே இந்தப் படங்களின் மையம். முக்கியமாக கொரோனாவினால் ஏற்பட்ட லொக்டவுண் பிரச்சினைகளும் அனுபவங்களும். ஆனால் எதிர்மறையாக இல்லாமல் எல்லாப் படங்களும் நேர்நிலையாகப் பேசுகின்றன.

கௌதம் வாசுதேவ் மேனன், சுஹாசினி, கார்த்திக் சுப்புராஜ், சுதா கோங்கரா பிரசாத், ராஜீவ் மேனன் என ஐந்து முக்கியமான இயக்குநர்கள். நிவாஷ் கே. பிரசன்னா, சதீஸ் ரகுநாதன், ஜீ.வி.பிரகாஷ், கோவிந் வசந்தா என நான்கு இசையமைப்பாளர்கள் இந்தப் படத்தின் உருவாக்கத்தில் முக்கியமானவர்கள். இதைவிட நடிகர்களில், ஜெயராம், ஊர்வசி, சுஹா ஸினி, அனுஹாசன், சுருதிஹாசன், காளிதாஸ், கல்யாணி பிரியதர்ஷன், ஆண்ட்ரியா, ரிது வர்மா, எம்.எஸ். பாஸ்கர், பாபி சிம்கா, முத்துக்குமார், லீலா சாம்சன், குருசரண் போன்றோர் பங்கேற்கிறார்கள்.

ஐந்து படங்களும் தனித்தனியானவை என்று குறிப்பிட்டுள்ளோம் அல்லவா! ஏறக்குறைய குறும்படங்களைப் போல. முதல்படம், சுதா கோங்காரா இயக்கியுள்ள "இளமை இதோ இதோ". வேறுபட்ட கோணத்தில் ஒரு கதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் இயக்குநர். தங்கள் துணைகளை இழந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு, காதல் என்பதே கதை. இருவருக்கும் வளர்ந்த பிள்ளைகளும் உள்ளனர். ஒரு நாள் தன்னுடைய காதலனைத் தேடி அவருடைய வீட்டுக்கு வருகிறார் அந்தப் பெண். எதிர்பாராத விதமாக கொரோனா லொக்டவுணில் சிக்கிவிடுகிறார். இந்தச் சூழலில் எப்படி நிலைமையைச் சமாளிப்பது, அதற்கான போராட்டம், அதற்குள் கிடைக்கின்ற மகிழ்ச்சி என்பதை தாக்கமாகக் காண்பிக்கிறார் கோங்காரா.

அடுத்த படம், அவரும் நானும் - அவளும் நானும். கௌதம் வாசுதேவ் மேனனுடையது. காதல் திருமணத்தினால் மகளை மறுதலித்து வாழ்கின்ற ஒரு தந்தைக்கும், கொரோனா ஊரடங்கின் நிமித்தமாக அவரிடம் வந்து சேர்கிற பேத்திக்கும் இடையிலான உறவைப் பேசுகிறது. வழமையாக இப்படியான அனுபவங்கள் பலருடைய வாழ்க்கையில் உண்டு. பிள்ளைகளுடன் உள்ள இடைவெளியை



பேரப்பிள்ளைகள் நிரப்புவது. இரு வேறு தலைமுறைகளின் உணர்ச்சிகளைச் சிறப்பாக இந்தப்படம் பேச முனைகிறது. இதில் எம். எஸ். பாஸ்கர் தந்தையாகவும் ரிது வர்மா பேத்தியாகவும் நடித்திருக்கிறார்கள். படத்தின் தலைப்புக்கு ஏற்றமாதிரி தாத்தா - பேத்தி என இருவர் பார்வையிலும் கதை நிகழ்கிறது.

மூன்றாவது படம், சுஹாசினியின் காஃபி எனிவண் (Coffee, Anyone?) இதில் சுஹாசினியோடு அனுஹாசன், சுருதிஹாசன் ஆகியோரும் நடித்துள்ளனர். படத்திலும் மூவரும் அக்கா தங்கை என சகோதரிகளாகவே இருக்கின்றனர். கோமா நிலையிலிருக்கும் மனைவியை தொடர்ந்தும் மருத்துவமனையில் வைத்துப் பார்க்க முடியாத நிலையை கொரோனா லொக்டவுண் உருவாக்குகிறது. இதனால், வேறு வழியின்றிப் பிள்ளைகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், வீட்டுக்கே மனைவியை அழைத்து வருகிறார் கணவர். தாயைப் பார்ப்பதற்காக வெளிநாடொன்றிலிருந்து வரும் மூத்த மகளுக்கும் (சுஹாசினி) வீட்டிலிருக்கும் இளைய மகளுக்கும் (அனுஹாசன்) தாயோடு முரண்பட்டு வெளியேறிச் சென்ற மகளுக்கும் (சுருதிஹாசன்) இடையில் நிகழும் உறவும் நிகழ்வுகளுமே கதை. தாயைக் காப்பாற்றுவதற்குப் பிள்ளைகளும் மனைவியைக் காப்பாற்றுவதற்கு கணவருமாக போராடும் காட்சிகள் சிறப்பு.

நான்காவது படம்" ரீஜ ஒனியன்". ராஜீவ் மேனன் இயக்கியிருக்கிறார். உந்துருளியில் வரும் பெண்ணின் வண்டி பழுதடைந்து போகிறது. இதனால் அருகில் உள்ள நண்பனின் வீட்டுக்கு வருகிறாள் அவள். எதிர்பாராமல் லொக்டவுண் - ஊரடங்கு அமுலாகிறது. வெளியே செல்ல முடியாத நிலையில் அவனுடன் தங்க வேண்டியேற்படுகிறது அவளுக்கு. இதே வேளை அவளுக்குப் போதைப்பழக்கம் உள்ளது. இதையெல்லாம் எப்படி எதிர்கொள்ள வேண்டியேற்படுகிறது என்பதே இந்தப்படத்தின் கதை. இதில் ஆண்ட்ரியாவும் லீலா சாம்சனும் நடித்திருக்கிறார்கள்.



ஐந்தாவது படம் கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய மிராக்கிள் (Miracle). கொரோனாச் சூழலில் பணப்பிரச்சினையால் தடைப்பட்டு விடுகிறது இயக்குநர் ஒருவரின் படமொன்று. இதே வேளை ஒரு காரில் நிறையப் பணம் பதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. அதை வேறு ஆட்கள் பார்த்து விடுகிறார்கள். உண்மையில் அங்கே பணம் இருந்ததா? அந்தப் பணத்தை யார் எடுப்பது? என்று செல்லும் கதை, ஐந்து படங்களும் வெவ்வேறு கோணங்களை உடையவை என்றாலும் லொக்டவுண் வாழ்க்கை - அந்த நிகழ்வுகள் என்ற ஒரே புள்ளியில் மையங் கொண்டவை. இதில் முன் சொல்லப்பட்டுள்ள நான்கு படங்களும் மேல் மத்தியதர வர்க்கத்தின் வாழ்க்கைச் சாயல்களுடையவை. ஐந்தாவது படம், சாதாரண நிலையினரின் வாழ்க்கைக்கு நெருக்கமானது.

வேறுபட்டதொரு சினிமா அனுபவத்தை இந்தப்படங்கள் தந்தாலும் இது சினிமா வுக்குப் புதிதல்ல. பிற மொழிகளில் இந்த மாதிரியான முயற்சிகள் ஏற்கனவே நடந்துள்ளன. தமிழில் இது கொஞ்சம் புதிது அவ்வளவு தான். ஆனால், இதற்கு நிகராக இன்று ஏராளம் குறும்படங்கள் தரமாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றில் பிரபலங்களின் பங்கேற்பில்லை என்பதே பொதுப் பார்வையாளர் மத்தியில் உள்ள குறை. மற்றப்படி அதிசயங்கள் எங்குமுண்டு. ■

# முரண்

எஸ்.அஜந்தன்

உழைப்பவன் ஊதியம்
உருக்கிக் கொடுப்பார்
ஊரெல்லாம் கொடையாளி
பெயர் வாங்கி வருவார்

காப்பார் கடவுளென்பார்
கடவுளை காத்திட
புட்டிவைத்து
புட்டைக் காவல் வைப்பார்

கல்வி கல் இல்லை
வெற்று கல் நீ என்பார்
கற்றவை பற்ற வைத்தால்
கலகமென்று கதறி நிற்பர்


பெற்றிட பெண்
வேண்டாம் என்பார் - பின்
கட்டிட பெண் தேடி
அலைவார்

ஓடி ஓடி தேடி
சேர்த்து வைப்பார் -பின்
சேர்த்ததை எல்லாம்
பிரித்து பிரித்து
எழுதிவைப்பார்

பெண்மையென்பார்
பெருமையென்பார்
மேடையேறி வாய்கிளிய
விளம்பரம் செய்து நிப்பார்
வீடு சேர்ந்ததும் அயல் வீட்டு
சிறுமியை பார்த்து காமுறுவர்

உண்மை, வாய்மை என்பார்
பொய்களை ஏற்று நிற்பார்
பொய்மை துகிலுரித்து
உண்மைக்கு வெளச்சமிட்டால்
விந்தை மனிதனென்று
விலக்கி வைப்பர்

முரண் மிக்க மானிடனே
புறம் விலக்கி
சுயம் விளங்கி - சிந்தித்து
செயல் செய்தல் நலமே
வருங்காலம் வரும்போது
வளம்மிக்க மனிதம் மிகுமே



சஞ்சீவி
01 நவம்பர் 2020

அண்மையில் குடத்தனைப் பகுதியில், நீர்க்குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் தூக்கில் தொங்கி உயிர் மாய்த்திருந்தார். அதைப் பற்றி எமது புலனாய்வு அணி திரட்டிய, வாசகர்களுக்கு தெரியாத பல தகவல்களை இங்கே தருகின்றோம்.



# உயிர் குடித்த கயிறு

## தடயத்தை தேடி...

○ உளவாளி

**23.10.2020.**
குடத்தனை மேற்குப் பகுதி ஆரவாரம் இல்லாமல் விடிந்துகொண்டிருந்தது. உடல் அசதியில் அவர் அன்றைக்கு அதிக நேரம் உறங்கிவிட்டார். திடீரென விழித்தவர் நேரம் போய்விட்டதை உணர்ந்து, அவசர அவசரமாக தன் ஆடுகளை மேய்ச்சலுக்கு விட ஆயத்தமாகிக் கொண்டே, பற்களைத் துலக்கத் தொடங்கினார். அப்படியே முற்றத்தில் நின்றபடி வெளிப்பகுதியை வழக்கம் போல நோட்டமிட்டுக் கொண்டிருந்தவரின் கண்ணில், எதிரே புதிதாகக் கட்டப்பட்டு வரும் நீர்த்தாங்கியில் தென்பட்ட உரு வம் உற்றுப்பார்க்க வைத்தது.
"இந்த விடிய வெள்ளனவே வேலை செய்யத் துடங்கிட்டாங்கள் போல" என்று எண்ணிக்கொண்டவராக , கண்ணைக் கசக்கி, பார்வையை இன்னும் கூர்மையாக்கினார். அப்போதுதான் அந்த உருவம் ஒரு கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பது புலப்பட்டது. அவருக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. சர்வநிச்சயமாக யாரோ ஒருவர் அந்த நீர்த் தாங்கியில் கயிற்றில் தொங்கி உயிர்மாய்க்க முயல்வது அவருக்குப் புரிந்தது. அதுவும் அந்த நீர்த்தாங்கியில் குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்ட சிவாகரன் தான் அப்படித் தொங்கிக் கொண்டிருப்பதை ஊகித்தவர், உடனேயே அயலவர்களை அழைத்துக்கொண்டு நீர்த் தாங்கி அமைக்கும் பணி இடம்பெற்றுக் கொண்டிருந்த வீட்டுக்கு பதறியடித்துக்கொண்டு ஓடினார். அந்த வீட்டில் நீர்த்தாங்கியில் தொங்கிக் கொண்டிருந்தவரின் இளைய மகனும் தங்கியிருந்தான். தூங்கிக் கொண்டிருந்த அவனுக்கு விடயத்தைச் சொல்ல, உடனேயே ஏணியில் ஏறி, கயிற்றை வெட்டி,நீர்த் தாங்கியில் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த சிவாகரனின் உடல் கீழே இறக்கப்பட்டது.
சிவாகரனின் இளைய மகனுக்கு என்ன செய்வது, ஏது செய்வதென தெரியாத நிலை. " அப்பா... அப்பா'' எனக் கண்ணீரோடு மறுபடி மறுபடி அழைத்துப் பார்த்தான் .பதிலில்லை.கழுத்தில் இறுகிய கயிற்றுச் சுருக்கை மெதுவாக நீக்கிவிட்டு தண்ணீர் தெளித்து கழுத்தைத் தடவி ஏதேதோ முயற்சியெல்லாம் செய்தான். எதுவும் பயனில்லை.

**ஆமை வேக 'அவசர' அம்புலன்ஸ்**
அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்தார்கள். ஆனால் மறுமுனையில் "பொலிஸுக்கு சொல்லுங்கோ... அவை சொன்னா வாறன்.." என்று கூறிவிட்டு தொடர்பை துண்டித்தார் அம்புலன்ஸுக்குப் பொறுப்பான நபர். நீண்டநேரமாகப் பலர் அறிவித்த பின்னர், கிட்டத்தட்ட சிவாகரனின் உடல் கீழிறக்கப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னரே அங்கு வந்து சேர்ந்தது 'அவசர' அம்புலன்ஸ். அம்புலன்ஸில் வந்தவர்கள், தூக்கில் தொங்கியவரின் கைகளைப் பிடித்து பரிசோதித்து விட்டு, உதட்டைப் பிதுக்கினர். "ஆள் உயிரோடில்லை. இனி பொலிஸ் வந்து பார்த்துச் சொன்னால் தான் 'பொடியை' எடுக்கலாம்" என்று கூறி, அவர்கள் போய்விட்டார்கள்.

**சாவில் சந்தேகம்?**
அதற்கிடையில் தந்தை இறந்த செய்தியை மகன் தொலைபேசியில் சங்கரத்தையில் உள்ள தன் வீட்டுக்குச் சொல்ல, அவர்களும் அலறிப் பதைத்தபடி ஓடி வந்தார்கள். அவர்களின் ஓலத்தால் குடத்தனை அதிர்ந்தது. பின்னர் பொலிஸ் நிலையத்துக்குப் போய் அவர்கள் முறைப்பாடு செய்ய, காலை பத்து மணியளவில் பொலிஸார் வந்து சேர்ந்தனர். வழக்கமான நடைமுறை விசாரணைகள் நடைபெற்ற போது "இந்த மரணத்தில் எங்களுக்கு சந்தேகம்" என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டார்கள் இறந்தவரின் உறவினர்கள்.அதன் பின்னர் சடலம் உடல் கூற்று ஆய்வுக்காக மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

23 ஆம் திகதி மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட சடலம் 25 ஆம் திகதியே உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. உடனேயே இறுதிக் கிரியைகளைச் செய்யுங்கள் என வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவுறுத்தப் பட்டதால் அன்றைய தினமே சடலம் தகனம் செய்யப்பட்டது.
இப்படி ஒரு தவறான முடிவெடுத்து உயிரிழந்த சிவாகரன் யார்? ஏன் இந்த முடிவை எடுத்தார்? அல்லது உறவினர்கள் சொல்வது போல அவரின் சாவில் மர்மம் ஏதும் உண்டா? என்றெல்லாம் உங்களுக்குச் சில கேள்விகள் எழலாம். அதற்கான விடைகளைத் தேடியே நாமும் தீவிர முயற்சியின் பின் சில விடயங்களை உங்களுக்கு தர முனைகின்றோம்.

**உயிர்மாய்த்தவர் பற்றி...**
மதவடி லேன், கட்டுடை மானிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்டவர் தான் 47 வயதான அர்ச்சுனன் சிவாகரன். 10ஆம் ஆண்டுவரை மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையில் கல்விகற்றார். குடும்ப சூழ்நிலையால் கல்வியை இடைநிறுத்தி கூலி வேலைக்குப் போகத்தொடங்கினார். 1995 ஆம் ஆண்டு துணைவி சங்கரத்தையை சேர்ந்த பெண்ணொருவரைத் திருமணம் முடித்தார். ஆனால் விதி விளையாடியது. திருமணம் முடித்த சில மாதங்களில் அவரின் மனைவி கிணற்றில் தவறிவிழுந்து அவர் உயிரிழந்துவிட்டார். பின்னர் முதல் மனைவி யின் தங்கையை 1996 ம் ஆண்டு இரண்டாவதாகத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமண வாழ்வில் நான்கு ஆண்பிள்ளைகளுக்குத் தந்தையானார். நல்ல வேலையாள் என்ற பெயர் சிவாகரனுக்கு.பல ஒப்பந்தகாரர்களோடு அறிமுகம் இருப்பதாலும் ,வேலைக்குச் சளைக்காதவன் என்ற பெயர் இருப்பதாலும் ஒப்பந்தக்காரர்களால் அதிகம் விரும்பப்படும் தொழிலாளியாக மாறினார்.

**குடத்தனையில் வேலை**
ஆனால் கொரோனா அவர் உழைப்பில் ஒரு தடையாக மாறியது. வவுனியாவில் தங்கி நின்று வேலை செய்வதை நிறுத்தி விட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஒப்பந்தகாரர் ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்தார். வடமராட்சி குடத்தனை பகுதியில் தண்ணீர் தாங்கி அமைக்கும் வேலையை அந்த ஒப்பந்தகாரர் பொறுப்பெடுத்திருந்தார். அந்தப் பணியில் சிவாகரன் இணைக்கப்பட்டார்.
குடத்தனைப் பகுதி மக்களுக்கான கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுவரும் அந்த நீர்த் தாங்கியிலிருந்து வீடுகளுக்கு நீரை விநியோகிக்கும் 'பைப் லைனிங்' வேலையை தொழில்நுட்ப உத்தியோகத்தரது ஆலோசனைகளின்படி செய்யத் தொடங்கினார் சிவாகரன். தனியாளாக, அந்தக் கடினமான நிலத்தை வெட்டி 'பைப் லைனிங்' வேலையைச் செய்வதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆனாலும் குடும்பக்கஷ்டமும் தொடர்ந்து கடின வேலைகள் செய்த அனுபவமும் இந்தக் கடினமான வேலையைத் தனியாளாக செய்ய சிவாகரனுக்கு உறுதுணையாக இருந்தது. ஆனாலும் வேலையை விரைவாக முடிக்க வேண்டிய நிலை. இதனால் தனது இரண்டாவது மகனையும் சிவாகரன் தன்னோடு வேலைக்கு இணைத்துக் கொண்டார். காலையில் இருந்து மாலைவரை ஓயாத வேலை. அதன் பின்னர் ஒப்பந்தகாரர்களால் தங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட வீட்டில் இரவுணவின் பின் நித்திரை. இப்படித்தான் அவரது நாட்கள் ஒரேவட்டத்தில் நகர்ந்துகொண்டிருந்தன. சம்பளம் கிடைத்தால் மட்டும், சங்கரத்தையில் உள்ள தன்னுடைய வீட்டுக்குப் போய், குடும்பத்தோடு இரண்டு, மூன்று நாட்கள் தங்கிவிட்டு வருவார். வந்தால் பழையபடி, வேலை; வேலை. அவர் மீதிருந்த நம்பிக்கையில் , இவர்கள் தங்கியிருந்த வீட்டில் தான் , நீர்க்குழாய் பொருத்தும் பணிக்கான பொருட்கள், உபகரணங்கள் என்பவை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

**வீட்டுக்குப் பயணம்**
அப்படித்தான் கடந்த மாதம் 18 ஆம் திகதி (18.10.2020) வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானார். ஏனெனில் அன்றைக்கு அவரது மூன்றாவது மகனுக்கு பிறந்தநாள். அதற்குக் கட்டாயம் போக வேண்டும் என்று முதலே முடிவெடுத்திருந்தார். முதலில் தன்னுடைய இளைய மகனை பஸ்ஸில் ஊருக்கு அனுப்பி வைத்தார்.
இவர்களோடு சங்கரத்தையைச் சேர்ந்த இன்னொருவரும் வேலை செய்வதற்காக தங்கி நின்று வேலை செய்துகொண்டிருந்தார். அவர் ஒருவழியில் சிவாகரனின் உறவினரும் கூட. அவருடன் மோட்டார் சைக்கிளில் ஒப்பந்தகாரரின் வீட்டுக்குப் போய், தன்னுடையதும் மகனதும் சம்பளப் பணத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டார். அப்போது சிவாகரனின் கையில் இருந்த உரபாக்கை பார்த்த ஒப்பந்தகாரர் "என்ன உரபாக்கில ?" எனக் கேட்டுள்ளார்.
"மலிவாத் தேங்காய் வாங்கினான். வீட்டை கொண்டு போறன் " என்று பதிலளித்துவிட்டு சிவாகரன் சங்கரத்தைக்குப் போய்விட்டார். 5 நாட்கள் குடும்பத்தோடு இருந்துவிட்டு, 22 ஆம் திகதி மகனுடன், மருமகன் முறையான இன்னொரு பெடியனையும் கூட்டிக்கொண்டு பஸ்ஸில் மீண்டும் குடத்தனைக்கு வந்து சேர்ந்தார். ஆனால் அன்றைய நாள் தனது தலைவிதியைத் தீர்மானிக்கும் நாளாக இருக்கும் என்பதை அப்போது அவர் உணர்ந்திருக்கவில்லை.



இண்டைக்கு விசாரணைக்கு போக வேணும்.. என்னில சந்தேகப்படுறாங்கள். ஆனால் நான் எடுக்கேல்லை. ஆனால் எனக்கு 2 பேரில 'டவுட்' இருக்கு எனச் சொல்லிவிட்டு, போனை வைத்துவிட்டார். அதுதான் அவர் இறுதியாகச் சொன்ன வார்த்தைகள். அதன் பின்னர் அவர் தூக்கில் தொங்கிய நிலையில், சடலமாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டார்.

### காத்திருந்தது அதிர்ச்சி

பஸ்ஸில் இருந்து இறங்கி தாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தவர்களுக்கு காத்திருந்தது அதிர்ச்சி.

வீட்டின் பின்கதவு திறந்தபடியிருந்தது. யாரோ உள்நுழைந்த தடயங்கள் அப்பட்டமாகத் தெரிய, ஏதோ நடக்கக் கூடாத ஒன்று நடந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டோம்.

உடனேயே தொழினுட்ப உத்தியோகத்தரை அப்பா தொலைபேசியில் தொடர்பு கொண்டு,

"நாங்கள் இருக்கிற வீட்டின்ரை பின்பக்கக் கதவு திறந்து கிடக்கு. ஆரோ உள்ளுக்குள் வந்திருக்கினம் . ஸ்ரோர் திறப்பும் வச்ச இடத்தில இல்லாமல் வேற இடத்தில கிடக்கு" என்று தகவல் தெரிவித்ததாகக் கூறுகிறார் சிவாகரனது இளைய மகன். சிறிது நேரத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் அங்கு வந்து சேர்ந்தார். வீட்டில் இருந்த களஞ்சிய அறைக்குள் போய்ப் பார்த்தனர். அங்கேயிருந்த , நீர் வழங்கலின்போது பயன்படுத்தப்படும் பித்தளையாலான, சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் காணாமல் போயிருந்தன. அந்தப் பொருள்களை வெளியால் கொள்வனவோ, விற்பனையோ செய்ய முடியாது. ஏனெனில் எல்லாவற்றிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும். அவற்றை உருக்கி, விற்பனை செய்பவர்களுக்கு மட்டுமே விற்க முடியும்.

### நீங்களே பொறுப்பு

களஞ்சிய அறை உட்பட தங்குமிட வீட்டின் திறப்புகள் சிவாகரனிடமே இருந்துள்ளன.

"உங்கடை பொறுப்பில் தானே திறப்புகளும், பொருள்களும் இருந்தன. நீங்கள் தான் இதுக்கு பொறுப்பெடுக்க வேணும்" என தொழில்நுட்ப உத்தியோகத்தர் கடுமையாகச் சொன்னார்.

" இது நான் வீட்டை போய் நிண்ட நேரம், ஆரோ வந்து எடுத்திருக்கினம்" என சிவாகரன் விளக்கமளிக்க முற்பட்டார். எனினும் குறித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரால் இந்த விடயம், ஒப்பந்தகாரருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவரின் ஆலோசனையின் படி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பொருள்கள் களவாடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

" யார் பொறுப்பாக இருந்தாரோ அவரையும் விசாரிக்க வேண்டும். அழைத்து வாருங்கள்" எனப் பொலிஸார் சொல்ல, அன்று மாலை மூன்றரை மணியளவில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் சிவாகரனையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்றார். அங்கே சிவாகரனைக் கொஞ்சம் 'கடுமையாக' விசாரணை செய்த பொலிஸார், பெரும் குற்றப் பிரிவுக்கு விசாரணையை மாற்றினர்.

"பொருட்கள் இருந்த அறை ,வீட்டுத் திறப்புகள் உங்களிடமே இருந்துள்ளன. கதவொன்றும் உடைக்கப்படவுமில்லை. ஆகவே முதலில் உங்களோடு வேலை செய்பவர்கள், வந்து செல்பவர்களிடம் விசாரித்துவிட்டு நாளை காலை வாருங்கள்" என அறிவுறுத்தி இருவரையும் பொலிஸார் அனுப்பிவைத்துள்ளனர். மாலை ஆறு ம்ணியளவில் சிவாகரனை தங்குமிடத்தில்( குடத்தனை வீட்டில் ) இறக்கிவிட்டு ,தொழில் நுட்ப உத்தியோகத்தர் தன் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

### கடைசி வார்த்தைகள்

வீட்டுக்கு வந்த பின்னர் முதல் வேலையாக தனக்கு நெருங்கிய ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார் சிவாகரன். அந்த நெருங்கிய நபர் வேறு யாருமல்லர், சிவாகரனை வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் நான்கு நாட்களுக்கு முன்னர் அழைத்துச் சென்றிருந்தவர் தான் அவர்.அவருக்கு வீட்டில் இருந்த பொருட்கள் களவாடப்பட்ட விடயத்தைச் சிவாகரன் சொல்லியிருக்கிறார்.

" என்னிலை சந்தேகப்படுகின்றார்கள்.. பொலிஸ் அடிச்சு விசாரிச்சது... நாளைக்கு ஒன்பது மணிக்கு விசாரணைக்கு வரட்டாம்" என்று மனச்சோர்வோடு கூறிவிட்டு வைத்து விட்டார்.( ஆயினும் சிவாகரனை அடிக்கவேயில்லை என பொலிஸாரும், அவரை விசாரணை செய்தபோது பக்கத்தில் இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அழுத்தமாகச் சொல்கிறார்கள்)

பின்னர் இறுதியாக 23.10.2020 அதிகாலை 4.19 மணிக்கு சிவாகரன் அந்த நபருக்குக் கோல் எடுத்துள்ளார். ஆனால் நித்திரைக் கலக்கத்தில் அந்த நபர் எழும்ப முன்னர்,அது 'கட்' ஆகிவிட்டது. உடனேயே அவர் திரும்ப சிவாகரனுக்கு கோல் எடுத்தார்.

"இண்டைக்கு விசாரணைக்கு போக வேணும்.. என்னில சந்தேகப்படுறாங்கள். ஆனால் நான் எடுக்கேல்லை. ஆனால் எனக்கு 2 பேரில 'டவுட்' இருக்கு" எனச் சொல்லிவிட்டு, போனை வைத்துவிட்டார். அதுதான் அவர் இறுதியாகச் சொன்ன வார்த்தைகள். அதன் பின்னர் அவர் தூக்கில் தொங்கிய நிலையில், சடலமாகத் தான் கண்டுபிடிக்கப்பட்டார்.

### "எப்படியும் உண்மையை அறிவேன்"

இந்தச் சம்பவம் பற்றி , சிவாகரன் கடைசியாகப் பணிபுரிந்த ஒப்பந்தகாரர் இப்படிக் கூறுகின்றார்.

" களவு போன பொருட்களை வெளியில் வாங்கவே முடியாது. அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும். அது களவு போனதால் நிர்வாக ரீதியாக எனக்குத் தான் பெரும் பிரச்சினை. அதனால் தான் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சொன்னேன். களஞ்சிய அறை சிவாகரனின் பொறுப்பில் தான் இருந்தது. அவரிடம் தான் திறப்புகளும் இருந்தன. அவர் சொன்னது போல, கதவோ..பூட்டோ உடைக்கப்படவில்லை. அதனால் தான் பொலிஸார் வேலை ஆட்கள் மற்றும் வந்து செல்பவர்களையும் கேட்டுவிட்டு மறுநாள் அனைவரையும் வருமாறு கூறினர். இவரை (சிவாகரனை) மட்டும் வரச் சொல்லவில்லை. மறுநாள் விசாரணைக்கு நானும் செல்வதாகத்தான் இருந்தேன்.. தவறு செய்யாதவிடத்து பொலிஸ் விசாரணையை எதிர்கொண்டிருக்கலாம். தவறு செய்திருந்தால் என்னிடம் சொல்லியிருக்கலாம். பல வேலைத்தளங்களில் ஆட்களை வைத்து வேலை செய்கிறேன். தவறு செய்த பலரை மன்னித்து பேசாமல் விட்டுள்ளேன். களவு செய்து பொலிஸ் தடுப்பில் இருந்தவர்களைக் கூடப் பிணையில் எடுத்திருக்கிறேன்.அவர் ஏன் இவ்வாறு முடிவெடுத்தார் என தெரியவில்லை.

மிகத் திறமையான கடின உழைப்பாளி. மேற்பார்வையாளர்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தன்னுடைய வேலையை எந்தத் தொய்வும் இல்லாமல் செய்பவர். என்னுடன் எத்தனையோ பேர் வேலை செய்திருக்கிறார்கள். இப்போதும் செய்கிறார்கள். இவரைப் போன்ற ஒரு நல்ல வேலையாளை நான் பார்த்ததில்லை. எனக்கு மிகவும் நம்பிக்கையானவராக இருந்தார். அவருடைய இழப்பு எனக்கு பேரிழப்பே. ஒரு உயிர் அநியாயமாக இழக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி உண்மையை கண்டறியாமல் விடமாட்டேன்"



### சில குறிப்புகள்:

1. இதற்கு முன்னரும் நீர்க்குழாய் பொருத்தும் வேலை செய்துவிட்டு வீதிக் கரையோரமாக வைத்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் ஒன்று காணாமல் போயுள்ளது. அதைத் திருடியவரும் இன்னும் பிடிபடவில்லை.
2. இப்போது சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவு போயுள்ளன. பல லட்சங்கள் பெறுமதியான பொருட்களை வைத்திருக்கும் இடமொன்றுக்கு ஒரு காவலாளியை நியமித்திருக்க வேண்டும். சரி , செலவைக் கட்டுப்படுத்த வேலை செய்பவர்களின் பொறுப்பில் அதை விட்டிருக்கலாம். ஆனால் அவர்களும் வீட்டை விட்டு விடுமுறையில் செல்லும் போது அதற்கு பாதுகாப்புக்கு ஒரு தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா? ஒரு காவலாளி நியமிக்கப்பட்டிருந்தால் , இப்படிக் களவும் நடந்திருக்காது. ஒரு உயிர் அநியாயமாகப் போயுமிருக்காது.
3. சிவாகரன் உள்ளிட்ட வீட்டில் தங்கியிருந்த அனைவரும் அங்கிருந்து சென்று நான்கு நாட்களின்பின்னரே மீண்டும் வந்துள்ளனர். அப்போதேகதவு திறந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்த இடைப்பட்ட நாளில் களவு போயிருந்தால், பின்பக்கக் கதவு திறந்திருந்ததை அயலில் உள்ள எவரும் காணவில்லையா? அல்லது கதவு திறந்திருந்தது என்பது பொய்யா?
4. சாவில் சந்தேகம் என்று உறவினர்கள் தெரிவித்தபோதும், உடற்கூற்றுப் பரிசோதனையில் தற்கொலை என்றே உறுதி செய்யப்பட்டுள்ளது. கயிறு கழுத்தை இறுக்கியதால் ஏற்பட்ட மூச்சுத்திணறலே சாவுக்கு காரணம் எனவும், அதைத்தவிர வேறெந்தக் காயங்களும் உடலில் இல்லை எனவும் அதில் சொல்லப்பட்டுள்ளது.
5. பொலிஸார் சிவாகரனுக்கு அடிக்கவில்லை என தொழில் நுட்ப உத்தியோகத்தரும் , பொலிஸாரும் சொல்லியிருந்தனர். ஆனால் இறுதியாக சிவாகரன் தனக்கு நெருக்கமான நபருக்கு போன் செய்தபோது " பொலிஸ் அடிச்சவங்கள் என்று சொல்லியிருக்கிறார். இதில் எது உண்மை



## யார் உதவுவார்?

சிவாகரனின் குடும்பம் இப்போது அந்த வீட்டின் பொருளாதாரத்தை தாங்கி நின்ற தலைவனை இழந்திருக்கிறது. சிவாகரன் கடுமையான உழைப்பாளியாக இருந்தபோதும், பொருளாதார ரீதியில் அவரது குடும்பம் இன்னமும் அடிமட்ட நிலையிலேயே உள்ளது. இதற்கு அவர்களின் வீட்டின் கோலமே சாட்சி. அவர்கள் தங்கியிருக்கும் காணி அவர்களுக்குச் சொந்தமில்லாததால், வீட்டுத்திட்டமும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனவே தங்களுக்கு குடியிருக்க வீடு ஒன்றை அமைப்பதற்கான உதவிகளை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

" அப்பா இருந்தால் அவர் உழைச்சுக் கட்டுவார் எண்டு இருந்தம். இப்ப அவர் இப்படிச் செய்திட்டார். இனி எங்களுக்கு இந்தக் கொட்டில்தான் காலம் முழுக்கத் தஞ்சம் போல. ஆரும் உதவி செய்யமாட்டினமா எண்டு காத்திருக்கிறம்" என்கிறார்கள் சிவாகரனின் பிள்ளைகள். யாரேனும் பரோபகாரிகளுக்கு இவர்களின் குரல் கேட்குமா? உதவிகள் கிடைக்குமா?



புதிர்
19




# புதிர்மலை மர்மங்கள்

○ மாயன்

புதிர்மலையின் மன்னன் தீபவர்மன். மற்றைய நாடுகளை விடவும் புதிர்மலைக்கு தனித்துவமான ஒரு இயல்பு இருந்தது. ஆம், அந்த நாடு புதிர்களால் நிறைந்தது. எந்தப் பொருளுக்கும் விலை புதிர் மட்டுமே. எதையாவது வாங்க வேண்டுமென்றால், அதை விற்பவர் சொல்லும் புதிருக்கு வாங்குபவர் சரியாகப் பதில் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால் அவருக்கு அந்தப் பொருள் விற்கப்படமாட்டாது. அதேபோன்று திருமணத்தின் போதும் மணமகள் கேட்கும் புதிருக்கு சரியான விடையைச் சொல்பவனே அவளை மணம் செய்ய முடியும். இப்படி எல்லாவற்றையும் புதிர்களே தீர்மானித்தன. இதனால் புதிர்மலையின் மன்னனில் இருந்து சாதாரண மக்கள்வரை நுண்ணறிவு கொண்டவர்களாக விளங்கினர்.

வெளியிடங்களுக்குப் போகாமல், தங்கள் நாட்டைச் சுற்றிலும் புதிர்களால் நிறைந்த குகைகளையும், மலைகளையும் ஒருங்கிணைத்து கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்புச் சுவர்களை புதிர்மலை மக்கள் அமைத்தனர். அந்தப் பாதுகாப்புச் சுவர்களைத் தாண்ட வேண்டுமானால் அதிசிக்கலான புதிர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அவற்றுக்கு தவறான விடையைச் சொன்னவர்கள், ஆடு, மாடு போன்ற விலங்குகளாக மாறி புதிர்மலை மக்களுக்கு சேவகம் செய்யவேண்டியதுதான். அதனால் தாம் ஆடு, மாடாக மாறிவிடக்கூடாது என்பதற்காக புதிர்மலை மீது பிறதேச அரசர்கள் படையெடுக்கத் தயங்கினர். இப்படிப்பட்ட நாட்டை ஆள்வதென்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. ஆனால் தீபவர்மன் கல்வி, கேள்விகளில் சிறந்தவன் என்பதால் புதிர்மலையை எந்தக் குறையுமில்லாமல் நிர்வகித்து வந்தான்.

அப்படியிருக்கையில் ஒருநாள் தீபவர்மனைக் காண, ஒரு முனிவர் வந்தார். அவரை அன்போடு வரவேற்று, உபசரித்து, அளவளாவினான் தீபவர்மன். மன்னனின் உபசரிப்பால் மகிழ்ந்த முனிவர் "மன்னவா, உன் நல்ல மனது கண்டு மகிழ்ந்தேன். அதனால் உனக்கு ஒரு இரகசியத்தைச் சொல்ல முடிவு செய்துள்ளேன்" என்றார். "அப்படியா தவமுனிவரே. நல்லது. தாங்கள் சொல்ல நினைக்கும் இரகசியம்என்னவோ?" என்று வினவினான்.

" மன்னா! இந்தப் புதிர்மலையின் மன்னனாக இருக்கும் உனக்கு இன்னமும் வாரிசு இல்லையென்ற கவலை உண்டல்லவா? அதைத் தீர்க்கும் இரகசியத்தையே உனக்குச் சொல்லப்போகிறேன்" என்று முனிவர் சொன்னதும் தீபவர்மனின் கண்கள் பிரகாசமடைந்தன.

" ஆஹா, எப்பேர்ப்பட்ட வரம். மகரிஷியே, நான் கேட்பதற்கு ஆவலாயுள்ளேன்" என்று பரபரத்தான் மன்னன். முனிவர் சொல்லத் தொடங்கினார்.

" மன்னா, புதிர்மலையில் இருந்து எழு கடல், ஏழு மலை தாண்டிப் போனால் அற்புதத்தீவு என்ற ஒரு தீவை அடையலாம். அங்கு ஒரு அதிசயத் தேன்பொந்து ஒன்றுள்ளது. அதிலிருக்கும் தேன் துளியை மகாராணிக்கு நீ பருகக் கொடுத்தால், அவர் கருத்தரித்து உனக்கு வாரிசைப் பெற்றுக் கொடுப்பார்" என்று முனிவர் இரகசியத்தைச் சொன்னதோடு, அற்புதத் தீவுக்குச் செல்லும் வழியையும் மன்னனுக்குச் சொன்னார்.

" ஆனால் அதில் ஒரு சிக்கல் உள்ளது தீபவர்மா. அற்புதத் தீவுக்கு நீ மட்டும் தான் செல்ல வேண்டும். வேறு யாரையும் அழைத்துச் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் அற்புதத் தீவு உன் கண்ணுக்குப் புலப்படாது" என்ற நிபந்தனையையும் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் முனிவர். அவர் சென்றதும் அற்புதத்தீவுக்குச் செல்ல மன்னன் முடிவெடுத்தான். மகாராணியிடம் தான் திரும்பி வரும்வரை ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அற்புதத்தீவை நோக்கி, ஒரு நள்ளிரவில் குதிரையில் ஏறிப் புறப்பட்டான். பலமணி நேரத்தின் பின்னர் அவன் ஒரு கடற்கரையை அடைந்தான். குதிரையைக் கரையில் விட்டு, அங்கு நின்ற ஒரு படகொன்றில் தனியாக அற்புதத்தீவை நோக்கிப் பயணமானன். அவன் நடுக்கடலை அடைவதற்குள் ஆபத்தொன்று அவனை அண்மித்தது.

(புதிர்கள் தொடரும்)



# மாறாது சி.எஸ்.கே

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இளையவர்களைப் புகுத்த வேண்டும் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், பெரிய மாற்றங்கள் இல்லாமல்தான் அந்த அணி அடுத்த வருடமும் ஐ.பி.எல் தொடரை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற செய்தி வந்திருக்கிறது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் பெரும்பாலானவை கைவிடப்பட்டுள்ளன. இதனால் மெகா ஏலத்தை நடத்துவதற்கு மும்பை, ஹைதராபாத் போன்ற அணிகள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன என்று தெரியவருகின்றது. சென்னை, ராஜஸ்தான் அணிகள் மெகா ஏலத்தை நடத்த எத்தனிக்கின்றபோதிலும் சட்டச் சிக்கல்களால் 2021ஆம் ஆண்டுக்காக சிறியதொரு ஏலமே நடத்தப்படும் என்று கருதப்படுகின்றது.

சுமார் 15 முதல் 20 கோடி ரூபா தொகைக்கு ஏற்ப வீரர்களை விடுவித்துவிட்டு அந்தத் தொகைக்கு மூன்று அல்லது நான்கு வீரர்களை பிரதியீடு செய்யும் முறையே பின்பற்றப்பட வேண்டிவரலாம். இது நடைமுறைப்படுத்தப்பட்டால் அணியின் முகத்தையே மாற்றத்துடிக்கும் சென்னைக்கு அது தடையாக அமையும். அவ்வாறு மூன்று வீரர்களை விடுவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் சென்னை சுப்பர் கிங்ஸ் வற்சன், கேதர் யாதவ், சாவ்லா ஆகியோரை விடுவிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. அதே அணி; அதே தோல்வி என்றவாறாக இல்லாவிட்டால் சரிதான்.



# காத்திருக்கும் ரசிகர்கள்

காl்பந்தாட்டம் என்றாலே மெஸ்ஸியும் ரொனால்டோவும்தான். இவர்கள் இருவரும் களத்தில் நேருக்குநேர் சந்திப்பதென்பது எப்போதாவது நடைபெறும் .அன்று கால்பந்தாட்ட உலகின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும் அந்த ஆட்டத்தின் மீது குவிந்துவிடும். அப்படியானதொரு வாய்ப்பு கடந்த வியாழக்கிழமை நடைபெறவிருந்தது. ஆனால் இறுதியில் ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கடந்த வியாழக்கிழமை யுவென்டஸ், பார்சிலோனா கழகங்கள் பலப்பரீட்சை நடத்தின. பார்சிலோனா அணியின் தலைவராக மெஸ்ஸி உள்ளார். யுவென்டஸ் அணியின் நட்சத்திர வீரராக ரொனால்டோ உள்ளார். ரொனால்டோவுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கடந்த சில நாள்களின் முன்னர் உறுதிப்படுத்தப்பட்டு அவர் இறுக்கமான கண்காணிப்புக்குள் வைக்கப்பட்டுள்ளார். தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. வியாழனன்று பார்சிலோனாவுக்கு எதிராக ரொனால்டோவைக் களமிறக்கி விடவேண்டும் என்பதில் யுவென்டஸ் உறுதியாக இருந்தது. எனினும் கொரோனாத் தொற்று குறைவடையாததை அடுத்து ரொனால்டோ களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டது. இனி மெஸ்ஸியையும் ரொனால்டோவையும் ஒரே மைதானத்தில் ரசிகர்கள் காண்பதற்கு அடுத்த சில மாதங்கள் காத்திருக்க வேண்டியதுதான். காத்திருப்பது காதலில் மட்டுமல்ல கால்பந்திலும் சுகம்தான்.







# தகுதியானவரா சூர்யகுமார்?

சூர்யகுமார் யாதவ் இந்திய அணியில் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் பலரும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்களின் ஆதங்கம் நியாயமானதுதான். பெங்களூருக்கு எதிராக கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் சூரியக்குமாரின் நேர்த்தியான இன்னிங்ஸைப் பார்த்த எவரும் அவ்வாறுதான் எண்ணுவார்கள். ஆனால் ஐ.பி.எல் தொடரின் பெறுபேற்றை வைத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சூர்யகுமார் சேர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை. ஐ.பி.எல் தொடர் நடைபெறுவது ஐக்கிய அரபு இராச்சியத்தில். ஐக்கிய அரபு மைதானங்கள் குறுகியவை. அத்துடன் சுழலுக்கு ஒத்துழைக்கும் தன்மை மிக்கவை. ஆனால் இந்தியா ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான தொடர் நடைபெறப் போவது ஆஸ்திரேலியாவில். 10 மில்லிமீற்றர் புற்கள் உள்ள சிட்னி ஆடுகளத்திலும், ஒரு சென்றிமீட்டர் உடைவுகள் உள்ள பெர்த் ஆடுகளத்திலும் ஸ்ராக்கின் பவுன்சர்களையும், ஹசில்வூட், கம்மின்ஸின் திரும்பல் பந்துவீச்சுக்களையும் சூர்யகுமார் எதிர்கொள்வார் என்று நம்புவது இந்தியக் கிரிக்கெட்டுக்குச் சற்றுக் கடினம்தான். அத்துடன் பெங்களூருக்கு எதிராக சூர்யகுமார் எதிர்கொண்டது சிராஜ், சைனி ஆகியோரின் வேகப்பந்துவீச்சை. அதை எதிர்த்தாடுகின்றார் என்பதற்காக ஆஸ்திரேலியாவில் வைத்து ஸ்ராக், கம்மின்ஸை எதிர்த்தாடுவார் என்று எண்ணுவது முட்டாள்தனமே அன்றி வேறென்ன. ஐ.பி.எல்லை வைத்து சர்வதேச அரங்கை எடைபோட்டுவிடக்கூடாது.